இதழ் 230

# மண்

ஜேர்மனி / 2025

பங்குனி - சித்திரை / Mar - Apr



சர்வதேச மகளிர் தினம் - பங்குனி 8

International Women Day






மண் சஞ்சிகையின் வாசகர் செல்வன் புவனேந்திரன் பானுஸ்கந்தா அவர்களின் பிறந்தநாளுக்கு அவரின் நிதி உதவியில் புதுக்குடியிருப்பு ஒளிரும் இல்லப் பிள்ளைகளுக்கு உணவு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது - 13.01.2025






மண் சஞ்சிகையின் வாசகர் திரு அமல் கிறிஸ்ரி அவர்களின் மருமகளின் நினைவாக அவரின் நிதி உதவியில் துணுக்காயிலுள்ள ஒளிரும் வாழ்வகத்தில் உதவிபெறுவோருக்கு உணவும் உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன - 27.01.2025

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** v.sivarajah@arcor.de



**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

அனைவருக்கும் வணககம்!...

மண் சஞ்சிகையின் 35 வது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 05.04.2025 சனிக்கிழமை யேர்மனி - டியூஸ்பேர்க் நகரில் சிறப்பாக நடைபெறவுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம். எதிர்காலத்திலும் வழமைபோல அனைவரும் ஒத்துழைப்பீர்கள் என்ற ஆதரவோடு எமது சஞ்சிகையின் தமிழ், சமூகப் பணிகள் தொடரும் என நம்புகின்றோம்.

ஆசிரியர் பக்கமாக வழமைபோல நமது தாய்நாட்டுப் பக்கங்களைத்தான் பார்க்க வேண்டும்.. நம்நாட்டில் இந்த வருடம் தேர்தல் ஆண்டாகவே காணப்படுகின்றது. ஜனாதிபதிதேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என முடிந்து அடுத்த தேர்தலாக உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் தொடர்ந்து மாகாணசபைத் தேர்தல் எனத் தொடரப் போகின்றது. இனி என்ன அரசியல் வாதிகளுக்கும் அரசியல் பிழைப்பு நடாத்துபவர்களுக்கும் இனவாதிகள், மதவாதிகளுக்குத் தேர்தல் திருவிழாதான். இந்தத் திருவிழாவில் எத்தனையோ சம்பவங்கள் நிகழப்போகின்றன என ஏப்பரல் மாதத்தில் நடைபெறவிருக்கும் தேர்தல்வரை பொறுத்திருந்துதான் பார்ப்போம்.

நடைபெறவுள்ள தேர்தல் பற்றி அனைத்துக் கட்சிகளும் தாம்தான் வெல்வோம் எனக் கங்கணம் கட்டிக்கொண்டு வெளிக்கிட்டுவிட்டன. இனி என்ன வாக்குறிதிகள், கொடுப்பனவுகள், பணப்பரிமாற்றங்கள், பொருள் பரிமாற்றங்கள், அன்பளிப்புகள், இலஞ்சங்கள் ஒருபுறம் அத்துமீறல்கள் அடவடிகள் என அனைத்தும் களைகட்டும். சிலசமயம் கொலை, கொள்ளை, கடத்தல், வழிப்பறிச் சம்பவங்களும் இடம்பெறலாம்.

புதிய அனுரா அரசு முறையான நடவடிக்கைகளை எடுத்துவந்தாலும் இந்தக் கொடுமைக்காரர்களின் அடாவடிகள் அட்டகாசங்களால் அரசுக்குப் பெரும் தலையிடிதான்இ எப்படி இருப்பினும் தேர்தல் சரிவர ஒழுங்காக நடைபெறும் என்பது திண்ணம்தான். அந்தளவுக்கு புதிய அரசாங்க நிர்வாக கட்டமைப்புகள் திறம்படத்தான் செயற்படும் என்பதில் நம்பிக்கையாகத்தான் மக்கள் இருக்கின்றனர்.

நமது தாய்த்திருநாட்டை மாறி மாறி ஆட்சி செய்த அத்தனை கட்சிகளும் தமது இன, மத, மொழி, பாராம்பரியங்களைப் பாதுகாப்பதே நோக்கமாகக் கொண்டுதான் ஆட்சி செய்து வந்துள்ளன. நாட்டில் காலாதி காலம் வாழும் சிறுபான்மை இனங்களின் நிலம், மொழி, மதம், பாராம்பரியங்களை பாதுகாத்தது என்பது அரிதாகவே இருந்து வந்துள்ளன. இன்னும் மதவாதிகள், இனவாதிகள் சிறுபான்மை இனங்கள் மீது இனவாத மதவாத வன்முறைகளைத் தூண்டி இது பௌத்த நாடு என்றும் இது சிங்களவருக்குரிய நாடு என்றும் தமது நிலைப்பாட்டைக் காலாதிகாலம் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள்.

புதிய அரசான அனுராவின் மக்கள் சக்தி அரசு கடந்த 70 - 75 ஆண்டுகள் ஆட்சிசெய்த அரசுகளைவிடச் சிறந்த அரசாக மக்கள் பார்த்தே புதிய ஜனாதிபதியையும் புதிய அரசையையும் நிறுவினார்கள். மக்களின் அணைக்கு அமைவாக இன்று புதிய அரசு செயற்பட்டுவருவது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். மாற்றத்தை விரும்பி மக்கள் வாக்களித்தபடியால் இன்று பல மாற்றங்களோடு நாடு நல்ல எதிர்காலத்தை நோக்கிச் செல்வதாகவும் கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இதைப் பொறுக்கமுடியாத பழமைவாய்ந்த முதலாளித்துவக் கட்சிகளும், அரசியல் கொள்ளைக்காரர்களும், கொலையாளிகளும், அதிகார துஸ்பிரயோகம் செய்த தலைவர்களும் பிரமுகர்களும் இந்த அரசை விரட்டிவிடவேண்டும் எனக் கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். ஏன் எங்களுடைய பல தமிழ்க் கட்சிகளும் உடனடியாக அனுரா அரசு தமிழர் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும் எனப் பிடிவாதம் பிடிக்கின்றன. இது எந்த விதத்தில் நியாயம் என்பது புரியவில்.

பதவிக்கு வந்து இரண்டு மூன்று மாதங்களுக்குள் யாரால் தீர்க்கமுடியும். அறுபது எழுபது வருடங்களாகப் புரையோடிக்கிடக்கும் அனைத்துப் பிரச்சனைகளையும் எப்படித் தீர்க்க முடியும். பல தமிழ் அரசியல் வாதிகள் தாமும் ஏதோ பேசுகின்றோம் என்றும் தமிழ்மக்களுக்காகக் குரல் கொடுக்கிறோம் என்றும் தமது அரசியல் செல்வாக்கை தக்க வைப்பதற்காகவும் ஏதோ...ஏதோ எல்லாம் பேசுகிறார்கள். இவை ஒன்றுமே நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகவே பார்க்கப்படகின்றன.

இனித் தமிழர் பிரதேசங்களிலும் உள்ளூராட்சித் தேர்தல் களை கட்டப்போகின்றது. இல்லாத பொல்லத பொய்களையும் புரட்டுக்களையும் சொல்லக் கொண்டு அரசியல் கட்சிக்காரர்கள் வரப்போகினம். பலரை ஏமாற்றுவார்கள். பலரை உசுப்பேத்துவார்கள் இனவாம் மதவாதமும் சிலர் பேசுவார்கள், தமிழினம், தேசியம், தமிழ் மண் என்றெல்லாம் பேசி மக்களை ஏமாற்றி பதவிகளைப் பிடித்து சுகபோகங்களை அனுபிக்க அடிபடுவார்கள். ஏன் வயது போன அரசியல் வாதிகளும் கதிரைச் சண்டைக்குக் குறைவிருக்காது.. வான் உயரக் கத்தும் இவர்கள் இளம் சமுதாயத்துக்கும் பெண்களுக்கும் சம அந்தஸ்த்து கொடுப்பார்களா?.. கிடையவே கிடைக்காது. வாக்குப் போட்டு ஏமாறும் மக்கள் இருக்கும்வரை அரசியல் வாதிகள் காலம் காலமாக ஏமாற்றிக்கொண்டெ இருப்பார்கள் இது உண்மை.

ஆகவே..விழிப்புடன் இருந்து எதிர்வரும் தேர்தலில் நேர்மை, கண்ணியம், செயற்திறன் கொண்ட இளையோரையும் பெண்களையும் தெரிவு செய்வதுதான் தமிழ் பேசும் மக்களுக்கு விடிவைக்கொண்டு வரும் இல்லையேல் பழையபடி வேதாளம் முருக்கை மரத்தில் ஏறியகதையாகத்தான் முடியும். சிந்தித்துச் செயற்படுங்கள்!..

**- ஆசிரியர் -**

## 35 வது ஆண்டு நிறைவு விழா 05.04.2025.....

**மண் சஞ்சிகையின் 35 வது ஆண்டு நிறைவுவிழா எதிர்வரும் 05.04.2025 அன்று டியூஸ்பேர்க் நகரில் சிறப்பாக நடைபெறவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். பலவித நிகழ்வுகள் உங்களை மகிழ்விக்கக் காத்திருக்கின்றன...**

**கூடுவோம்!... பாடுவோம்!.. ஆடுவோம்!..!...கூடிமகிழ்வோம்!...**

**சனிக்கிழமை - 05.04.2025 பிற்பகல் 14.30**

Clauberg Halle

Kamp Strass-23 47166-Duisburg - Hamborn

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

### சித்திரம் பேசேல்..

உன் பேச்சுத் திறமையைப் பிறரிடம் காட்ட ஆசை உனக்கு. அதற்காக இல்லாதவைகளை உண்மை போலக் கற்பனை செய்து அழகாகக் கூறுகிறாய். அதைக் கேட்பவர்களும் அது உண்மையோ என்று மயங்கி வியக்கிறார்கள். சித்திர விசித்திரமாகப் பேசி அவர்களை ஏமாற்றியதற்காக நீ மகிழ்ச்சியடையலாம். அது உண்மையான, நிலையான மகிழ்ச்சியா?.. இல்லை நீ பேசியது பொய், கற்பனை என்று அவர்களுக்குத் தெரியும்வரைதான் உன் மகிழ்ச்சி நிலைக்கும். நீ ஏமாற்றுக்காரன் என்பதை அறிந்தால் பிறகு நீ உண்மையே பேசினாலும் அதைப் பொய் என்றேதான் அவர்கள் நினைப்பார்கள். ஆகவே பொய்யை மெய்போல அழகுசெய்து பேசாதே என்கிறார் அவ்வைப்பாட்டி. ( சித்திரம் - பொய்யை மெய் போலக் கூறும் வார்த்தைகள்)

### சீர்மை மறவேல்..

புலவர்களுக்கு வாரி வழங்கிய வள்ளல் குமணன். ஆனால் அவன் தம்பியோ கெட்டவன். தானே அரசனாக விரும்பினான்.. அண்ணன் இதை அறிந்து தம்பியிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு, கானகம் சென்று மறைந்து வாழ்ந்தான்.. ஆனாலும் அண்ணன்மீது சந்தேகப்பட்ட தம்பி, அவர் தலையைக் கொண்டுவருபவர்களுக்கு ஆயிரம் பொன் தருவதாக அறிவித்தான். ஒரு புலவர் குமணனைக் காட்டில் கண்டு ஒரு பாடல் பாடினார். அவருக்குப் பரிசு தரத்தன்னிடம் பொருளில்லையே என்று வருந்திய குமணன், தன் தலையைக் கொண்டுபோய்த் தன் தம்பியிடம் கொடுத்துப் பரிசு பெறுமாறு கூறினார். ஆனால் புலவரோ, ”கொடையாளிகளில் நீ தலை சிறந்தவன்” என்று போற்றிப் பாடிவிட்டுப் போனார். இப்படிப்பட்ட பண்பை - சீர்மையை நீ மறக்காதே என்கிறார் அவ்வைப்பாட்டி.

# நல்நெறிபற்றி........

- வி நந்தகுமாரன் -

## வளமாக வழிநடத்தலே வாழ்க்கை.

- அலைபாயாத அமைதியான மனம், ஆயுளின் வருடங்களை அதிகரிக்கும்.
- ஆலோசனை அமையும் இல்லத்தில், அளப்பரிய ஆனந்தம் நிறையும்.
- இனிய வசனங்களை இல்லத்தில் இருத்து, இருண்டகாலங்களை இலகுவில் நீக்கலாம்.
- ஈர்ந்து இழுக்கும் ஒவ்வொரு செயல்களும், இன்ப உணர்வுகளை ஊட்டுகிறது.
- உன்னதமான வாழ்க்கை உடம்பில் அல்ல, உள்ளத்தில் இருந்தே பிறக்கிறது.
- ஊக்கமுடையோர் உயர்வான வாழ்வை உறுதியாக உருவாக்கிக் கொள்கிறார்கள்.
- எந்தச் சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் சக்தியை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.
- ஏமாற்றமான நெருக்கடியான நேரத்தையும், நேராக்கி நெறிப்படுத்திச் செல்.
- ஐம்பொறிகளை ஆறாவது அறிவு ஆட்சி செய்யும்போது, மனிதனாக மாற்றுகிறது.
- ஒழுக்க நெறிகளை பின்பற்றும்போது, ஒழுங்கான வாழ்வை அமைக்கின் றோம்.
- ஓதி உணர்த்தியும் ஒழுக்கமில்லாதவர்கள், ஒன்றிற்கும் உதவாமல் போகிறார்கள்.
- குழந்தைகள் வளர்ந்து வரும்போது, குணாதிசயங்களும் கூடவே வளர வேண்டும்.
- குறைபாடுகள் களையப்படும்போது, குடும்பத்திற்கு உரியவனாக மாற்றம் பெறுகிறாய்.
- குடும்பங்கள் கட்டுப்பாடுடன் காப்பாற்றப்படும்போது, ஆரோக்கியம் அமைகிறது.
- குணத்துடன் கூடிய கடமை நிறைந்த காலங்கள், குதூகலம் பெறுகிறது.
- குற்றங் குறைகளைக் களைந்து கரும காலங்களை நிறுவுதல், நிறைவைத் தரும்.
- குடும்பத்தில் அன்பு ஆழமாகப் பதியும்போது, ஆனந்தம் பெருகுகிறது.
- குற்ற உணர்ச்சிகளை கூடியவரை தவிர்த்தல், குதூகலம் நுழைய அனுமதியாகிறது.
- குற்ற உணர்வுகள் குடிகொண்டால், கூடவே கோபங்களும், கொடுமைகளும் குவியும்.
- குடும்ப சுகங்களைப் பகிர்ந்து கொள்ளும் பண்பாடுகள், சமுதாய பலத்தைப் பெருக்கும்.
- குடும்ப சுகம் குறைந்து கலைந்து போகாமல், கட்டிக் காப்பாற்றப்பட வேண்டும்.
- குற்றங்கள் நீக்கப்பட்டு திருத்தப்படும் காலங்கள், தராதரமான வாழ்வைத் தரும்.
- குணத்தில் குற்றம் குறைகள் நுழையும்போது, கௌரவமும் கூடவே குறைகிறது.

## ஒற்றுமையே பலம்......

வேடன் ஒருவன் காட்டில் பறவைகளைப் பிடிப்பதற்காக வலை ஒன்றை விரித்து வைத்திருந்தான். நீண்ட தூரத்தில் இருந்து தானியங்களைப் பொறுக்க வந்த புறாக்கள் சில அந்த வலையில் வசமாகச் சிக்கிக் கொண்டன. அவை அந்த வலையிலிருந்து தப்புவதற்காக தனித்தனியே பெரும் முயற்சிகள் செய்தன. எல்லா முயற்சிகளுமே தோல்வியில் முடிந்தது.

அப்போது காகம் ஒன்று மரத்திலிருந்து புறாக்களின் பரிதாப நிலையை அவதானித்துக் கொண்டிருந்தது. அது புறாக்குளுக்கு அருகே பறந்து சென்று " நீங்கள் தனித்தனியே முயற்சி செய்யாது ஒற்றுமையாக கூட்டாக முயற்சி செய்யுங்கள் " என்று புத்திமதி கூறியது. அதன்படி புறாக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து வலையைத் தூக்கிக்கொண்டு பறந்து,, வேடனிடம் அகப்படாமல் தப்பித்துச் சென்றன.

பார்த்தீர்களா!... அந்தப் பறவைகளின் ஒற்றுமையின் பலத்தை
" அடம்பன் கொடியும் திரண்
டால் மிடுக்கு " என்று சொன்னது சரிதானே... எனவே மாணவர்களாகிய நாமும் ஒற்றுமையாக வாழ்ந்தால் பல சாதனைகளையும் வெற்றிகளையும் பெறாம் என்பதை இந்தக் கதையின் மூலம் புரிந்துகொள்வோம்!..

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு "

### ஒத்த கருத்துச் சொற்கள்

1- அடவி - காடு
2- அச்சன் - தந்தை
3- அடிசில் - உணவு
4- அபசாரம் - குற்றம்
5- அன்னம் - உணவு
6- அண்மை - சமீபம்
7- அணங்கு - பெண்
8- அணை - வரம்பு
9- அங்கத்துவம் - உறுப்புரிமை
10- அகம்பாகம் - தற்பெருமை
11- ஆசி - வாழ்த்து
12- ஆசனம் - இருக்கை
13- ஆசாரம் - ஒழுக்கம்
14- ஆசீர்வாதம் - வாழ்த்து
15- ஆக்கினை - துன்பம்
16- ஆயுள் - வாழ்நாள்
17- ஆரம்பம் - தொடக்கம்
18- ஆரோக்கியம் - உடல்நலம்
19- ஆலோசனை - கருத்து
20- ஆமோதித்தல் - உடன்படல்




# முல்லாவின் கதை

## சூரியனா?...சந்திரனா?...

அறிஞர்கள் கூடியிருந்த ஒரு சபையில் மிகவும் பயனுடையது எது சூரியனா அல்லது சந்திரனா? என்பது குறித்துப் பட்டிமன்றம் ஒன்று நடந்து கொண்டிருந்தது.

அங்கே பேசியவர்கள் பெரும்பான்மையினர் சந்திரனைவிட சூரியனால்தான் உலகத்திற்கு அதிகப் பயன் உண்டு என்ற கருத்தையே வலியுறுத்திப் பேசினர்.

அப்போது பேசியவர்களை நையாண்டி செய்து வேடிக்கை பார்க்க வேண்டும் என்று முல்லாவுக்குத் தோன்றியது.

அவர் உடனே எழுந்து " அறிஞர் பெருமக்களே, இங்கே நடந்த பட்டிமன்றம் தொடர்பாக எனது கருத்தைக் கூறலாமா?" என்று கேட்டார்.

இது பொதுமன்றம், இங்கு யாரும் தங்கள் கருத்தினை எந்தவிதத் தடையுமின்றிக் கூறலாம். முல்லா அவர்களே உங்கள் கருத்தைக் கூறுங்கள் என்று அறி ஞர் பெருமக்கள் கேட்டுக் கொண்டனர். சூரியனைவிடச் சந்திரனால்தான் உலத்திற்கு அதிகமான பயன் கிடைக்கிறது என்று நான் கருதுகிறேன் என்றார் முல்லா.

அது எவ்வாறு விளக்குங்கள் என்று அறிஞர்கள் கேட்டனர்.

பகலில் நமக்கு இயற்கையாக வெளிச்சம் இருக்கிறது. அதனால் சூரியனுடைய உதவி நமக்குத் தேவையே இல்லை. இரவில் இருளாக இருக்கிறது. சந்திரன் இருளை அகற்றி நமக்கத் தேவையான ஒளியை இரவிலே அளிக்கிறது. அதனா ல் சந்திரன் தான் நமக்கு அதிகப் பயனை அளிக்கின்றது என்றார் முல்லா.

முல்லா தங்களை நையாண்டி செய்கிறார் என்பதை உணர்ந்து அறிஞர்கள் சிரித்து மகிழ்ந்தார்கள்...

## பழமொழிகள் உணர்த்தும் அர்த்தம்...

01- பணம் பாதாளம் வரை பாயும்.
பணத்தால் எதையும் சாதிக்கலாம்.
02- அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்.
பயமுள்ளவனை எல்லாமே அச்சமூட்டும்.
03- நாமொன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும்.
நாம் எண்ணியபடி எதுவுமே நடந்துவிடாது.
04- இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
வறுமையிலும் செம்மையாக வாழவேண்டும்.
05- முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.
விடாமுயற்சி உடையவர் வெற்றி அடைவர்.
06- போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
சிந்தையின் நிறைவே சிறந்த செல்வமாகும்
07- எறும்பு ஊர கல்லும் குழியும் (தேயும்)
தொடர்ச்சியான முயற்சி பலன் தரும்.
08- கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.
எந்த ஒரு முன்னேற்றத்திற்கும் போட்டி அவசியம்.
09- பழகப் பழக பாலும் புளிக்கும்.
காலம் செல்லச் செல்ல எதுவும் சலிப்பையே தரும்.
10- ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.
அனுபவமற்ற புத்தகப்படிப்பு (கல்வி) மட்டும் பயன்தராது.

### இரு பக்கத்தாலும் வாசித்தால் ஒரு சொல்...

01- விகடகவி
02- மாடுஓடுமா
03- மேளதாளமே
04- மாமா
05- பாப்பா
06- கற்க
07- தாத்தா
08- துவளுவது
09- திகதி
10- காக்கா
11- யானைபூனையா
12- மேகமே
13- மாறுமா
14- மாடமா
15- சிவாசி

### தமிழ்!...

1- இலக்கண நூல்கள்..
தொல்காப்பியம், நந்நூல்
2- சங்க இலக்கியங்கள்..
எட்டுத்தொகை, பத்துப்பாட்டு
3- அறநூல்கள்..
திருக்குறள், நாலடியார்
4- காப்பியங்கள்..
சிலப்பதிகாரம், மணிமேகலை

# நகுலின் குட்டிக் கதைகள் - 10

**உலகத் தண்ணீர் தினம்.**

"நீர் இன்றி அமையாது இவ்வுலகம் "
ஒவ்வொரு வருடமும் உலக தண்ணீர் தினம் 22 ம் திகதி பங்குனி மாதம் அனுஷ்டிக்கப்படுகிறது.
2024ம் ஆண்டின் கருப்பொருள் "அமைத்திக்கான நீர்" என்று கூறப்பட்டுள்ளது.
நாம் நீரை மனிதனின் உரிமையாக எண்ணி பாவிக்கவேண்டும்.
3ம் உலக போர் உருவாகுவதற்கு காரணமாக நீர் இருக்கப் போகின்றதாம்.
நீரை சிக்கனமாக சேமித்து பாவிக்க வேண்டும்.
அது செய்யாமல் விட்டால் நாடுகள் நீருக்கு போராட வேண்டி வரும். குடிக்கும் தண்ணிர் உலகத்தில் 3% ஆகும். வெப்பம் கூடினால் தண்ணீர் குறையும்

நீதி: நாம் அளவாக தண்ணீரைப் பாவிக்க வேண்டும்.

**செல்வன் நகுல் துரையரங்கன்**
**எசன் - தமிழ் பாடசாலை.**

........................................................................................................................................

# என் அப்பா

அன்பின் உருவம் என் அப்பா
ஆதரவுடன் அணைக்கும் என் அப்பா
இன்சொல் பேசும் என் அப்பா
ஈடுபாட்டுடன் பகிரும் என் அப்பா
உத்தமராக வாழும் என் அப்பா
ஊக்கத்துடன் உயரும் என் அப்பா
எறும்பாக உழைக்கும் என் அப்பா
ஏணியாக உயர்த்தும் என் அப்பா
ஐயம் போக்கும் என் அப்பா
ஒற்றுமையை வழிக்காட்டும் என் அப்பா
ஓடமாக சுமக்கும் என் அப்பா
ஔடதமாய் காக்கும் என் அப்பா.

**அனுஸ்கா ராகவன்.**
**எசன் - தமிழ் பாடசாலை.**

## விடுகதைகள்...

01- ஓடுவான் ஆடுவான் ஒற்றைக்காலில் நிற்பான் அவன் யார்?..
02- குண்டு முழி ராஜாவுக்கு குடல் எல்லாம் பற்கள் அது என்ன?..
03- கோணலாக இருந்தாலும் குணமும் சுவையும் குன்றார் அது என்ன?
04- எத்தனைமுறை சுற்றினாலும் அவனுக்குத் தலைசுற்றாது அவன்யார்?..
05- காற்றைக் குடித்து காற்றால் பறப்பான் அவன் யார்?..
06- ஒரே வயிற்றில் பிறந்தாலும் ஒருவன் ஓடுவான் ஒருவன் நடப்பான் யார்?
07- உடம்பில்லாத ஒருவன் பல சட்டைகளை அணிந்திருப்பான் அவன்யார்?
08- பேசுவது கேட்கும் பேசுபவர் யார் என்று தெரியாது?..அது என்ன?..
09- உங்கள் அக்கா குளித்தாலும் கருப்பு எங்க அக்கா குளிக்காமல் சிவப்பு யார் இவர்கள்?..
10- எங்கள் வீட்டுத் தொட்டத்தில் மஞ்சள் யானை அது என்ன?..

**விடைகள்:-**

**( கதவு - மாதுழம்பழம் - கரும்பு - விசிறி - பலூான் - மணிக்கூடு - வெங்காயம் - வானொலிப்பெட்டி - காகம், தக்காளிப்பழம் - பூசணிக்காய் )**

## மாணவமணிகளே!..

1- எதையும் கற்றுக் கொள்வதற்காக வெட்கப்படாதீர்கள். என்றேனும் ஒரு நாள் தெரியவில்லை என்பதற்காக அவமானப்பட நேரிடும்.

2- முயலும் வெல்லும் அமையும் வெல்லும் ஆனால் ”முயலாமை” என்றுமே வெல்லாது. ஆகவே எப்பொழுதும் முயற்சியோடு இருங்கள்.

3- மறக்கமுடியாத குற்றங்களை மன்னித்து விடுங்கள். மன்னிக்க முடியாத குற்றங்களை மறந்து விடுங்கள்.

4- வாழ்க்கைக்குத் தேவையான 16 பெறுபேறுகள்..

01- வழிகாட்டக்கூடிய கல்வி
02- நீண்ட ஆயுள்
03- நம்பிக்குரிய நண்பர்கள்
04- தேவையான செல்வம்
05- உழைப்பிற்கேற்ற ஊதியம்
06- நோயற்ற வாழ்க்கை
07- எதற்கும் கலங்காத மனம்
08- அன்புள்ள துணை
09- அறிவு,ஒழுக்கமுள்ள பிள்ளைகள்
10- வளரக்கூடிய புகழ்
11- மாறாத வார்த்தை
12- தடங்கல் இல்லாத வாழ்க்கை
13- சேமிப்பை அதிகரிக்கும் சிக்கனம்
14- திறமையான குடும்ப நிர்வாகம்
15- உதவக்கூடியவர்களின் தொடர்பு
16- பிற உயிர்களிடம் அன்பு செலுத்துதல்

## கணனிப் பயன்பாட்டுக்குச் சில....

01- OTP - One time password
02- PIN - Personal Identification Number
03- QR code - Quick Respone Code
04- SMS - Short Message
05- MMS - Multimedia Messaging Service
06- WiFi - Wireless Fidelity
07- GIF- Graphics Interchange Format
08- GPS - Global Positioning System
09- KYC - Know your Costamer
10- PDF - Portable Document Format
11- PNG - Portable Network Graphics
12- JPEG - Joint Photographics Experts Group
13- URL - Uniform Resource Locator
14- WWW - World Wide Web
15- PAN - Permanent Account Number

## அறிந்துகொள்வோம்...

இல்லாது, முடியாது, முடிந்தது என்ற ”நெக்கட்டிவ்” வார்த்தைகளுக்கு ”பொஷிட்டிவ்” விளக்கம்....

- FAIL - என்ற வார்த்தைக்கு ” First Attempt in Learning ” அதாவது கற்றுக்கொள்வதற்கான முதல் வாய்ப்பு என்பது அதன் பொருள்..

- END - என்ற வார்த்தைக்கு ” Effort Never Dies ” அதாவது முயற்சி ஒருபோதும் தோற்றதில்லை என்பது அதன் பொருள்.

- NO - என்ற வார்த்தைக்கு ” Next Opportunity ” அதாவது அடுத்த வாய்ப்பு என்பது அதன் பொருள்.

## சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 48

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | | | 6 | 5 | | | 7 |
| | | 6 | | | 7 | 4 | 8 | |
| 2 | | 7 | 4 | 9 | | | | 6 |
| | 6 | | | 7 | | 1 | | |
| 3 | | 1 | 5 | | | | 7 | 2 |
| | 9 | | | 4 | 2 | 3 | | 8 |
| 1 | | 8 | 6 | | | | 2 | 9 |
| | 2 | | | 1 | 8 | 6 | 4 | |
| 6 | | | 3 | | | | 1 | |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 141
## ( பங்குனி - சித்திரை 2025 )

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இவ
01-04 மாதங்களில் ஒன்று.
10-12 துக்கம் என்றும் கூறலாம்.
வ-இ
08-06 அழகுபடுத்தலுக்குப் பயன்படும்.
16-13 மனிதரை அழகுபடுத்துவது இந்த முகம்.
கீ-மே
08-04 இனிப்பான பொருள்.
16-12 பொதுப்பணியில் சிறந்து விளங்கியோருக்கு வீதிகளில் இது வைப்பார்கள்.
மே-கீ
01-13 தானிய வகைகளில் ஒன்று.
11-15 உழைப்போர் அரசாங்கத்துக்கு இது செலுத்துவார்கள்.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

## சிரிப்பின் மகிமை..

- இன்பத்தில் சிரிப்பவன் அதிஸ்டசாலி.
- துன்பத்தில் சிரிப்பவன் ஞானி
- கர்ப்பனையில் சிரிப்பவன் கவிஞன்
- கண்டவுடன் சிரிப்பவன் காரியவாதி
- தெரிந்து சிரிப்பவன் நடிகன்
- தெரியாமல் சிரிப்பவன் ஏமாளி
- ஓயாமல் சிரிப்பவன் பைத்தியக்காரன்
- ஓடவிட்டுச் சிரிப்பவன் வஞ்சகன்
- உட்கார்ந்து சிரிப்பவன் சோம்பேறி
- உழைப்பில் சிரிப்பவன்தான் உயர்ந்த மனிதன்!..

## மாணவர் என்றால் என்ன?..

Student Full Form...

S - Smart

T - Thoughtful

U - Understanding

D - Disciplined

E - Energetic

N - Notable

T - Talented

## ஓரெழுத்துச் சொற்கள்..

01- தீ - நெருப்பு

02- தூ - தூய்மை

03- தே - கடவுள்

04- தை - மாதம்

05- நா - நாவு

06- நே - அன்பு

07- நை - இழிவு

08- நோ - வறுமை

09- பா - பாடல்

10- பூ - மலர்


11- பே - மேகம்

12- பை - இளமை

13- போ - செல்

14- மா - மாமரம்

15- மீ - வான்



## Very-Very Rare Knowing Fullforms
## தெரிந்து கொள்ள வேண்டிய அரிதான விடயங்கள் சில..

1- LOVE - Long Lodting Original Value Emations
2- NEWS - North, East, West, South
3- DATE - Day and Time Evolution
4- JOB - Joining Other Business
5- AIM - Ambition In Mind
6- BYE - Be with you Everytime
7- JOKE - Joy of kids Entertainment
8- SMILE - Sweet Memories in lips Expression

## Cricket.. கிரிக்கட் விளைாட்டு என்றால் என்ன?..

| | |
|---|---|
| C - Customer Focus | - பார்வையாளர்களை மகிழ்வித்தல் |
| R. - Respectful | - மரியாதையாக விளையாடுதல் |
| I - Integrity | - நேர்மையைக் கடைப்பிடித்தல் |
| C- Community Contribution | - சமூகத்தின் பங்களிப்பு |
| K - Knowledgeable | - அறிவுத்தனமாக விளையாடுதல் |
| E - Entrepreneurship | - தொழில்முறையான விளையாட்டு |
| T - Teamwork | - கூட்டாக விளையாடுதல் |

## Which stage you are in ?.....மனிதனின் பருவ காலங்கள்..

| | |
|---|---|
| 00 - 01 - year - Infant | - பால்குடிக்குழந்தை |
| 01 - 03 - years - Toddler | - சிறு குழந்தை |
| 06 - 11 - years - Chilhood | - சிறுவர் |
| 11 - 18 - years - Teenager | - இளம்பெண் |
| 18 - 30 - years - Youth | - இளைஞர் |
| 30 - 60 - years - Adulthood | - முதிர்வயது |
| 60 + - years - Elder | - பெரியவர் |

## பூமி, சந்திரன், சூரியன்...

A- பூமியின் விட்டத்தின் 108 மடங்கு சூரியனின் விட்டமாகும்.
B- சூரியனின் விட்டத்தின் 108 மடங்கு பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலான தூரமாகும்.
C- சந்திரனின் விட்டத்தின் 108 மடங்கு பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரமாகும்.

சூரியன் - பூமி இடைத்தூரம் - 93.000.000 மைல்
பூமி - சந்திரன் ” - 2.38.855 ”
சூரியனின் விட்டம் 8.65.000 மைல்
பூமியின் விட்டம் 7.926 ”
சந்திரனின் விட்டம் 2.159 ”


## Do You Know... தெரியுமா?..


| | |
|---|---|
| Mother + Father = Parents | - தாய் + தந்தை = பெற்றோர் |
| Wife + Husband = Spouses | - மனைவி + கணவன் = வாழ்க்கைத் துணைவர்கள் |
| Sistet + Brother = Siblings | - சகோதரி + சகோதரன் = உடன் பிறந்தவர்கள் |
| Niece + Nephew = Niblings | - மருமகள் + மருமன் = மருமக்கள் |
| Aunt + Uncle = Piblings | - மாமி + மாமா = மாமன் மாமிகள் |

### சில மொழிகளின் எழுத்துகள்...

01- தமிழ் - 247
02- நேபாளி - 64
03- இந்தி - 62
04- உருது - 36
05- ஆர்மேனியன் - 36
06- ரஷியன் - 33
07- துர்கிஷ் - 29
08- ஸ்பானிஷ் - 27
09- ஆங்கிலம் - 26
10- யேர்மன் - 26
11- பிரெஞ்ஸ் - 26
12- போத்துக்கீசியம் - 26
13- கொரியன் - 24
14- ஹீப்ரு - 22
15- இத்தாலியன் - 21

## புதிர்ப்போட்டி....





**புதிர் - 1**
இப்படத்திலுள்ள புள்ளிகளுக்கு வர்ணம் தீட்டிப்பாருங்கள் ஒரு படம் உருவாகும்

**புதிர் - 2**
இப்படத்தில் எத்தனை வகையான காளான்கள் உண்டு எனபதை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்..

**விடைகள் இன்னொரு பக்கத்தில்....**

........................................................................................................................................

## உலகில் பெரியவை...

- உலகில் பெரிய ஆறு - அமேசன்
- உலகில் பெரிய வளைகுடா - மெக்ஸிக்கோ
- உலகின் பெரிய தீவு - கிறீன்லாந்து
- உலகின் பெரிய கண்டம் - ஆசியா
- உலகின் பெரிய நிலப்பரப்பு நாடு - ர:ஷ்ஷியா
- உலகில் பெரிய ஜனநாக நாடு - இந்தியா
- உலகில் பெரிய சமுத்திரம் - பசுபிக்
- உலகில் பெரிய பாலைவனம் - சகாரா
- உலகில் பெரிய உயிரினம் - நீலத்திமிங்கிலம்

## Which stage you are in ?.....மனிதனின் பருவ காலங்கள்..

| | | | |
|---|---|---|---|
| 00 - 01 | year | - Infant | - பால்குடிக்குழந்தை |
| 01 - 03 | years | - Toddler | - சிறு குழந்தை |
| 06 - 11 | years | - Chilhood | - சிறுவர் |
| 11 - 18 | years | - Teenager | - இளம்பெண் |
| 18 - 30 | years | - Youth | - இளைஞர் |
| 30 - 60 | years | - Adulthood | - முதிர்வயது |
| 60 + - - | years | - Elder | - பெரியவர் |


**சில மிருகங்கள், வீட்டு மிருகங்கள், பறவைகளின் இளமைப்பெயர்கள்...**

கோழி - குஞ்சு
அன்னம் - குஞ்சு
வாத்து - குஞ்சு
கிளி - குஞ்சு
மைனா - குஞ்சு
தாரா - குஞ்சு
காகம் - குஞ்சு
ஆந்தை - குஞ்சு

நாய் - குட்டி
பூனை - குட்டி
ஆடு - குட்டி
பன்றி - குட்டி
முயல் - குட்டி
குதிரை - குட்டி
மான் - குட்டி
கங்காரு - குட்டி

**இணையான தமிழ்ச் சொற்கள்..**

| பிறமொழிச் சொற்கள்.. | | |
|---|---|---|
| 1-கல்யாணம் | - | திருமணம் |
| 2-கனிஷ்ட | - | இளைய |
| 3-கஷ்டம் | - | துயரம் |
| 4-காகிதம் | - | தாள் |
| 5-கிரகம் | - | கோள் |
| 6-கிராமம் | - | சிற்றூர் |
| 7-கிருகம் | - | இல்லம் |
| 8-குமரன் | - | மகன் |
| 9-கும்பாபிஷேகம் | - | குடமுழுக்கு |
| 10-குமாஸ்தா | - | எழுத்தர் |
| 11-கைதி | - | சிறையாளி |
| 12-கோஸ்டி | - | குழு |
| 13-சக்தி | - | ஆற்றல் |
| 14-சந்தர்ப்பம் | - | வாய்ப்பு |
| 15-சந்தோஷம் | - | மகிழ்ச்சி |



## குறளும் பொருளும்...

### அரண்...

741 - ஆற்று பவர்க்கு மாண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்.

742- மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்.

743 - உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல்.

744 - சிறுகாப்பிற் பேரிடத் தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண்.

745 - கொளர்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர் தரண்.

746 - எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு
நல்லா ருடைய தரண்.

747 - முற்றியு முற்றா தெறிந்து மறைபடுத்தும்
பற்றற் கரிய தரண்.

748 - முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண்.

749 - முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்.

750 - எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண்...

# குறளும் பொருளும்...

## பாதுகாவல்...

741- போருக்குச் செல்பவருக்கும் பாதுகாப்பு சிறந்தது. பிறர்க்கஞ்சிப் புகலிடம் வந்தவருக்கும் பாதுகாப்பு சிறந்தது.

742- தெளிந்த நீரும் பரந்த இடமும் சிறந்த மலையும் அடர்ந்த காடும் ஆகிய நான்கும் அரணாகும்.

743- உயர்வும், அகலமும், உறுதியும் பகைவரால் அணுகமுடியாத அருமையும் அமைந்திருப்பதே அரண் என்று நூலோர் கூறுவர்.

744- பரந்த நிலப்பரப்பில் காப்பாற்ற வேண்டிய இடத்தைச் சிறிதாக அமைத்துக் காப்பவனை எதிர்த்துவந்த பகைவருடைய ஊக்கத்தை அழிக்க வல்லது அரண்.

745- பகைவர் கைப்பற்ற முடியாததாய் உணவுப்பொருட்களைத் தன்னுள் உடையதாய் அகத்தோர் நிலைத்திருப்பதற்கு எளிதாயிருப்பதே அரண் ஆகும்.

746- எல்லாப் பொருள்களையும் தன்னுள் பெற்றுப் போர் நெருக்கடி காலத்தில் உதவும் உத்தம வீரர்களை உடையதே அரண் ஆகும்.

747- முற்றுகையிட்டும் அயர்ந்த வழிச்சாடியும அகத்தவருக்கு அறிமுகம் ஆனவரை விட்டு வஞ்சித்தும் பற்றுவதற்கு முடியாதிருப்பதே அரண்.

748- வலிமையாய் முற்றுகை இட்டவரை எதிர்த்து அவர்களின் எண்ணத்தைக் கெடுத்து அகத்தார் பற்றை விடாமல் வெல்வதற்கு உரியது அரண்.

749- போர் முகத்தில் பகைவர் அழியவும் தான் செய்யும் செயல்களில் வீரச்செயல் செய்வதற்கும் ஏற்றப் பாதுகாப்புடையது அரண் ஆகும்.

750- எவ்வளவு சிறந்த அரண் இருந்தாலும் போர்த்தொழிலில் வல்லமை இல்லாதிருப்பவருக்கு அந்த அரண் பயன் அற்றது ஆகும்.

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## தோழமை....

கிழிசல் துணியைத் தைக்கும் வேலையில் விரல்கள். சுட்டு விரல் அடுத்த விரலைப் பார்த்து " துன்பப்படுகிறவர்களுக்குத் துன்பப்படுகிறவர்களே துணை" என்றது. அடுத்த விரல் கேட்டது " ஏன் அப்படிச் சொல்கிறாய் " இதோ பாரேன்...சுட்டு விரல் சொன்னது..

" **கிழிச்சல் துணிக்கு ஓட்டை ஊசி** "

## விதைகள்....

வெயிலில் நெடுந்தூரம் பறந்துவந்த நாடோடிப் பறவைகள் முகில்களின் இடையே நுழைந்தபோது குளிரில் நனைந்து களித்தன. கொஞ்ச நேரத்தில் மழைத்துளிகளாக முகில்க்கூட்டம் கீழே விழத் தொடங்கின " ஐயோ நல்ல முகில்கள் விழுகின்றனவே " என்று இரங்கி அழுதது ஒரு பறவை. வழிகாட்டிப் பறவையோ " எல்லாம் நன்மைக்கே என்றது. " குளங்கள் நிரம்பும் - நாம் மீன்கள் பிடிக்கலாம், மரங்கள் தழைக்கும் நாம் கூடுகள் கட்டலாம் " அது சொன்னது..

" **நல்லவர்கள் எழுந்தாலும் நன்மைக்கே விழுந்தாலும் நன்மைக்கே**"

# குறுக்கெழுத்துப்போட்டி-204
## (பங்குனி - சித்திரை 2025)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-07 பெண்களுக்கு வருடத்தில் ஒரு தினம் அது எது.
22-25 கொடைக்குப் பெயர் போனவர்.
37-40 சிலர் இந்தக் குணத்தால் அழிந்து போவார்கள்
46-49 இயற்கை அனர்த்தங்களில் ஒன்று

வ-இ
13-09 வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் அது எது.
21-16 யாழ்குடாநாட்டில் ஒரு நகரம்.
28-25 விடுதலைப் போரில் மடிந்தவனை இப்படி அழைத்துப் போற்றுவார்கள்
33-30 போர், யுத்தம் எனப்பொருள்படும்.
46-43 உலகிற்கு ஒளியூட்டும் இயற்கையின் கடவுள்.

கீ.மே
19-05 கூரான ஆயுதம்.
21-07 நாம் உண்ணும் சோற்றுக்கு இன்னொரு பெயர்.
48-34 தாய்நாட்டில் இறுதிப்போர் நடைபெற்று முடிந்த பெருநிலப் பகுதி.

மே-கீ
01-29 வீட்டில் ஒருத்தி.
19-40 தமிழர் கலாச்சார நடனங்களில் ஒன்று.
22-43 களவெடுப்பவளின் எதிர்ப்பாற் சொல்.
35-49 செடிவகையிலுள்ள தாவரம் ஒன்று.

**(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)**

## போராட்ட வாழ்க்கை....

போராட்ட வாழ்க்கையில்
துன்பம் ஆழ் கடலில்அமிழ்த்தும்
கொசுக்கடி நெருக்கடியால்
உடல் வீங்கும்மனித வாழ்வு
முழுமையாய்ச் சறுக்கிடும்..

தண்ணீர் சுரக்கும்
ஆழத்தில்கற்களுடன்
வேர்களைப் பிடித்து உழு
விதையாய் விழுந்த வாழ்க்கை
எதிர்மறையில் கசந்தோடும்...

பூமியில்புதையுண்ட செல்வம் போல
சோதனைகளில் வழியும் கண்ணீர்
உடல் வியர்வையோடுஉறவாடும்..
மனதில் எரியும் தீயின்
கத கதப்பில்
சுவைத்தேனும், வெற்றியும்
விடி வானத்திலிருந்து வருமா?

போராட்டம் ஒரு தூண்டில்
மீன் பிடிக்க உதவாது
சிறகுகளில் பறக்கும் மனம்
நெருக்கடி நெருப்பில்
தங்கமாய் உருகிவெளி வரும்போது
நம் மனதில் உருவாகும்
பொற்கால வாழ்வு...

வீழ்ச்சி கற்றலின் சுவடுகள்
தோல்வியின் கனவு
வெற்றியின் விழிதுன்ப வழி சென்று
இன்பம் நிறைகையில்
மனித வாழ்வு நிறைவு..

தூண்களைத் தாங்கும்
வல்லமையில்,
வாழ்க்கை ஒரு கோபுரமாக
வான் முட்ட உயரும்
துன்பமும் துரோகமும் கூட
முழுமையான வாழ்க்கைக்கு
அடித்தளம்!..

**சத்யா பிரான்சிஸ் - மலேசியா**

## தமிழ் சிங்கள புத்தாண்டு!..

தமிழ் சிங்கள புத்தாண்டே வருக
எல்லோர் வாழ்விலும்
இன்பம் பொங்கிட
வருகவே புத்தாண்டே
அன்புக்கோர் அணிகலனாய்
அவனியுளோர் போற்றிடவே
குரோதி பெயர் பதித்து
அகிலம் சிறக்க வருவாயே
ஆவலுடன் வரவேற்கிறோம் வருகவே
சித்திரை என்பது தமிழ்
மக்களின் வாழ்வில்
போற்றுதற்குரியது
அன்றோ
இன்பமாய் நாம் வாழ
இனிய ஆண்டாய் பிறந்திடுக
தாயக மக்களின்
இன்னல்கள் தீர்த்திடவே
தமிழணங்கே பைய நீ வருக
எங்கும் அமைதி
அமைந்திட புத்தாண்டே
எம்மவர்க்கு விடுதலை
ஏற்படுத்த விரைந்து வருக
நன்றாக நலமுடனே
நானிலத்தோர் மகிழ்ந்திடவே
சீரும் சிறப்புடனும்
சிறப்பாக பிறந்திடவே
சித்திரை நங்கை தூயவளே
வருக வருக புத்தாண்டே
வாழ்க நீயும் பல்லாண்டே

**ஜெயா நடேசன் - ஜேர்மனி**

## பனை...

கொல்லையிலே வந்தவளே
ஒற்றையிலே நின்றவளே
கர்ப்பகமே கறுத்தம்மா
நீ எனக்கு துணையம்மா
வானூர்தி வேட்டு வைக்க
உயிர் பயத்தில் நான் இருக்க
உனை சுற்றி வந்தவேளை என்
உயிர் காத்த தாயம்மா...

வேட்டுக்கள் சுட்டபோதும்
சாயவில்லையே அம்மா
தனித்து நீ நின்றபோதும்
தாளவில்லையே அம்மா
வீட்டுகு ஒருத்தி நீயிருந்தால்
வீசும் காற்றும் மாசு நீங்கும்...

நலமாக நாம் வாழ
நன்மைகள் பல தந்து
இளைப்பாற நிழல் தந்து
களைப்பாற பதனீர் தந்து
பசியாற கிழங்கு தந்து
இனிப்பான நுங்கு தந்து
சுவையான பழம் தந்து
பாகான வெல்லம் தந்து
படுத்துறங்க பாய் தந்து
பாதுகாக்க வேலி தந்து
வெய்யிலுக்கு தொப்பி தந்து
விசிறிட விசிறி தந்து
அடுப்புக்கு விறகு தந்து
நிகரில்லா நீர் வளமாய்
வான் உயர்ந்து நிப்பவளே
நீ எமக்கு வரமம்மா....

வள்ளுவன் பாட்டனுக்கும்
ஏடெழுத ஓலை தந்து
எண்ணற்ற நன்மை தரும்
ஒப்பற்ற பனையே தாயே
ஒற்றையிலே நின்றாலும்
உனக்கு இணை ஏதம்மா?
நாமும் வளர்ப்போம் ஒரு மரம்
நாளை எம்மக்கள் பெறுவார்
நன்மைகள் ஏராளம்....

**சந்திரா. டென்மார்க்**

## ஓடும் வெண்ணிலவே....

வெண்ணிலவே வெண்ணிலவே
விரைந்து ஏன் ஓடுகின்றாய் ?
உன்னைத் தொட்டு விடலாம்
என்றல்லவோ நானும்
எட்டி எட்டி நடக்கிறேன்

ஆனால் நீயோ உன்னை
யாரும் தொட்டு விடவே
கூடாதென்று வெட்டி வெட்டிப்
போவதும் சரிதானோ ?

ஒரு சில வேளை சிரித்தபடி
சீவிச் சிங்காரித்து அழகு
தேவதை போல வருகின்றாய்
சில நேரம் அழுத முகமுடன்
அரைகுறையாகத் திரிகின்றாய்

உனது அழகில் சொக்கி
நிற்கும்
மாந்தரை விட்டு விட்டு ஓடிச்
செல்வதும் முறைதானோ ?

நீள்வான வெளியில் மெல்ல
மெல்ல நகர்ந்து செல்லும்
உன் பேரழகில் மயங்க -
வைக்கத் துரத்திச் சென்றிட

சூரிய மன்னனோ உனது
வலையில் சிக்கவே கூடாது
என்று கீழ் வானத்தில் உன்
பார்வை படாது ஒளிந்து
மறைந்து கொண்டதாலோ
அழுதழுது முகஞ் சிவந்து
அரைகுறையானாயோ ?

**ராணி சம்பந்தர்-யேர்மனி**

# சித்திரைப் பெண்ணாள் வருகின்றாள்!...

- கீதா பரமானந்தன் -

சித்திரைப் பெண்ணேநீ வருகவே!
இத்தரையும் இன்பத்தில் நிறையவே!
முத்தாகி மிளிரட்டும் வாழ்க்கையுமே
முழுமதியாய்ச் சிந்திடுவாய் ஒளியையே
வித்தாகி இன்பங்கள் உள்ளத்திலே
விழைச்சலாய்ப் பெருகட்டும் பூமியிலே
தித்திப்பைத் தாங்கியுமே வரவேண்டி
திசையெங்கும் பூத்தூவி நிற்கின்றோம்

நெஞ்சார வரவேற்பும் உந்தனுக்கே
நேசமுடன் காத்திருக்கு உலகமுமே!
அஞ்சுதலைப் போக்கியுமே உவகையுடன்
அகிலத்தில் சமத்துவத்தை வளர்த்திடடி
அஞ்சுகமே சித்திரையாம் ஆரணங்கே!
ஆனந்தம் கொள்ளுதடி எதிர்பார்ப்பு
இதயமெலாம்
சஞ்சலங்கள் சரிவுகளை நீக்கிடவே
சந்தோசம் தாங்கியுமே வந்திடடி!

நல்லாட்சி அரசுகளும் நிலைபெற்று
நலமோடு மக்களும் சிரித்திடவே
பொல்லாத கயமைகளும் ஒழித்திடவே
பொறுப்புகளை இளையோரும் ஏற்றிடவே
முல்லைகளாய் மனங்களும் மலர்ந்திடவே
முறுவலுடன் எந்நாளும் தொடர்ந்திடவே
இல்லங்களில் இல்லாமை ஒழிந்திடவே
இன்முகமாய்ச் சித்திரையே இதந்தருவாய்

கலையோடு கல்வியுமே வளம்பெறணும்
கனிவான சமுதாயம் மலர்ந்திடணும்
நிலையாகத் தொடர்ந்திடுவோம் ஓரணியில்
நின்றிடுவோம் ஒற்றுமைக் கரமிணைத்து
விலையற்ற இயற்கையைப் போற்றியுமே
விருப்பமுடன் ஆற்றிடுவோம் நற்செயல்கள்
மலையெனவே நம்புகிறோம் சித்திரையே
மலராகி சுகந்தத்தைப் பரப்பிடடி!

இன்னலின் பிடிக்குள்ளே உலகமுமே
இரவுபகல் தவிப்புடனே மனங்களுமே
மின்னலென மறைந்திடட்டும்அத்தனையும்
மின்மினியாய் வந்துமே அணைத்திடுவாய்
கன்னலினைப் பொழிந்திடவே நாடுகிறோம்
கனவுகளை நிறைத்திடவேவேண்டுகிறோம்
வன்னமுறு ஆரணங்கே வந்திடுவாய்
வனப்புகளை அள்ளியுமே தந்திடுவாய்

ஊரெங்கும் பூவாசம் உனக்காக
உலவிடுதே தென்றலும் உனைத்தழுவ
ஆரவாரம் சிட்டுகளின் ஆலோலம்
ஆகாயம் பூமியெங்கும் பூபாளம்
வாராதோ நாளுமெனும் மனக்கோலம்
வஞ்சியாம் சித்திரைப் பெண்ணுனுக்காய்
சீராட்டக் காத்திருக்கோம் வந்திடடி
சித்திரையே இளவேனில் பெண்மகளே

உள்ளத்தை உரைத்திட்டேன் உணர்வுடனே
உயர்வுகளைத் சொரிந்திடடி சொந்தமுடன்
வெள்ளமாய்க் களிப்புகள் நித்திலத்தில்
வேணுகானம் இசைக்கட்டும் நித்தியமும்
அள்ளிவந்து செழிப்புகளால் சீராட்டும்
அவனியின் அழகெல்லாம் உன்னாலே
கள்வடியும் தேனாகி வந்திடுவாய்
களிப்புடனே காதலுடன் சித்திரையே!
..




## பங்குனி -8 கொண்டாட்டமும் மன்றாட்டமும்-

இன்றும் அணியணியாய் மக-
ளிர் தினத்தைச் சுதந்திரமென
நினைக்க அதே மாமி மச்சாள்
வர்க்கத்தினரின் திறந்த வெளிச்
சிறைக்குள்ச் சிக்குண்டு
சித்திரவதை அநுபவிக்கிறார்கள்

அநியாயமாயே நியாயக்
கூட்டுக்காய்த் தனித்தே
பனிப்போருக்குள்ப் புதைந்தே
பெண்ணன்று விழித்ததால்
உரிமைக்காகவும் உழைப்பின்
தலைவிதியையும் மாற்றித்
திரும்பிப் பார்க்க வைக்க
அங்கங்கே கண்ணிருந்தும் குருட-
ான ஆண்களால் வேலைக்கும்
கூலிக்கும் பலியாகும் பூவையரின்
கண்கள் புண்களாயே

அதிகார வர்க்க வக்கிர ரஷ்யாவின்
அரசுக்கு அடித்த ஆரம்ப மண-
ியின் ஓங்கிய ஓசையிலா
அமெரிக்கா ஏன் ஐரோப்பா கூட
ஆட்டங்காண வித்திட்டது சரிநிகர்
சமத்துவத்திற்க்குஐக்கிய நாடுகளே
ஐக்கியமாய் பெண்களுக்கேயொரு
நாளையே உருவாகக் கருக்
கொடுத்தாளோ ஆண்களுக்கான
பிரசவத்துக்காய்

வெறுமனே கருவைச்
சுமந்தவளாயல்ல சமூகத்தின்
விடிவுக்கான கருவையும்
உருவாக்கித் தர முடியுமெனக்
களமாடினதாலோ கற்பகத்தருவைப்
போல திருவாய்ப்
பொருத்தமானாள்நாடுகள் எங்கும்
பங்குனி எட்டுக் கொண்டாட்டமாய்க்
கூட அங்கங்கு பல கண்ணகிகளின்
வீடுகளில்மனங்கள் மலை-
லயான போராட்டங்களோடு
ஆர்ப்பாட்டங்களில்த்தான்
மன்றாட்டங்களோடு

**திரேஸ் மரியதாஸ் -- லண்டன்**

## சமுதாயத்தில் பெண்ணவள்!....

- இராஜேஸ்வரி சிவராசா -

காலையில் விழித்தெழும் பெண் அடுக்களையை நோக்கி ஓடுவாள்
வேலைபல விழுந்தடித்துச் செய்து வெளி வேலைக்கு ஓடுவாள்
சோலையான குடும்பப் பாரம் முழுவதையும் தான் சுமந்திடுவாள்
மாலை உறக்கத்திற்குப் போகும்வரை வேலை வேலை என ஏற்றிடுவாள்!...

சுற்றிச் சுற்றிப் பம்பரம் போல கடமைகளைச் செய்திடுவாள்
வற்றிய வயிற்றுடன் உடல் சளைக்காது ஓடியே உதவிடுவாள்
பற்றியே பந்தங்களை பேணியே பாசம் பொழிந்திடுவாள்
முற்றிய கனிபோல் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளித்திடுவாள்!...

தாயாய் தாதியாய் தாரமாய் நல் ஆசானாய் ஆனவள்
சாயாது இனிதுறும் இல்லத்தின் கோபுரம் ஆனவள்
ஏற்றி வைக்கும் ஏணிப்படிகளாய் தன்னலம் ஏதுமின்றியே
போற்றிப் புகழ் பெற்றிடும் பெண்ணால்தான் முன்னேற்றம்!...

கடமைதனில் செய்திடவே கலங்காது வாழ்ந்திடுவாள்
உடமைதனைச் சேர்த்து உரிமையோடு காத்திடுவாள்
கொடுமை தனில் வந்திடில் கொதித்தே எழுந்திடுவாள்
இடும்பை வந்திடினும் இயல்புடனே குடும்பத்தைக் காத்திடுவாள்!....

காலம் காலமாய் அடக்கப்பட்ட பெண்கள் இன்று
ஆலமர விழுதாய் ஆற்றும் அளப்பரிய பாங்கே அற்புதம்
முன்னேற்றப் பாதைக்கு முழு வடிவம் கொடுக்கும் பெண்
முன்னின்று உழைக்கின்றாள் முனைப்புடன் எழுகின்றாள்!....

## யாதுமாகியே நின்றாய் நீ..!

மொழியின் வடிவத்தின் மூலமாயாகினாய்
மூவுலகில் மூத்தவளே நீ
வெளியும் மண்ணும்
நீருமாய் மாறினாய்
வெற்றிடமில்லா நிறைந்தாய் நீ
வளியும் தீயையும்
வழங்கியே வருகிறாய்
வசந்தகாலத்து வடிவமாய் நீ
துளியாய் சுருங்கி
துறையாயுருவானாய்
தூசாயும்மிதக்கும் துகழணு நீ..!

ஒலியின் வடிவினில் உனது மூச்சு
உயிரின் உயிரே நீ
ஒளியின் உருவினில் பார்வை வீச்சு
உலவும் காலம் நீ
விழியின் அசைவினில்
விடியல் பூச்சி வேதனை ஒளடதம் நீ
பொழியும் மழையினில் புவியின்
பேச்சு பொன்னின் வார்ப்பும் நீ..!

நினது பிடியினில் நொடியின் மூச்சு
நீக்கமற நிறைந்தாய் நீ
உனது வடிவினில் உயிரின் பூச்சி
உலவும் காலமும் நீ
தனது சிறகினில் தாயின் பேச்சு
தாங்கிடும் பூமியும் நீ
எனது விடியலின் எழுகதிர் வீச்சு
எல்லாமாகி நின்றாய் நீ..!

**- அம்பலவன்புவனேந்திரன்..**

## சித்திரையாள்!...

அம்மா அப்பாவின் அன்பு
கிடைக்கட்டும்
ஆட்சி ஆளுமை செம்மையாய்
நடக்கட்டும்
இல்லங்கள் இனிதே என்றும்
சிறப்புறட்டும்
ஈடில்லாத ஈதல் குறைவின்றித்
தொடரட்டும்
உற்றார் உறவுகள் நண்பர்கள்
ஒன்றுபடட்டும்
ஊழல் ஊதாரித்தனங்கள்
மறையட்டும்
எதிரிகள் இல்லா வாழ்வு
கிடைக்கட்டும்
ஏழைகளுக்கு உதவும் பண்பு
வளரட்டும்
ஐக்கியம் சக வாழ்வு நன்று
வளரட்டும்
ஒடுக்குதல் ஏற்றத்தாழ்வுகள்
அழியட்டும்
ஓங்கார வாழ்வு என்றும்
கிடைக்கட்டும்

எந்நாளும் சித்திரையாள்
மலரட்டும்!........

**இராஜேஸ்வரி சிவராசா**

## தை சித்திரையிலும் புத்தாண்டு.....

- இரா . சம்பந்தன் -

சித்திரைப் புத்தாண்டு
தமிழர்தம் புத்தாண்டா ?
இல்லையென்றே இயம்பினாலும்
முன்னவர் வகுத்த
முறைமையினால்
பின்னவர் தொடர்கின்றார் . . . .

கிழக்கிலே கதிரவன்
கிரணங்கள் பரப்பி
அடிபெயரும் நாளதனைச்
சித்திரைப் புத்தாண்டாய்
முந்தையர் கணித்தனர் . . . .

முந்தையர் வழித்தடத்தைப்
பின்பற்றிச் செல்வதனால்
சித்திரையின் புத்தாண்டும்
சிறப்பெய்தி நிற்கின்றது .

மாவிலைத் தோரணம் கட்டி
மனைகளை யலங்கரித்து
மருத்து நீராடி
மங்கள விளக்கேற்றி
மகிழ்ந்திடும் மக்கள் .

தலைநக ரெங்கும்
அலையலையாய் மக்கள்
புடவை மாளிகைகளுள்
புகுந்தேறிச் சென்றே
விலைகொடுத்து வாங்குவர்
விதவிதயாய் ஆடைகளை !

அன்றலர்ந்த மலர்கள்போல்
அவனியிலே மக்கள்
புத்தாடை புனைந்து
பொலிவுறத் தோன்றுவர் !

பலவித உணவுகளும்
பலகார வகைகளும்
விருந்தினர் வருகையும்
விருந்தோம்பல் பண்பாடும்
தமிழர்தம் வாசல்தோறும் . . . .


சத்தான உணவுகளைச்
சமைத்துப் பரிமாறுவதில்
சளைத்தவர் நாமில்லை யென்றே
சாற்றிடும் தமிழர் , சிங்களவர் . .
. .

தமிழ்ச் சிங்களப் புத்தாண்டாய்த்
தரணியிலே மலர்வதனால்
புதியதொரு மாற்றத்திற்கு
வழிகாட்டி நிற்கின்றது .

ஈரினமும் கொண்டாடும் இந்நாளில்
பேரினவாதிகளின் சிந்தையிலே
மாற்றங்கள் தோன்றுமா ?
வேற்றுமைகள் மறைந்து
ஒற்றுமை நிலைபெறுமா ?

பணம்படைத்தோர் மட்டும்
பண்டிகையைக் கொண்டாட
வறுமையிலே வாடுவோர்
வெறுமைதனை யுடுத்துகின்றார் !

இயந்திர வாழ்க்கையிலே
ஒருநாள் வந்து
பூச்சொரிந்து சென்றாலும்
அந்நாள் திருநாளே !



## ஆபிரகாம் லிங்கன்........

**(12.21809 - 15.4.1865)**

மக்களால் மக்களுக்காய் மக்களினின் ஆட்சிதனை
தக்கவைத்த அமெரிக்கத் தலைவனாய் - பதினாறாம்
சனாதிபதிப் பதவியேற்று சாதனைகள் படைத்ததனால்
சனநாயகத்தை போற்றுதே சகம்.

வாழ்வினது வலியிலும் வறுமையின் கோரத்திலும்
தாழ்விலே உழல்பவரைத் தாங்கியே - கல்வியால்
நிறபேதச் சுவர்களையே நிர்மூலமாய் ஆக்கியதால்
உறவாக போற்றுதே உன்னை.

அங்குலமாய்த் தோல்விளழ ஆணிவேரை ஏழ்மைசூழ
சங்கிலியை அறுத்தெறிந்த சிங்கமாய் - அகிலத்தில்
அடிமைத்தளை நீக்கிடவே அரசியலில் புகுந்ததனால்
மிடிமை ஓடியதே மிரண்டு.


ஆதிக்கத்து நிறவெறியை அழித்தொழித்த போராளியாய்
சாதித்தாயே தலைமைதுவப் பண்பினால் - ஆபிரகாம்
லிங்கன் அமர்ந்திருந்த சிம்மாசனத்தை அலங்கரித்து
தங்கினாள் நீதியின் தாய்.

மானிடத்து உரிமைகளை மழுங்கடிக்கும் பேடிகளே
ஊனினைச் சிதைத்திட்டால் உதிருமோ - லிங்கனால்
நட்டவிதை நிலமெங்கும் நலத்தினையே சொரிவதனால்
பட்டுப்போகும் நிறவெறி பாரில்

சட்டங்களை நிறுவியே சமத்துவத்தைப் பேணியவரின்
திட்டங்களே உலகினில் தீர்ப்பானது தலைவனாய்
இருமுறை அரியணையில் ஏற்றிவைத்த அமெரிக்காவுன்
திருநாமத்தை சொல்லுதே தினம்

**- அம்பலவன்புவனேந்திரன்..**

---



**16 ம் பக்க விடைகள்.....**

1- உருவாகியுள்ள படம்

2- 34 வகையான காளான்கள்
அப்படத்தில் உள்ளன.

## மண் இதழிலக்கம் 229 இற்கான அட்டைப்படக்கவிதை.




இத்தரைக்கு தக்திவந்த ரத்தினமே
வித்துவத்தால் முத்தமிடும் சித்திரமே
சித்தத்திலே பக்தியூட்டும் சத்தியமே
நித்தியமுமே சித்திபெறும் சூத்திரமே
புத்தியிலே எத்திசையும் பத்தியமே
புத்தகமாய் தத்துவத்தை வைத்தனையே..

முத்துதிராப் பொத்திவைத்த நித்திலமே
முத்தமிழால் சத்திதரும் நத்தனமே
உத்தியுடன் தித்தித்திடும் உத்தரவே
உத்தமமாய் பொத்திவைத்த முத்திரையே
தைத்திங்கள் பூத்ததினால் சித்திரையே
கைத்திறனில் கொத்தானாய் மொத்தமுமே..

மத்தியத்தின் மெத்தையான உத்தமமே
கத்துங்கடல் ஒத்திகையின் மத்தளமே
பத்திரத்தின் மத்தியிலே தத்துவமே
பத்துமுறை சுத்தமான முத்துரதமே
எத்தனையோ உத்திகளின் சத்திரமே
முத்திபெறச் சத்திதந்திடுக கைத்தலமே..

**- அம்பலவன்புவனேந்திரன்..**

# குழந்தை வளர்ப்பில்!...

குழந்தைகளை கல்வி, விளையாட்டு, சமூகப் பொறுப்பு மற்றும் அடிப்படை வணிகக் கருத்துகளில் சிறப்பாக வளர்ப்பதற்கு ஒரு சமச்சீர், முழுமையான அணுகுமுறை தேவை. இங்கே அவர்களின் திறன்கள் மற்றும் மதிப்புகளை வளர்ப்பதற்கான ஒரு விரிவான வழிகாட்டி உள்ளது:

**1. கல்வி:** ஒரு வலுவான கல்வி அடித்தளத்தை உருவாக்குதல் அடிப்படைகளில் கவனம் செலுத்துங்கள். வாசிப்பு, எழுதுதல், கணிதம் மற்றும் விமர்சன சிந்தனை போன்ற அடிப்படை திறன்களை வலுப்படுத்துவதை உறுதிப்படுத்தவும்.
- இடைவினை கற்றல் கற்றலை வேடிக்கையாகவும் ஈடுபாட்டுடனும் மாற்ற விளையாட்டுகள், புதிர்கள் மற்றும் நடைமுறை நடவடிக்கைகளைப் பயன்படுத்தவும்.
- ஆர்வத்தை ஊக்குவிக்கவும்: அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து, அவர்கள் ஆர்வமுள்ள தலைப்புகளை ஆராய ஊக்குவிக்கவும்.
- வாசிப்பு பழக்கம்: சொல்லகராதி மற்றும் புரிதலை மேம்படுத்த வயதுக்கு ஏற்ற புத்தகங்களை அறிமுகப்படுத்தவும்.
- நேர மேலாண்மை: கல்வி மற்றும் பிற நடவடிக்கைகளை சமப்படுத்த ஒரு எளிய படிப்பு அட்டவணையை உருவாக்க கற்றுக்கொடுக்கவும்.
- நேர்மறை ஊக்கம்: அவர்களின் முயற்சிகள் மற்றும் சாதனைகளை பாராட்டி, நம்பிக்கை மற்றும் உந்துதலை உருவாக்கவும்.

**2. விளையாட்டு:** உடல் மற்றும் மன வலிமையை வளர்த்தல்
- பல்வேறு விளையாட்டுகளை அறிமுகப்படுத்துங்கள்: கால்பந்து, கூடைப்பந்து, நீச்சல், தடகளம் போன்ற பல்வேறு விளையாட்டுகளை முயற்சிக்க விடுங்கள்.
- தொடர்ச்சியான பயிற்சி: உடல் செயல்பாடுகளை ஊக்குவிக்கவும்.
- ஆரோக்கியமான போட்டி: நியாயமாக போட்டியிடவும், வெற்றி மற்றும் தோல்விகளை சமாளிக்க கற்றுக்கொடுக்கவும்.
- ஒழுக்கம் மற்றும் பற்று: பயிற்சி, நேரம் மற்றும் விடாமுயற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும்.
- முன்மாதிரிகள்: பிரபல விளையாட்டு வீரர்களின் கதைகளைப் பகிர்ந்து அவர்களை ஊக்குவிக்கவும்.

**3. சமூகப் பொறுப்பு:** பச்சாத்தாபம் மற்றும் தலைமைத்துவத்தை வளர்த்தல்
- மதிப்புகளை கற்பிக்கவும்: கதைகள் மற்றும் நிஜ வாழ்க்கை உதாரணங்கள் மூலம் நல்லொழுக்கத்தை கற்பிக்கவும்.
- சமூக சேவை: பூங்காவை சுத்தம் செய்தல், பொம்மைகளை நன்கொடையாக வழங்குதல் போன்ற சிறிய சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவும்.
- சுற்றுச்சூழல் விழிப்புணர்வு: மறுசுழற்சி, நீர் சேமிப்பு மற்றும் மரம் நடுதல் போன்றவற்றை கற்பிக்கவும்.

- குழு வேலை: குழு நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும்.
- பாத்திரம் வகித்தல்: சமூக சூழ்நிலைகளை கையாள கற்றுக்கொடுக்கவும்.

**4. வணிக அடிப்படைகள்:** தொழில்முனைவு மற்றும் நிதி அறிவை அறிமுகப்படுத்துதல்..
- பண மேலாண்மை : சிறிய நடவடிக்கைகள் மூலம் பணத்தின் மதிப்பை கற்பிக்கவும்.
- எளிய வணிகக் கருத்துகள்:பழங்கள், பானம் விற்பனை போன்றவற்றை அறிமுகப்படுத்தவும்.
- படைப்பாற்றல் மற்றும் புதுமை: பிரச்சினைகளை தீர்க்க படைப்பாற்றலை ஊக்குவிக்கவும்.
- இலக்கு நிர்ணயம்: சிறிய, அடையக்கூடிய இலக்குகளை நிர்ணயிக்க உதவவும்.
- தோல்வியிலிருந்து கற்றல்: தோல்வி என்பது கற்றலின் ஒரு பகுதி என்பதை கற்பிக்கவும்.

**5. அனைத்து பகுதிகளையும் சமப்படுத்துதல்**
- ஒரு தினசரி வழக்கம் உருவாக்கவும்: கல்வி, விளையாட்டு மற்றும் பிற நடவடிக்கைகளை சமப்படுத்தவும்.
- முன்னேற்றத்தை கண்காணிக்கவும்: அவர்களின் முன்னேற்றத்தை கண்காணித்து வழிகாட்டவும்.
- சுதந்திரத்தை ஊக்குவிக்கவும்: படிப்படியாக பொறுப்பை வழங்கவும்.
- குடும்ப ஈடுபாடு: அவர்களுடன் தரமான நேரத்தை செலவிடவும்.

**6.** கருவிகள் மற்றும் வளங்கள்..
- கல்வி பயன்பாடுகள்: Khan Academy Kids, Duolingo போன்றவற்றைப் பயன்படுத்தவும்.
- விளையாட்டு கிளப்புகள்: உள்ளூர் விளையாட்டு கிளப்புகளில் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- மதிப்புகள் பற்றிய புத்தகங்கள்: நல்ல அறிவியல் புத்தகங்களை அறிமுகப்படுத்தவும்.
- வணிக விளையாட்டுகள்: Monopoly போன்ற பலகை விளையாட்டுகளைப் பயன்படுத்தவும்.

7. **உணர்ச்சி மற்றும் மன ஆரோக்கியம்.**
- திறந்த தொடர்பு: அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்த ஒரு பாதுகாப்பான இடத்தை உருவாக்கவும்.
- மனதை அமைதிப்படுத்துதல்: மன அழுத்தத்தை நிர்வகிக்க எளிய பயிற்சிகளை கற்றுக்கொடுக்கவும்.
- முயற்சிகளை கொண்டாடுங்கள்: விளைவுகளை விட முயற்சிகளில் கவனம் செலுத்துங்கள்.

இந்த மூலோபாயங்களை இணைப்பதன் மூலம், குழந்தைகள் கல்வி, உடல், சமூக மற்றும் தொழில்முனைவு துறைகளில் சிறப்பாக வளர உதவலாம். பொறுமையாகவும், ஆதரவாகவும், நிலையானவராகவும் இருப்பது முக்கியம்.

# வெள்ளி மனிதனால் புனிதமானதே (சிறுகதை)

- திரேஸ் - லண்டன் -

அவளோ...பெரியவெள்ளியென எண்ணும்போது பெரிய வெள்ளியாயே நினைவுகள் மனவானில் பந்தாட ஆரம்பித்து விட்டது நந்தவனமாயே நர்த்தனமாடி அன்று கூடிப் பாடி ஆடி நாடிய அழகிய அன்பான அப்பா மம்மி சகோதரர்களெனக் கோவிலாயே இருந்தது குடும்பம் அந்த வயதி லும் அப்பவெல்லாம் செபிக்கக் கற்றுக் கொடுத்தது.

பெற்றோரும் அப்பம்மா அம்மம்மா அன்றியுமே! கோவிலில் குடும்பமாய் இருந்து செபித்ததும் பாடல்கள் பாடியதும் அப்பா வந்து ஏ! பார்த்துப் பார்த்துக் கொண்டிரு என்றதும் உடனே எழும்பி மெழுகுதிரிகள் அணையாதவாறு தீயைத் திரிகளின் வாயினில் ஏற்றியதும் விளக்குகளில் எண்ணையை வார்த்து மாறி மாறி ஊற்றியதும் ஊற்றெடுக்கிறதே அழகான நினைவுகளாயே வண்ணங்கள் நிறைந்ததாய்..

ஆண்டவர் பாடுபட்ட நாளுக்கு முதல்நாள் இரவிரவாக ஆயத்தமாக இருந்த அந்த இரவு வேளையில் அந்தக் கோவில் மனதில் வர அதுவும் ஒரு இன்பமான வரவுதான் மம்மி வந்து தங்கச்சி நித்திரை வந்தால் "படு "என்று கூறியதும் கொஞ்ச நேரம் உறங்கியதும் பின்பு எழுந்து அங்கேயே முகம் கழுவிப் பின்பு செபித்ததும் கூடவே தம்பி வந்து அக்கா செபம் சொல்லு என்றதும் என்றும் பசுமையாய் இருக்க வேண்டும் என்று இன்னும் நிறைக்கும் நினைவுகள்..

தங்கையின் குரல் அக்கா!அக்கா !இயேசு கடவுள்தானே அப்பவேன் இவ்வளவு கஸ்ரப்பட்டு மரணிக்க வேண்டும் என்று கேட்க்க நீ வாசிக்கவில்லையா எனது பாடுகளில்ப் பங்கேற்கவில்லை என்றால் எனது மாட்சியிலும் பங்கேற்க முடியாது என்றது பொறு! பொறு !உனக்கு அதை வாசிக்கிறேன் கேள்...என்றார்.

மாற்கு 8:31

" மானிடமகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள் தலைமைக்குருக்கள் மறை நூலறிஞர்களாலும் பாடுகளைப்பட்டு மறைநூல் அறிஞர்களால் உதறித்தள்ளப்பட்டு கொலை செய்யப்படவும் மூன்று நாளைக்குப் பின்பு உயிர்த்தெழவும் வேண்டுமெனக் கற்பித்தார் "

அப்படியா ! பாவம் இயேசு அப்பவேன் அடித்து வதைத்தார்கள் என்றாள் தங்கை மெல்லிய குரலால் அழுதபடி - - -.அழாதே ஏன் அழுகிறாய் நானும் நீயும் என்று ஒவ்வொரு நொடியும் அழுது புலம்பிக் கொண்டிருக்க அவர் எண்ணியிருக்க மாட்டார் மாறாக அவரே கூறினார்

உங்களுக்காகவும் உங்கள் குழந்தைகளுக்காகவும் அழுங்கள் - - - என்று அவரைச் சிலுவையில் அறையும்போது ஜெருசலேம் நகர வீதிகளில் அவரே கூறினார் அப்படியா ! என்றவள் செபிக்கத் தொடங்கினாள் அக்காவைப் பின்பற்றியே....

இவளுடைய கேள்விகள் இவளை மேலும் இவளைத் துளைக்க இயேசுவைக் காண எத்தனை பேர் காத்திருந்தார்கள் குணமடைந்தார்கள் என்று எண்ணிக் கொண்டே இருந்தாள் ஓ! எத்தனை புதுமைகள் செய்தார் தண்ணீரை இரசமாக்கியதிலிருந்து - - - என்று அதனால்த்தான் இத்தனை பாடுகளை இத்தனை ஆணிகளைச் சகித்தார் மரணத்தைத் தழுவிக் கொண்டார் போதாத்துக்குப் பால் வார்த்தது போல..

அம்மாவாகவே விளங்கிய அவளது அப்பம்மா அருகில் வந்தமர அம்மா சொன்னார் பிள்ளை இதை வருடாவருடம் நினைக்கிறது நல்லது அப்போதுதான் மீண்டும் மீண்டும் பாவத்தில் விழாதபடி எம்மை நாம் பரிசுத்தமாக்க முடியும் அதனால் அன்றாடம் குளித்து முழுகி உடலைச் சுத்தம் செய்வதுபோல மனதையும் படுக்கைக்குச் செல்லு முன்பு சுத்தம் செய்ய வேண்டும் இது வருடாவருடமல்ல அன்றாடம் நினைத்து மனமாற்றம் அடையவே இந்த வெள்ளி நம்மை அழைத்து நிற்கிறது என்றார்.

சரி! நானும் இயேசுவின் காயங்களையும் சிலுவை மரணத்தையும் சிந்தையில்த் தரித்து தூய்மையாக்க வேண்டும் என்று ஒரு வேதவாக்காய் உங்கள் சொல் மந்திரமாச்சுதே நன்றி அம்மா என்று அந்த அன்பான அன்னையை இறுகக் கட்டத் தழுவுகிறாள் பதிலுக்கு அவவும் அந்தப் பரிசத்துக்காய்க் காத்திருந்ததுபோல இருவரும் ஒட்டியுறவாடினார்கள் திடீ-ரென அண்ணா வந்து " எல்லாம் கேட்டுக்கொண்டுதான் இருந்தன் எனக்கும் ஒரு மனமாற்றத்தை உங்கள் உரையாடலே தந்திட்டுது"

தொடர்ந்து.. இதனால்தானோ புனித வெள்ளியென இயேசுவின் துன்பங்களை சிலுவையில் அறைந்த தினத்தை உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது என்று யோசித்துப் பார்க்கிறேன். இன்னுமின்னும் அதிகமாய் நேசிக்க வைக்கிறதே இயேசுவைப் போல வாழ வேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன் என்பது மட்டும் அல்ல உண்மையாகவும் நேர்மையாகவும் வாழ்க்கையில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றுகிறது.

அம்மா என்று மூவரும் ஆளாளுக்குக் கூற! இந்த வெள்ளி வானத்து வெள்ளியைப் போல எம்மை கோபம் , சண்டைசச்சரவு, விபச்சாரம், களவு, பொய், பொறாமை, குடிவெறி, பரத்தமை போன்ற பல ஊனியல்புகளில் இருந்து விடுவித்து நிறை வாழ்வை நோக்கி நடந்து ஒளியின் மக்களாகத் திகழ வைக்கிறது கலாத்தியருக்கு எழுதிய திருமுகம் எழவைத்து மகிழ அதனால்த்தான் இயேசுவே வெள்ளியாகியதாலோ சாதாரண வெள்ளியே புனித வெள்ளியாச்சே இந்த மனிதன் புனிதன் என்று தொடர - - -

# நட்பெனும்...

(சிறுகதை)

- கெங்கா ஸ்ரான்லி -



மொட்டு விரிந்த பூப்போல அவளது சிரிப்பு, ஆனாலும் அதற்குள் ஆயிரம் வலி உள்ளே இருக்குறது யாரறிவார் அதை. அவள் யாரிடமும் பகிர்ந்து கொள்ளவில்லைக் காரணம் சொல்லி அழ யாருமில்லை அதனால்தானோ. சமுதாயம் முன்னால் ஒன்று பின்னால் ஒன்று புறம் பேசும் தன்மையில் அவர்களிடம் தன் கதை கூறி ஏன் நளினக் கதையை கேட்க வேண்டும், அதனால் கதைப்பதில்லை. இப்படி இருக்கும் போது அவளது பள்ளித் தோழிஎதேச்சையாக்க் கோல் பண்ணினாள். அவள் பெயர் மாலா இவர்கள் இருவரும் அயலவர்கள் மட்டுமல்ல பாடசாலையில் ஒன்றாகப் பத்தாம் வகுப்பு மட்டும் படித்தவர்கள். ஆனால் மாலா படிப்பில் கெட்டிக்காரி பல்கலைக்கழகத்தில் படித்து பட்டமும் பெற்றுவிட்டாள்.

கலாவோபடிக்கவில்லை மேலே காரணம் குடும்ப வறுமை அத்துடன் அவளுக்குபடிப்பும் ஏறவில்லை.இப்படி இருக்கையில் கலாக்கு சுவிஸ் நாட்டிலிருந்து ஒரு மாப்பிள்ளை வந்தது பெற்றாரும் கலாவிற்கு கீழே இன்னும் நாலு பேர்
அத்துடன் வறுமை வந்தவர் சீதனம் கேட்க வில்லை அதனால் அவளுக்கு பதினெட்டு வயதிலேயே திருமணம் செய்து கொடுத்து அனுப்பி விட்டனர் அதன்பிறகு அவளது உழைப்பில் கலாவின் குடும்ப நிலை சந்தோசமாக இருந்தது. மாலாவும் மணமாகி வெளிநாடு வந்து மூன்று குழந்தைகளுடன் வசதியாக வாழ்கின்றாள் அவளும் எத்தனையோ தடவை கலாவுடன் கதைப்பதற்கு முயற்ச்சி செய்தும் முடியவில்லை. இன்று ஒருமாதிரிப் பிடித்து விட்டாள். மாலாவிற்கு மகிழ்ச்சி தனது தோழியுடன் கதைப்பதற்கு, ஆனால் அவளின் சோக்க் கதையைக் கேட்டதும் உடைந்து விட்டாள். கலாஎடுத்தவுடனே அழத்தொடங்கி விட்டாள் மாலா கேட்டாள் ஏன் அழுகிறீர் என்று சோகம்தொடர்கிறது.

கலா சொன்னாள் தான் வெளிநாடு வந்து ஆரம்பத்தில் மகிழ்ச்சியாக இருந்தது. தானும் வேலைக்குப் போய் உழைக்கும் பணம் தாயிடம் அனுப்பியது அவர்களும் நாளடைவில் நன்றாக வந்தது. மாலா சொன்னாள் ஓம் எனக்குத் தெரியும் தானே நான் கண்டனான். சரி மேலே சொல்லும் என இப்படி இருக்கையில் இவர்கள் திருமணம் செய்து பல ஆண்டுகள் ஆனால் பிள்ளைப் பாக்கியம் கிடைக்க வில்லை. அதனால் கணவனுக்கும் கவலை அவன் சூது விளையாடத் தொடங்கினான் கலாவும் பிள்ளைகுட்டியும் இல்லை

சரி இப்படி யாவது சந்தோசப் பட்ட்டும் என்று விட்டுவிட்டாள். தான்உண்டு தன்வேலை என்று கிடைக்கும் பணத்தை வீட்டுக்கு அனுப்புவாள். பெற்றாரும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். சரி இப்படி யாவது சந்தோசப் பட்ட்டும் என்று விட்டுவிட்டாள். தான்உண்டு தன்வேலை என்று கிடைக்கும் பணத்தை வீட்டுக்கு அனுப்புவாள். பெற்றாரும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். இந்த வேளையில் கலாவின் தந்தை மகளிடம் உனக்கு பிள்ளைகுட்டியும் இல்லை உன்கடைசித் தம்பியை வெளிநாட்டுக்கு அனுப்பலாம் தானே

எனச் சொல்ல அவளும்வட்டிக்குப் பணம் வாங்கித் தம்பியை பரீஸ ‟க்கு அனுப்பி விட்டாள். இந்த நிலையில் அவர்களுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. வீட்டில் சரியான கஷ்டம்

கணவன் விளையாட்டில் மூழ்கியதால் கடன் வேலையில்ல அவனுக்கு இவள் பெற்ற குழந்தையுடன் கூட நேரம் செலவிடாது வேலைக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம்.

அத்துடன் அவளுடைய வருவாயில்தான் வீட்டுச் செலவு அதுமட்டுமல்ல கணவனின் தண்டப் பணம் கட்ட வேண்டும் இதனால் கையும் கணக்கும் சரி. பிறந்த பெண் குழந்தையை சீராட்டி வளர்க்கக் கூட இல்லை அவளுடன் நேரம் ஒதுக்கவும் முடியவில்லை எனச் சொல்லி அழுதாள். அவள் மகளுக்கு ஒன்பது வயது கலாவிற்கு 45 வயது பதினெட்டு வயதில் கட்டி 36 வயதில் குழந்தை பெற்றிருக்கிறாள்.

பெரிய மகிழ்ச்சி இப்பவாவது தனக்குகடவுள் ஒரு பிள்ளையைத் தந்தாரே என்று, ஆனால் அவளுக்கு குழந்தைப் பாக்கியம் இல்லையே என்று அவளுடைய தாய் கூடக் கவலைப் படவில்லை என்பது பெரும் துயரம்.

குழந்தை பிறந்தாலும் அதனுடன் அதனது நேரத்தை செலவிட முடியவில்லை.வேலைக்குப் போகவேண்டும். இப்படியே பெண்ணுக்கும் 9 வயது ஆயிற்று, கலா வேலைக்கு செல்வதால் தனது வங்கிக் கணக்கு அட்டையை கணவனிடம் கொடுத்துள்ளாள், அவர் தான் பில் கட்டுவது மற்ற செலவு பார்ப்பது.

ஆனால் அவளுக்குத் தெரியாது அவர் என்ன செய்கிறார் என்று ஊரிலிருந்து கால் வரும் அவர்தான் கதைப்பார், முறைக்கு இவளது வீட்டார் இவளுடன் தானே கதைக்க வேண்டும் அப்படியல்ல அவர்கள் அவர் தலையை வாஷ் பண்ணி தங்களுக்கு கஷ்டம் கொஞ்சம் காசு அனுப்புங்கோ என்றால் இவர் அனுப்புவாராம் கலாவிடம் கேட்பதில்லையாம். அவளும் ஒன்றும் சொல்ல வில்லை,

அந்தப் பெண் குழந்தையைக் கூட விடுமுறைக்கு ஒருஇடமும் கூட்டிச் செல்வதில்லை காரணம் காசு இல்லை, பாவம் அவள் அழுது விட்டு ப் பேசாமல் இருப்பாளாம். ஒரு தங்கநகை கூட இல்லையாம் ஆனால் அம்மாக்கு தாலிக் கொடி காப்புச் சங்கிலி எல்லாம் வாங்கிக் கொடுத்து அவா போட்டுக் கொண்டு திரிகிறாவாம் கலாவோ ஒன்றுமில்லாமல் இருக்கின்றாவாம். இப்படிக் கூறியதும் மாலாக்கு கோபம் வந்து விட்டது என்ன நீர் உலகம் தெரியாதவளாக இருக்கிறீர்

உங்கள் வீட்டாருக்கு சொல்ல வேண்டியது தானே எனக்குக்கஷ்டம் அவருக்கும்வேலையில்லை அத்துடன் ஒரு பெண்குழந்தையும் இருக்கு அவளின் படிப்பு எதிர்காலம், அவர்களுக்கு கொடுத்தது காணும் இனித் தரமுடியாது என்று சொல்லும். எனச் சொன்னாள். சிலர் சொன்னார்களாம் கணவனை விவாகரத்து பண்ணும்படி ஆனால் அவள் செய்ய வில்லை பெண் பிள்ளை ஒன்று அடுத்தது அவன் சீதனம் இன்றித் திருமணம் செய்த நன்றிக்கடன். பாவம் கலா இப்படி ஒரு முட்டாளாக இருக்கிறாளே என்று மாலா நினைத்துக்கொண்டு சரி நிற்பாட்டு உனது புராணத்தை உன்னால் ரிக்கற் எடுத்துக் கொண்டு கொடுக்க முடியுமா எனக் கேட்க என்னிடம் அதற்குப் பணம் இல்லை என்றாள் கலா சரி நான் எடுத்துத் தருகின்றேன் நீரும் மகளும் வாங்கோ வந்த பின் என்ன செய்யலாம் என்று யோசிப்போம் என்று மாலா சொல்ல, கலாவும் அவர் உவதாக ஒப்புக் கொண்டாள். அவள் வந்து இனி என்ன நடக்குமோ பொறுத்து இருந்து பார்க்கலாம்!...

முற்றும்

## பெண் பற்றி ஓர் ஆண் எழுதியது!..

மனதைத் தொடும் வரிகள்..

- நான் பிறந்த போது தூக்கி அரவணைத்து மகிழ்வூட்டியவள் ஒரு பெண் - என் அம்மா
- நான் குழந்தையாய் இருந்தபோது என் கழிவுகளைச் சுத்தம் செய்து சீராட்டியவள் ஒரு பெண் - என்னைப் பெற்றவள்.
- என் குழந்தைப் பருவத்தில் எனக்காகப் பரிந்து என்னோடு விளையாடினாள் ஒரு பெண் - என் தாய
- நான் பள்ளிக்குச் சென்றபோது அன்புடன் கல்வி கற்பித்தவள் ஒரு பெண்
- என் ஆசிரியை
- நான் கவலையுடன் இருந்த போது தோள் கொடுத்து ஆறுதல் சொன்னாள் ஒரு பெண் - என் தோழி
- நான் கோபமாக இருந்தபோது தனது மழலைச் சொற்களால் என்னை மயங்க வைத்தாள் ஒரு பெண் - என் பிள்ளை.
- எனக்கு உறவாகவும் உயிராகவும் துணையாகவும் இருப்பவள் ஒரு பெண் என் மனைவி

.....................................................................................................................

## குறியாய்!...

சாதி, சமயம் பார்ப்பதில் குறியாய்
நிறம், குணம் பார்ப்பதில் குறியாய்
ஊர், பிரதேசம் பார்ப்பதில் குறியாய்
கல்வி, தொழில் பார்ப்பதில் குறியாய்
பணம், சொத்து பார்ப்பதில் குறியாய்
அத்தனையிலும் குறியாய் இருந்தும்
மகன், மகள் கலியாணத்தில்
படுதோல்வியடையும் பெற்றோர்கள்!..

## வேர்!..

இலை தெரிகிறது கிளை தெரிகிறது
பூ தெரிகிறது காய் தெரிகிறது
கனிதெரிகிறது மரநிழல் தெரிகிறது
வேர் தெரிவதில்லை உலகிற்கு
மண்ணுக்குள் இருந்துகொண்டே
உலகை வாழவைக்கின்றது வேர்!..



## 116 வயது மூதாட்டி காலமானார்...

116 வயது மூதாட்டி. உலகின் வயது மூத்த டோமிகோ இடுகா காலமானார்! உலகின் வயது மூத்த ஜப்பானிய சூப்பர் சென்டீனரியன் டோமிகோ இடுகா தன்னுடைய 116வது வயதில் காலமானார்.உலகின் வயது மூத்த நபர் காலமானார்

கின்னஸ் உலக சாதனை புத்தகத்தால் உலகின் மூத்த நபராக அங்கீகரிக்கப்பட்ட டோமிகோ இடுகா(Tomiko Itooka) டிசம்பர் 29 அன்று தன்னுடைய 116 வயதில் காலமானார்.ஜப்பான், ஹியோகோ மாகாணம், அஷியாவில் உள்ள வயதானோர் இல்லத்தில் அவர் தங்கியிருந்த நிலையில், அங்குள்ள ஊழியர்களால் இந்த செய்தி உறுதிப்படுத்தப்பட்டது.

குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய நண்பர்களுக்காக ஒரு தனிப்பட்ட இறுதிச் சடங்கு நடத்தப்பட்டது.1908 ஆம் ஆண்டு ஒசாகாவில் பிறந்த இடுகா நீண்ட மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கையை வாழ்ந்தார். உயர்நிலைப் பள்ளியில் வலுவான கைப்பந்து வீராங்கனையாக இருந்த இடுகா பிரபலமாக 10,062 அடி உயரமுள்ள மவுண்ட் ஒன்டேக் என்ற மலையை இரண்டு முறை ஏறியவராவார்.

கடந்த ஆண்டு தனது 115 வயது பிறந்தநாளை பூக்கள், கேக் மற்றும் மேயரின் வாழ்த்து அட்டையுடன் கொண்டாடிய இடுகா, வாழைப்பழம் மற்றும் கல்பிஸ் என்ற பிரபலமான ஜப்பானிய தயிர் பானத்திற்கு விருப்பம் கொண்டவர் என்று அறியப்பட்டது. உலகின் மூத்த நபராக தனது நிலை குறித்து தெரிவிக்கப்பட்டபோது, இடுகா எளிமையாக "நன்றி" என்று பதிலளித்தார்.

..................................................................................

## ஆறு செல்வங்கள்

அமெரிக்காவில் ஒரே சூலில் ஒரு பிரசவத்தில் மூன்று ஆண் மூன்று பெண் என ஆறு செல்வங்களைப் பெற்றெடுத்த தாய் - தந்தையையும் சேய்களையும் இங்கே காணலாம்.



இந்த முத்துக்கள் ஆறுபேரையும் தனது வயிற்றில் சுமக்க எத்தனை வேதனைகள் சோதனைகளைச் சந்தித்திருப்பார் இந்த அம்மா. அந்தப் பத்துமாதமும் தான்பட்ட துன்பங்களை சுயசரிதையாக எழுதி வெளியிட்டுள்ள இவர் பல சுவார்சியமான தகவல்களையும் சமூக ஊடகங்களுடன் பகிர்ந்திருக்கின்றார்.

குழந்தைகளைப் பராமரித்து அவர்களைப் பாதுகாக்கும் பணிகளில் அவரது கணவர் இருபத்திநாலு மணிநேரமும் பாடுபட்டு உழைத்து வருவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

தற்போது அக்குழந்தைகளுக்கு 5 வயதாகிவிட்டதால் பல பொறுப்புகள், கடமைகள் குறைந்து விட்டதாகவும் குழந்தைகளோடு ஓடி ஆடி விளையாடுவதால் நேரம் போவது எப்படி என்று தெரியாமல் ஆனந்தக்களிப்புதான். வீட்டில் ஒவ்வொருநாளும் ரகளையும் , சத்தமும், கலகலப்பம்தான். அருமை ஒரு பிள்ளைக்கே வருடக்கணக்கில் ஏங்கும் தம்பதிகளின் மத்தியில் ஒரே தடவையில் 6 பிள்ளைகள் என்றால் சொல்லவும் வேண்டுமா?..

.........................................................................

## நல்லதோர் குடும்பம் பல்கலைக் கழகம்

இன்று உலகில் பல நாடுகளில் குழந்தைகள் பிறப்பு வீதம் குறைந்துகொண்டு செல்கின்றது. இதற்குப் பல காரணங்கள் முன் வைக்கப்படுகின்றன. பொருளாதார நெருக்கடி, காலநிலைச் சிக்கல், பணம் பொருள் தேடல், உல்லாச வாழ்வு தேடல், சுகபோக வாழ்க்கைமுறை எனப் பல காரணிகளை அடுக்கிக்கொண்டு போகலாம். இது உலகம் வாழ் சகல சமூகங்களிலும் காணப்படும் செய்தியே இப்படத்தில் காணப்படுபவர்கள் ஒரு தாயின் பிள்ளைகளாவர் அதாவது 16 பிள்ளைகளைப் பெற்ற சீமாட்டி அவுஸ்திரேலியாவில் வசிக்கின்றார். கணவரும் பதினாறு பிள்ளைகளும்தான் இப்படத்தில் வரிசையாக நிற்கிறார்கள்.

அண்மையில் இவர்களை அழைத்து அரச மரியாதைபோல கௌவித்து அவுஸ்திரேலியாவின் சிறந்த தம்பதிகள் எனப் பட்டமும் சூட்டி டொலர்களையும் பரிசுகளையும் அள்ளி வழங்கிக் கொரவித்தனர்.

இன்று ஓரிரு பிள்ளைகளோடு நிறுத்தி வீடுகளில் படாதபாடுபடும் பெற்றோர்களே.. இத்தம்பதிகளின் நிலமையைக் கொஞ்சம் யோசித்துப்பாருங்கள். எவ்வளவு வேதனைகள் துன்பங்கள் அவர்களுக்கு.



இந்த வீட்டை ஒருதடவை கற்பனை செய்து பாருங்கள்.. சாப்பாடு, குளியல்அறை, சமையல்அறை இருக்கைகள், படுக்கைகள் எல்லாம் எந்த நேரமும் பிள்ளைகளால் நிரம்பித்தான் வழியும். ஹொட்டல்தான் இவர்களில் வீடு. ஆனந்தம் கொண்டாடும் அழகான குடும்பத்தை நாமும் வாழ்த்தி மகிழ்வோம்.!...

# நான்தான்!... மதவடி மயிலன்!...

நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும்சுகம் என்று நினைக்கிறன்..

இனி கோடைகாலத்தில் பலபேர்தாய் நாட்டுக்குப் போக ஆயத்தங்கள் செய்துகொண்டிருப்பியள் என எண்ணுகின்றான் இந்த மயிலன் பலர் கண்டதெல்லாததையும் திண்டு கொழுத்து நிறைகூடியும் விடுவீர்கள் முன்கூட்டியே அவதானம் செலுத்துங்கோ. சொல்வழி கெட்காவிட்டால் பிரசர், சீனி வருத்தம் கொலஸ்ரோல் என டாக்குத்தர்மாரிடம் மாறி.. மாறிச் செல்ல வேண்டியதுதானே...

ஊருக்குச் சென்று அங்கு பந்தா காட்டி, தண்ணியடித்து கூழும் கும்மாளமும் அடிப்பவர்கள் தமது பிள்ளைகளுக்குச் சாமத்தியச் சடங்கு கலியாணம் என தமது சாதி, சமயம் பார்த்துச் செய்து வைத்தவர்கள், 40, 50, 60, 70, 80 எனப்பிறந்தநாள் கொண்டாடுபவர்கள் பல ரகத்தினர் செய்யும் அட்டகாசங்களோ கண் கொண்டு பார்க்க முடியாது. அந்தளவுக்குக: கொண்டாட்டங்கள் களைகட்டும் என எதிர்பார்க்க வேண்டியதுதான்...

நம்மட நாட்டில பொருளாதாரப் பிரச்சனையால் பெரும் நெருக்கடி. இதனால் நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாடுகளுக்கு எப்ப ஓடலாம் என்று பல்லாயிரக் கணக்கானோர் படாத பாடுபடுகுதுகள் பாருங்கோ.. வேலை வெட்டி ஒன்றும் இல்லாமல் வெளிநாடுகளில் இருந்து வரும் பணங்களை நல்லாய் அனுபவிக்கும் கூட்டத்தினர் மிக அதிகம் பேர்.



அது அப்படி இருக்கையில் மழை வெள்ளமும் கடும் வெப்பம் ஏற்பட்டு நாடு முழுவதும் ஒரே அல்லல்தான் உயிரழிவுகள் குறைவு அகதி முகாம்களில்பெருந்தொகையான நமது உறவுகள் பெரும் துயரப் படுகிறார்கள் என்பது உண்மையாகும். அரசாங்கமும் பல தொண்டு நிறு வனங்களும் நல்ல பணிகளைச் செய்கிறார்கள். இவர்களை வாழ்த்த வேணும் பாருங்கோ.

இதில் என்ன செய்தி என்றால் நிவாரணத்தைக் காட்டி நம்மட ஆட்கள் பல மோசடிகளிலும் ஈடுபடுவது வெட்கக் கேடான விடையமாகும். ஏழைமக்களுக்குக் கொடுக்கும் நிவாரண உதவிகளிலும் மோசடி செய்கிறார்கள் என தகவல் இருக்குது பாருங்கோ.

இதில் உண்மை என்ன வென்றால் இந்த முறை மழை வெள்ளத்திற்குப் புலம்பெயர் உறவுகள் நிறையப்பேர் அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். நானும் மண் ஆசிரிருக்கு சிறு தொகை வழங்கினேன் நீங்களும் முடிந்த அளவு உதவிதால் மண் ஆசிரியர் பெருந்தொகைப் பணத்தைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுப்பியதாகச் சொன்னார். அவருக்கு நன்றிகள்... அவருக்கு ஒரு ”ஓ” போடுவம்.!..

சரி..சரி..இப்படியே அடுக்கிக்கொண்டு போகலாம்.. இனி விசயத்துக்கு வருகிறேன்.. இதுவும் வெளிநாட்டுத் தமிழனின் குடும்பப் பிரச்சனையாக இருந்தாலும்.. சமூகத்தைப் பாதிக்கும் விடயம் என்றுதான் இந்த மயிலன் பார்க்கிறான்.

வெளிநாட்டு ஒரு யாழ்ப்பாணத்துத் தமிழன் அன்று இல்லாத பொல்லாத பொய்களையும் புரட்டுகளையும் சொல்லி 1985 அளவில் வெளிநாட்டுக்கு யேர்மனிக்கு வந்து சேர்ந்தவன்தான். இங்குவந்து தனது மனைவியையும் ஐந்து பிள்ளைகளையும் அடுத்த வருடமே கூட்பிட்டு விட்டான் மேலும் ஐந்து வருடங்கள் சோஸல் பணமும் அள்ளிக் கொட்ட களவாகவும் வேலைசெய்து உழைத்த பணத்தில் தனது ஐந்து பிள்ளைகளையும் சாதி சமயம் மாறாமல் தனது ஊரவர் உறவுகளின் பிள்ளைகளைக் கலியாணம் செய்து ஐந்து கண்டங்களிலும் வாழ வைத்துவிட்டு இப்ப தானும் மனைவியும் ஒவ்வொரு நாடாகச் சுற்றித்திரிகிறதே வேலையாகிவிட்டது. வெளிநாட்டு வாழ்க்கை அவர்களுக்கு நல்ல அதிஸ்டம்தான் பாருங்கோ..

இந்தத் தமிழன் வெளிநாடு வந்ததும் தனது குடும்பம் முழுப்பேருக்கும் சிற்றிசென் எடுப்பதற்காக ஊரிலுள்ள தனது வீட்டையும் காணியையும் தனது சகோதரிக்கு பெயர் மாற்றியும் 40 வருடங்கள் முடிந்துவிட்டது.

மனிதனுக்கு வயதுகூடக் கூட சகல ஆசைகளும் குறையும் என்பார்கள். ஆனால் இன்றைய வெளிநாட்டுத் தமிழர்களுக்கு வயது கூடக் கூட சகல ஆசைகளும் பெருகிக்கொண்டுதான் போகின்றது. மனுசனுக்க காசும் இளமையும் கைகொடுக்க கடந்த சிலவருடங் களாக ஊர் சென்று வருவதும் வழக்கமாக இருந்ததுபின்னர் பெண், பொன் என்ற ஆசைகளோடு மண் ஆசையும் ஒட்டிக்கொண்டது பாருங்கோ..

40 வருடங்களுக்கு முன்னர் தான் சகோதரிக்குக் கொடுத்த காணியையும் வீட்டையும் பறிக்க வேண்டும் எனத்திட்ட மிட்டதோடு தனக்கு வருத்தம் தான் ஊரில்வந்து வாழப்போகின்றேன் என நாடகமாடி இப்ப வீட்டையும் காணியையும் திருப்பித் தருமாறு சகோதரி குடும்பத்தோடு ஒரே பிரகளமாம்.

சகோதரிக்கும் 4 பிள்ளைகள். வெளிநாட்டிலும் ஒருவரும் இல்லை நான்கு பேரும் வயது வந்தவர்கள் பாடசாலையிலும் பல்கலைக் கழகத்திலும் படிக்கிறார்கள். புருசன் சாதாரண கூலித்தொழிலாளி. வறுமையில் தான் வாழ்கிறார்கள்.

இந்த நிலையில் தனது திமிர்த்தனத்தில் ஒரு வீதம்கூட மனிதத் தன்மையில்லாமல் இந்தப் படுபாவி தனது சகோதரி என்றும் பாராமல் திருப்பித் தரச் சொல்லிக் கேட்கிறானே இந்தக் கொடுமைக்காரன். இந்த யுத்தம் இப்போ ஒரு வருடமாக நீடித்தது.

தனக்கு வயதேறிய காலத்தில் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் எல்லாம் 5 கண்டங்களிலும் ஓகோ ஆகா என்றும் வீடும், காரும் காணியும், சொத்தும் குவித்து வைத்துக்கொண்டும் சுகபோக வாழ்வு வாழ்வு வாழ்ந்துகொண்டும்

பேராசையால் இப்படி தாங்கள் நாற்பது வருடங்களாகக் குடியிருந்த வீட்டைத் திருப்பித் தரச்சொல்லுகிறானே. அதுவும் நஸ்டஈடும் இல்லையாம். இவை மட்டுமா..பணத்தை அள்ளி விசுக்கி ஆவாக்குழு அடி தடிக்குழுக்களுக்கு காசையும் போத்தலையும் வேண்டிக் கொடுத்து அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் தொடருகின்றது இந்தப் படுபாவியின் செயல் பாருங்கோ... கனகச்சிதமாக ரகசிய முறையில் அவர்களை வீட்டை விட்டு எழுப்ப அந்த வெளிநாட்டு கொழுத்த சகோதரன்.. பாசம்தான் எங்கே?.. காசுக்கும் சொத்துக்கும் முன்னால் எல்லாம் வெறும் தூசுதான் என இந்த மயிலன் சொல்லவில்லை எங்கட பழைய ஆட்கள் எப்பவோ சொல்லிவிட்டார்களே...

இந்தக் கொடுமைக்கு என்ன செய்வதென்றே தெரியாமல் அந்தச் சகோதரி குடும்பம் தீயில் விழுந்தவர்கள் போல தத்தளிக்கின்றது. எதிர்த்துப் போராட மனமில்லை, வசதியும் இல்லை. நீதி நியாயம் கேட்க யாரும் இல்லை. ஆட்பலமும் இல்லைப் பணப்பலமும் இல்லை. வேறு சொத்துப் பலமும் இல்லை. இதுதான் வாழ்க்கையா என இந்த மயிலன் சிந்திக்கிறான். பணம் இல்லாவிட்டால் எதுவுமே நடக்காது என்று இந்த உலகம் சொல்வது சரியோ பிழையோ என இந்த மயிலனுக்கு விளங்கவில்லை.

இப்ப ஒரு சதம் கூடநட்ட ஈடு இல்லாமல் உடன்பிறந்த சகோதரன் அந்தப் பெருஞ்சாளி வீட்டைப் பறித்தெடுத்துக் கொள்ள அந்தக் குடும்பம் நடுத்தெருவில்

இப்படிப்பட்ட தறுதலைகள், நாய்களை எல்லாம் சகோதரன், இரத்த உறவு என்று சொல்லலாமா?.. மன்னிக்கவும் நாய்கள் நன்றியுள்ள மிருகம் எந்த ஆபத்திலும் தன்னோடு வாழ்ந்த வரைக் காப்பாற்றும். மனிதர்களோ தன்னோடு வாழ்ந்தவர்களை ஆபத்தில் தள்ளிச் சாக்காட்டுவார்கள் அப்படிப்பட்டவர்கள் தான் பல மனிதர்கள் இந்த உலகத்தில என இந்த மயிலனின் கண்டிருக்கிறான்.

இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏராளம் நமது தமிழ் மண்ணில் அன்றாடம் நடந்துகொண்டுதான் இருக்கின்றது. கூட்டிக் கழித்துப் பார்த்தால் எல்லாம் வெளிநாடுகளின் யூரோ, டொலர், பவுண்ட், பிராங் தான் காரணம் என்பதே முடிவாகும். நமது நாட்டின் மிதமிஞ்சிய அதுவும் தமிழர் வாழும் வடகிழக்கில் மிக..மிக அதிக கொடுமைகள் நடந்தேறிய வண்ணமே உள்ளன.

கொஞ்சம் சிந்தியுங்கோ ராசாக்கள் ராசாத்திகளே!..வெளிநாட்டு வாழ்க்கையும் பணமும் இல்லை என்றால் என்ன செய்திருப்பீர்கள். உங்கட நிலமைஎப்படி? இருந்திருக்கும். வெளிநாட்டுப் பகட்டு வாழ்வுக்காக சொந்தங்களின் வாழ்வை சூனிய மாக்குவதா!..

மரணம் இன்றோ நாளையோ நடக்கும்... இருக்கும் வரை அன்பாகவும் பிறரை வாழவைத்து நீங்களும் வாழப்பாருங்கள். பிறரை வதைத்து நீங்கள் சொகுசு வாழ நினைத்தால் இறுதியில் நீங்கள் விழுந்து..விழுந்து கும்பிடும் தெய்வமும் ஒன்றுமே தராது ஒரு நிமிடம் சிந்தியுங்கோ என இந்த மயிலனின் வேண்டுகோள்!..அப்ப வாறன்.. அடுத்த விசயத்தோட..."காயமே பொய்யடா காற்றடைத்த பையடா"...... இதுதான் நமது உடல் என்பதை மறந்துவிடாதையுங்கோ!...

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| ப | ங் | கு | ணி |
| ரு | பு | ப் | சீ |
| ப் | க | வ | லை |
| பு | ப் | ரி | சி |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | க | ளி | ர் | தி | ன | ம் |
| ரு | ம் | க | த | த் | பு | த |
| ம | ரி | சே | ச் | க | வ | சா |
| க | ர் | ண | ன் | ர | வீ | மா |
| ள் | ம் | க | ல | க | னி | க |
| ள | ஆ | ண | வ | ம் | ன் | ள் |
| ன் | ய | ரி | சூ | றா | வ | ளி |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 3 | 8 | 6 | 5 | 2 | 9 | 7 |
| 9 | 5 | 6 | 2 | 3 | 7 | 4 | 8 | 1 |
| 2 | 8 | 7 | 4 | 9 | 1 | 5 | 3 | 6 |
| 8 | 6 | 2 | 9 | 7 | 3 | 1 | 5 | 4 |
| 3 | 4 | 1 | 5 | 8 | 6 | 9 | 7 | 2 |
| 7 | 9 | 5 | 1 | 4 | 2 | 3 | 6 | 8 |
| 1 | 3 | 8 | 6 | 5 | 4 | 7 | 2 | 9 |
| 5 | 2 | 9 | 7 | 1 | 8 | 6 | 4 | 3 |
| 6 | 7 | 4 | 3 | 2 | 9 | 8 | 1 | 5 |

# உலகின் சிறந்த புத்திசாலி நாடுகள்..... ஐரோப்பிய நாடுகள் ஆதிக்கம்...

உலகின் முதல் 10 சிறந்த புத்திசாலி நாடுகள் எவை என்பதை இங்கே பார்க்காலம்.இப்பட்டியலில் பத்தில் 9 இடங்களை ஐரோப்பிய நாடுகள் பிடித்துள்ளன.

பிரித்தானியாவில் தொழிலை பதிவு செய்ய புதிய விதிமுறைகள் அறிமுகம் உலகின் புத்திசாலி நாடுகளைத் தேர்வு செய்வது எளிதான செயல் அல்ல. ஆனால் World of Card Games வெளியிட்ட புதிய ஆய்வு இந்த விஷயத்தில் ஒரு சிறப்பான தரவரிசையை வழங்கியுள்ளது.
Nobel Prize Organization, World Population Review, U.K. Office for National Statistics மற்றும் U.S. Census Bureau போன்ற மதிப்புமிக்க தரவுகளைப் பயன்படுத்தி இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.
புத்திசாலி நாடுகளின் தரவரிசை

1. சுவிட்சர்லாந்து
2. பிரித்தானியா
3. அமெரிக்கா
4. நெதர்லாந்து
5. பெல்ஜியம்
6. ஸ்வீடன்
7. ஜேர்மனி
8. போலந்து
9. டென்மார்க்
10. பின்லாந்து

இந்த ஆய்வின் அடிப்படையில் சுவிட்சர்லாந்து (Switzerland) 92.02/100 மதிப்பெண்களுடன் முதல் இடத்தை பிடித்துள்ளது.

இது புத்திசாலித்தனத்திற்கான பல காரணிகளை உள்ளடக்கியது:
- 1,099 நொபல் பரிசு பரிந்துரைகள்
- 99.24 IQ சராசரி
- 40.02% பேர் குறைந்தது பட்டம் (Bachelor’s degree) பெற்றுள்ளனர்
- 18.05% பேர் மாஸ்டர் பட்டம் (Master’s degree) பெற்றுள்ளனர்

இந்த 5 நாடுகளுக்கு பயணிக்க வேண்டாம்: கனேடிய அரசு எச்சரிக்கை

ஐரோப்பாவின் ஆதிக்கம்

இந்த பட்டியலில் ஐரோப்பிய நாடுகள் பெரும் இடத்தை பிடித்துள்ளன.

அமெரிக்கா மட்டுமே ஐரோப்பாவிற்கு வெளியே இருந்தும் மூன்றாம் இடத்தை பிடித்துள்ளது.

பிரித்தானியா இரண்டாம் இடம் பெற்றுள்ளது, இதற்கு முக்கிய காரணம் 2,393 நொபல் பரிசு பரிந்துரைகள் மற்றும் IQ 99.12 ஆகும்.

உலகின் முதல் CNG Scooter-ஐ அறிமுகப்படுத்திய TVS., 84 கிமீ மைலேஜ்!
நெதர்லாந்து நான்காம் இடத்தில் உள்ளது, இது 100.74 IQ சராசரி கொண்டுள்ளது. ஜேர்மனி உயர் IQ மற்றும் நொபல் பரிசு பரிந்துரைகள் அதிகம் இருந்தாலும், குறைந்த பட்டப்படிப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை காரணமாக முன்னணியில் இல்லை.
இந்த தரவரிசை புத்திசாலித்தனத்தை அளவிட பல்வேறு காரணிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் காட்டுகிறது.

..............................................................................................................................................

## அந்தநாள் ஞாபகம்!...




இப்படி ஒரு வண்டி அன்று தெருக்களில் (சீமெண்ணெய்) மண்ணெண்ணை விற்றுக்கொண்டு வரும். காஸ் அடுப்பு என்றால் என்ன என்றே தெரியாத காலகட்டம் அது.. சிலர் விறகு அடுப்பிலும் இதை சிறிது ஊற்றித்தான் அடுப்பை பற்ற வைப்பார்கள். இப்படிச் சமையல் உபயோகத்திற்கு எல்லாமே அந்த எண்ணெயைத்தான் பயன்படுத்த வேண்டும் என்பதால் இதற்குப் பயங்கர " டிமாண்ட்."..

அவ்வளவு எளிதில் கிடைக்கவும் செய்யாது. ரேசன்கடைகளில் (சங்கக்கடை) பல மணி நேரம் காத்து இருந்துதான் வாங்கவேண்டும். தெருக்களில் வரும் வண்டிகளிலும் வரிசையில் நின்றுதான் வாங்க வேண்டும். அதுவும் சீக்கிரம் தீர்ந்தால் வெறும் கையோடுதான் வீடு திரும்ப அப்பா, அம்மா, தாத்தா, பாட்டியிடம் ஏச்சும் வேண்டவேணும்.

இப்படி ஒரு வாழ்க்கை அன்று வாழ்ந்தோம் என்று சொன்னால்கூட இப்போது உள்ள தலைமுறை நம்பவே மாட்டார்கள். **(சுவைத்துத்தந்தவர் - சர்வேஸ்வரி)**




## மூர்க்கமான முதலைகள்....

**-ஏ.ஜே.ஞானேந்திரன்-**

இதை ஒரு இராட்சத பல்லி என்று சொல்லி விடலாமா?
இது ஊர்வன இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு என்பதோடு, தவளை போல நீரிலும், நிலத்திலும் இதனால் வாழமுடியும். இதன் வலுவான வால்கள் இரைகளைக் தாக்க உதவுகின்றன. ஆபிரிக்கா, ஆசியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா என்று நான்கு கண்டங்களிலும் தாராளமாகக் காணப்படுகின்றன.

**நைல் நதிப் பல்லி**

முதலையும் மூர்க்கனும் கொண்ட பிடி விடாதவர்கள் என்கிறார்கள். உண்மைதான் முதலைப் பிடியில் அகப்பட்டு விட்டால் மீள்வது முடியாத விடயந்தான். முதலை என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் புராதன கிரேக்க மொழியிலிருந்தே தோன்றியது என்கிறார்கள். "நைல் நதிப் பல்லி" என்று அவர்கள் இதை வர்ணித்திருக்கின்றார்கள். இந்த முதலைகளை உப்பு நீர் முதலைகள், நன்னீர் முதலைகள் என்று இரு பிரிவாக வகுக்க முடியும். குளங்கள் ஆறுகளில் காணப்படபவைதான் நன்னீர் முதலைகள். கடலில் வாழ்பவை உப்பு நீர்முதலைகள். நன்னீர் முதலைகள் உப்புநீர் முதலைகளை விட அளவில் பெரியவையாக இருக்கின்றன. நைல் முதலைகளும், உப்பு நீர் முதலைகளும், எருமைகள், மான்கள், காட்டுப் பன்றி போன்றவற்றை பிடித்துண்ணுகின்றன. ஆனால் குளத்து முதலைகள் மீன்களையே உணவாகக் கொள்கின்றன.

சமிபாட்டுக்கு வயிற்றில் அமிலம்.பார்ப்பதற்கு மெதுவாக அசையும் ஒரு உயிரினம் போல்தெரிந் தாலும், மிருகங்களைத் தாக்கும் சமயங்களில் மிக வேகமாக முதலைகள் செயற்படுகின்றன. சுறாக்கள், புலிகளைக் கூட இவை தாக்கிக் கொன்றிருக்கின்றன. இதன் வயிற்றிலுள்ள அமிலம் , இவை பிடித்துண்ணும் விலங்குகளின் குளம்புகள், எலும்புகளையெல்லாம் மிகச் சுலபமாகச் சமிபாடைடைய வைத்து விடுகின்றது. ஒரு பீ.பீ. சி ஆய்வறிக்கையின் போது நைல்

முதலைகள் பற்றிய ஆச்சரியமான ஒரு தகவலை ஒளிபரப்பி இருந்தார்கள். அதாவது இதன் உடலில் நடக்கும் இரசாயன மாற்றங்கள், அதன் உடலில் அதிக அளவு அமிலத்தை உற்பத்தி செய்து, வயிற்றுள் இருக்கும் மிருகத்தின் உணவை இலகுவாக சமி பாடடைய உதவுகின்றது என்பதை இந்த ஒளிபரப்பு மூலம் அறிய முடிந்துள்ளது. முதலைகள் தமது சமிபாட்டு செயற்பாட்டை துரிதப்படுத்த கற்களைக் கூட விழுங்குகின்றன என்பது நமக்குத் தெரியாத ஒரு விநோ-ாதமான தகவல்.

**காட்டில் ஒரு தோட்டி:-**

சந்தர்ப்பம் கிடைத்தால் இறக்கும் நிலையை எட்டிய யானை, நீர் யானை-யைக் கூட இவை தாக்கி உண்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. இறந்த உடல்களை ஒரு கை பார்ப்பதிலும் முதலைகள் பின்னிற்பதில்லை. நகரில் காகங்கள் செய்யும் தோட்டி வேலையை காட்டில் முதலைகள் செய்கின்றன. அது மாத்திரமல்ல . ஏனைய மிருகங்கள் கொன்றதைக் களவாடி உண்ணும் கில்லாடிகள் முதலைகள். இது பழங்களையும் உண்பதுண்டு என்பது இதன் கழிவு-களில் காணப்பட்டவிதைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இரவு வேட்டைக்காரர்களான இவற்றிற்கு இரவில் நன்றாகவே கண்தெரியும். மோப்ப சக்தியும் அபாரம். இதன் காரணமாக தூரத்திலுள்ள மிருகங்கள் தண்ணீரிலோ அல்லது தரையிலோ நிற்கும்போது, தன் மோப்ப சக்தி கொண்டு இது அறிந்து விடும். இதன் செவிப்புலனும் மிக நன்றாக இருக்கின்றது

அடிவயிற்றால் ஓடும் முதலை கள் சிறு தூரமாயிருந்தால் அது நீரிலோ அல்லது தரையிலோ இதனால் வேகமாக ஓட முடியும்.

அவுஸ்திரேலியாவின் நன்னீர் வாழ் முதலையொன்று மணிக்கு 17 கி.மீற்றர் வேகத்தில் ஓடுவது பதிவிலுள்ளது. கியூபா முதலைகள், நியூகினி முதலைகள், ஆபிரிக்க குள்ள முதலைகள் உட்பட சில இனங்கள் "பாய்ச்சல்" முறை மூலம் நகர்வதாகச் சொல்லப்படுகின்றது. முதலைகள் வேகமாக ஓடுகின்றன என்று சொல்வது, பாம்பைப் போல அடிவயிற்றால் அசைந்து கால்களை துடுப்புகள் போலப் பரப்பி ஓடுவது தான்!. இது கால்களை உயர்த்தி நிமிர்ந்து நடக்கும்போது, அதிக பட்சம் மணிக்கு 5 கிலோ மீற்றர் வேகத்தில் இவை நடக்கின்றன.

இவை தாம் வாழுமிடத்தை விட்டு வெகுதூரம் சென்றாலும், தமது இடத்தை சரியாகக் கண்டறிந்து மீண்டும் "தமது வீட்டுக்கு" வந்துவிடுகின்றன. வட அவுஸ்திரேலியாவில் மூன்று முதலைகள் தாம் வழமையாக இருக்கும் இடத்திலிருந்து 400 கி.மீற்றர் தூர அளவிற்கு சென்றுவிட்டு, மீண்டும் அதே இடத்திற்குத் திரும்பியுள்ளன. இவற்றின் உடல்களில் ஆய்வாளர்கள் தடயமறியும் கருவிகள் பொருத்தி வைத்திருந்தமையால், இந்த அபூர்வ சிறப்பியலைக் கண்டறிந்துள்ளார்கள்.

**கூடிவாழும் குணமுண்டு:-**

இவை தனித்து வாழும். இவை ஒரு குழுவாக வாழாவிட்டாலும், உணவருந்தும்போதோ அல்லது வெயிலில் காயும்போதோ பல முதலை கள் கூடி ஒரு இடத்தில் நிற்கின்றன. உப்புநீர் முதலைகள் மூர்க்கத்தனம் அதிகம் கொண்டவை. பிராந்தியரீதியாக வாழும் இனம் இது! ஒரு வளர்ந்த ஆண் முதலை எந்தக் காரணம் கொண்டும் தன் பிராந்தியத்துக்குள் இன்னொரு ஆண்முதலை நுழைய அனுமதிப்பதில்லை. ஆனால் மற்றைய இனங்கள் இப்படி அடம்பிடிப்பதில்லை. முதலைகளுக்குள் ஒரு சர்வதிகார

ஆட்சிபீடம் இருக்கின்றது. தாம் வெயில் காயச் சிறந்த இடமாக இருந்தால், அது முதலில் அதிக எடையும் அளவில் பெரிய-துமான ஒரு முதலைக்கே போய்ச் சேருகின்றது. நைல் முதலை களிடம் இந்தச் சர்வதிகாரப் போக்கு நிறையவே இருக்கின்றது. இனத்துக்கு இனம் வேறுபாடுகள் இருந்தாலும் "கூடல்" என்று வரும்போதும், ஒரு பெண்ணுக்காக வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் குதிக்கும்போதும், எல்லாமே ஆக்ரோஷ மானவைகளாக மாறிவிடுவதுண்டு. பெண்ணாள நினைத்தால் மனிதனாகட்டும், மிருகமாகட்டும் அடிபாடுகள் தேடி வந்துவிடுகின்றன.

100 வயதுத் தாத்தாவும் இருந்துள்ளார் நன்கு வளர்ந்த முதலைகள் ஒரு மீட்டர் நீளம் முதல் ஒன்றரை மீட்டர் நீளம் வரை வளர கூடியவை. சில முதலை வகைகள் 4.85(15.9அடி) நீளமும் 1200 கிலோ கிராம் எடையும் கொண்டவையாக பிரமாண்டமாக இருக்கும். முதலைகளில் சராசரி வாழ் நாள் 70 ஆண்டுகள் ஆகும். சில முதலைகள் 100 ஆண்டுகள் வரை வாழ்கின்றன. அவுஸ்திரேலிய மிருகக்காட்சிசாலையில் நன்னீர் முதலையில் ஒன்று 130 ஆண்டுகள் உயிர் வாழ்ந்து சாதனை படைத்துள்ளது

. செம்மூக்கு முதலை அல்லது உவர்நீர் முதலை ஊர்வனவற்றில் மிகப் பெரிய விலங்கினமாகும். இலங்கைளின் இந்த இன முதலைகளைக் காண முடியும். இலங்கையை விட இந்தியாவிலும், தென் கிழக்கு ஆசிய நாடுகளிலும், வட அவுஸ்திரேலியாவிலும் இந்த இன முதலைகள் வாழ்கின்றன.

இவற்றின் கழுத்துப் பகுதியில், ஏனைய இன முதலைகளை விட குறைவான செதில்கள் காணப்படுவது, இவற்றை இனங்கண்டுகொள்ள உதவுகின்றது.

**ஒரே சமயத்தில் 100 முட்டைகள்:-**

பெண் முதலை அழுகிய இலைதளை-கள், மண் ஆகியவற்றைக் குவித்து கரையோரத்தில் கூடுகட்டுகிறது. அதில. ஒரே சமயத்தில் 100 முட்டைகள் வரை இடுகின்றது. முட்டைகள் நீள் உருண்டை வடிவத்தில், கடினமான ஓட்டுடன் காணப்படுகின்றன. பெண் முதலை அவற்றை மூடிவைத்து எதிரிகளிடமிருந்து பாதுகாக்கின்றது. பிறகு கூட்டை மூடியிருக்கும் இலைதழைகளை மக்கிப் போ-கச் செய்ய, அதன் மேல் தண்ணீர் தெளிக்கின்றது. இதன் மூலம் முட்டைகளை அடைகாக்கத் தேவை யான வெப்பம் உண்டாகின்றது.

அடைகாக்கப்படும் முட்டைகளிலிருந்து பெண் முதலை கள் ஏறத்தாழ 100 நாட்களில் வெளிவருகின்றனமுட்டைகளிலிருந்து ஆண், பெண் ஆகிய இரண்டு முதலை களுமே வெளிவருகின்றன. ஒரு பக்கம் தண்ணீர் ஓரமாகவும் மறுபக்கம் சூரியனைப் பார்த்தபடியாகவும் கூடு அமைக்கப்பட்டிருந்தால், வெப்பமான பகுதியிலுள்ள முட்டைகள் ஆணாகவும், குளிரான பகுதியிலுள்ள முட்டைகள் பெண்ணாகவும் பொரிந்து வரும்.

**அக்கறையான அம்மா அப்பா:-**

முட்டையிலிருந்து சத்தம் கேட்கையில் தாய் அந்தக் கூட்டை கலைத்துவிடுகிறது. குஞ்சுகள் அவற்றின் பிரத்தியேக பல்லால் முட்டையின் ஓட்டை உடைக்கவில்லையென்றால், தாய்

அந்த வேலையைச் செய்கிறது. தாய் முதலை தன்னுடைய பெரிய தாடைய ல் குஞ்சுகளை மெதுவாக வெளியே எடுத்து, அதன் நாக்கின் கீழிருக்கும் பை போன்ற குழிவில் அவற்றைப் போட்டு தண்ணீருக்கு அருகே கொண்டு செல்கிறது. பிறந்த உடனே குஞ்சுகள் தன்னிச்சையாகச் செயல்பட ஆரம்பிக்கின்றன. பூச்சிகள், தவளை-கள், சிறு மீன்கள் போன்றவற்றை உடனே வேட்டையாட ஆரம்பிக்கின்றன. பாதுகாப்புணர்வுள்ள சில அம்மா முதலைகள், சில மாதங்களுக்கு அவற்றினருகே இருந்து, அந்தச் சதுப்பு நிலத்தில் அவற்றைப் பராமரிப்பதற்கான இடங்களை ஏற்படுத்துகின்றன. அங்கே முதலைத் தகப்பனும் தன் பங்கிற்குக் குஞ்சுகளைக் கவனித்து பாதுகாக்கிறது.

**போலிகளை நம்பாதீர்கள்:-**

"முதலைக் கண்ணீர வடிக்கிறார்" என்று யாரையாவது பற்றிச் சொல்லப்பட்டதைக் கேட்டிருக்கிறீர்களா? அந்தக் கண்ணீரும் வருத்தமும் உண்மை யானதோ உள்ளப்பூர்வமானதோ அல்ல என்பதே அதன் அர்த்தம். உண்மையில் முதலை, தன் உடம்பில் சேரும் அதிகப்படியான உப்பை வெளியேற்றுவதற்காகவே கண்ணீர் வடிக்கிறது. போலிகளை நம்பாதீர்கள் என்பது நீங்கள் முதலைகளிடமிருந்து கற்கும் பாடம்!!!

## இயேசுவின் திருப்பாடுகளின் பெரிய வெள்ளி......




" தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன் "

இறைவனின் அன்பின் ஆழம் அகலம் சிலுவையன்பு. இன்று பெரிய வெள்ளிக்கிழமை தியாகத்தின் நாள்.இயேசு செய்த மூன்று செயல்கள் தம்மை சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரல் எழுப்பி,கண்ணீர் சிந்தி,மன்றாடி வேண்டினார்.மூன்று வகை செபங்கள் மௌன செபம்,சப்த செபம்,கண்ணீர் செபம்.இதன் விளைவாக இயேசு கொண்டிருந்த இறைப்பற்று கலந்த அச்சத்தை முன்னிட்டு கடவுள் அவருக்கு செவி சாய்த்தார்.இயேசுவின் வாழ்வே ஒரு செபம்தான். இறுதி செப வரிகள் எல்லாம் நிறைவேறிற்று உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன் என்று கூறி அவர் தம்மையே சாவுக்கு கையளித்தார்.கொடியவருள் ஒருவராக கருதப்பட்டார் ஆயினும் பல-ரின் பாவத்தை சுமந்தார் உயிர் துறந்தார்...

**ஜெயா நடேசன் - ஜேர்மனி**

# தமிழர்கள் பயன்படுத்தி, பாதுகாத்த 47 வகையான நீர்நிலைகள்....

01. அகழி - (Moat) கோட்டையின் புறத்தே அகழ்ந்தமைக்கப்பட்ட நீர் அரண்.
02. அருவி - (Water fall) மலை முகட்டில் தேங்கிய நீர் குத்திட்டு விழுவது.
03. ஆழிக்கிணறு - (Well in Seashore) கடலுக்கு அருகே தோண்டி, கட்டிய கிணறு
04. ஆறு - (River) பெருகி ஓடும் நதி.
05. இலஞ்சி - (Reservoir for drinking and other purposes)பல வகைக்கும் பயன்படும் நீர்த் தேக்கம்.
06. உறை கிணறு - (Ring Well)மணற்பாங்கான இடத்தில் தோண்டி சுடுமண் வலையமிட்ட கிணறு.
07. ஊருணி - (Drinking water tank) மக்கள் பருகும் நீர் நிலை.
08. ஊற்று - (Spring) பூமிக்கடியிலிருந்து நீர் ஊறுவது.
09. ஏரி - (Irrigation Tank) வேளாண்மை பாசன நீரத் தேக்கம்.
10. ஓடை - (Brook) அடியிலிருந்து ஊற்று எடுக்கும் நீர் எப்பொழுதும் வாய்க்கால் வழி ஓடும் நீர்.
11 கட்டும் கிணக்கிணறு - (Built-in -well) சரளை நிலத்தில் வெட்டி, கல், செங்கல் இவைகளால் சுவர் கட்டிய கிணறு.
12. கடல் - (Sea) சமுத்திரம்.
13. கம்வாய் (கம்மாய்) - (Irrigation Tank) பாண்டிய மண்டலத்தில் ஏரிக்கு வழங்கும் பெயர்.
14. கலிங்கு - (Sluice with many Ventures)ஏரி முதலிய பாசன நீர்த் தேக்கம் உடைப்பெடுக்காமல் இருப்பதற்கு முன்னெ 9ச்சரிக்கையாக கற்களால் உறுதியாக்கப்பட்ட பலகைகளால் அல்லது கற்களால் அடைத்து திறக்கக்கூடியதாய் உள்ள நீர் செல்லும் அமைப்பு.
15. கால் - (Channel) நீரோடும் வழி.
16. கால்வாய் - (Supply channel to a tank ) ஏரி, குளம் ஊருணி இவற்றிக்கு நீர் ஊட்டும் வழி.
17. குட்டம் - (Large Pond) பெருங் குட்டை.
18. குட்டை - (Small Pond) சிறிய குட்டம். மாடு முதலியன் குளிப்பாட்டும் நீர் நிலை.
19. குண்டம் - (Small Pool) சிறியதாக அமைந்த குளிக்கும் நீர் நிலை.
20. குண்டு - (Pool) குளிப்பதற்கேற்ற ஒரு சிறு குளம்.
21. குமிழி - (Rock cut Well) நிலத்தின் பாறையை குடைந்து அடி ஊற்றை மேலெழுப்பி வரச்செய்த குடை கிணறு.
22. குமிழி ஊற்று - (Artesian fountain) அடி நிலத்து நீர் நிலமட்டத்திற்கு கொப்பளித்து வரும் ஊற்று
23 . குளம் - (Bathing tank) ஊர் அருகே உள்ள மக்கள் குளிக்கப்பயன்படும் நீர் நிலை.

24. கூவம் - (Abnormal well) ஒரு ஒழுங்கில் அமையாத கிணறு.
25 .கூவல் - (Hollow) ஆழமற்ற கிணறு போன்ற பள்ளம்.
26. வாளி - (stream) ஆற்று நீர் தன் ஊற்று நீரால் நிரப்பி மறுகால்வழி அதிக நீர் வெளிச் செல்லுமாறு அமைந்த அல்லது அமைக்கப்பட்ட நீர்நிலை.
27. கேணி - ( large well) அகலமும், ஆழமும் உள்ள ஒரு பெருங் கிணறு.
28. சிறை - (Reservoir) தேக்கப்பட்ட பெரிய நீர் நிலை.
29. சுனை- (Mountain Pool) மலையிடத்து இயல்பாயமைந்த நீர் நிலை.
30. சேங்கை - (Tank with duck weed) பாசிக்கொடி மண்டிய குளம்.
31. தடம் - (Beautifully constructed bathing tank)அழகாக் நாற்புறமும் கட்டப்பட்ட குளம்.
32 தளிக்குளம் - (tank surrounding a temple) கோயிலின் நாற்புறமும் சூழ்ந்தமைந்த அகழி போன்ற் நீர் நிலை.
33. தாங்கல் - (Irrigation tank) இப்பெயர் தொண்ட மண்டலத்தை ஒட்டிய பகுதியில் ஏரியை குறிக்கும்.
34. திருக்குளம் - (Temple tank) கோயிலின் அணித்தே அமைந்த நீராடும் குளம். இது புட்கரணி எனவும் பெயர் பெறும்.
35. தெப்பக்குளம் - (Temple tank with inside pathway along parapet wall) ஆளோடியுடன் கூடிய, தெப்பம் சுற்றி வரும் குளம்.
36. தொடு கிணறு - (Dig well) ஆற்றில் அவ்வொப்பொழுது மணலைத்தோண்டி நீர் கொள்ளும் இடம்.
37. நடை கேணி - (Large well with steps on one side) இறங்கிச் செல்லும் படிக்கட்டமைந்த பெருங் கிணறு.
38. நீராவி - (Bigger tank at the center of Building hall) மைய மண்டபத்துடன் கூடிய பெருங்குளம். ஆவி என்றும் கூறப்படும்.
39. பிள்ளைக்கிணறு - (Well in middle of a tank) குளம் ஏரியின் நடுவே அமைந்த கிணறு.
40. பொங்கு கிணறு - (Well with bubbling spring) ஊற்றுக்கால் கொப்பளித்துக்கொண்டே இருக்கும் கிணறு.
41. பொய்கை - (Lake) தாமரை முதலியன மண்டிக்கிடக்கும் இயற்கையாய் அமைந்த நீண்டதொரு நீர் நிலை.
42. மடு - (Deep place in a river) ஆற்றிடையுடைய அபாயமான பள்ளம்.
43. மடை - (Small sluice with single venturi) ஒரு கண்ணே உள்ள சிறு மதகு.
44. மதகு - (Sluice with many ventures) பல கண்ணுள்ள ஏரி நீர் வெளிப்படும் பெரிய மடை அடைப்பும் திறப்பும் உள்ளது.
45. மறு கால் - (Surplus water channel) அதிக நீர் கழிக்கப்படும் பெரிய வாய்க்கால்.
46. வலயம் - (Round tank) வட்டமாய் அமைந்த குளம்.
47 வாய்க்கால் - (Small water course) ஏரி முதலிய நீர் நிலைகள்.

## உடலுக்கு நன்மை பயக்கும்.....

வீசு உடலுக்கு நன்மை பயக்கும்
இருமலுக்கு திராட்சைப்பழம்
முதுகுத்தண்டு வலிக்குப் பப்பாப்பழம்
இரத்த அழுத்தத்துக்கு எலுமிச்சைப்பழம்.
கண்பார்வை அதிகரிக்க புதினாக்கீரை
மூளைக்கு வலியூட்ட வல்லாரை.
காது மந்தம் போக்க தூதுவளை.
சலக்கடுப்பு தீர பசலைக்கீரை.
உடற்சூடு அகல முருங்கைக்கீரை.
நோய் போக்கப் பொன்னாங்காணி
நிரழிவு நோய்க்கு துளசிஇலை.
இதயத்தைச் சுத்திகரிக்க வெள்ளைப்பூண்டு.
கண்பார்வை அதிகரிக்க புதினாக்கீரை, கரட், ஏலக்காய்.
கடுமையான சளி, இருமலுக்கு தேனும் எலுமிச்சையும்.
வாழ் நாளை நீடிக்க நெல்லிக்கனி..
சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் வெந்தயம்.
கொழுப்புச் சதையைக் குறைக்கும் மிளகு.
இளைத்த உடலைப் பெருக்க மிளகு.
மூலநோய்க்கு கருணைக்கிழங்கு.
இதயம் பலவீனம் போக்க மாதுளை.
சிறுகற்களைக் கரைக்க வாழைத்தண்டு.
மலத்தை இழக்க ரோஜா இதழ்கள்.
கருப்பை நோய்க்கு வாழைப்பூ
சமிபாட்டைச் சீராக்கும் மிளகும் இஞ்சியும்
மூளைக்கு வலுவூட்டும் பேரீச்சம் பழமும் பாதாப்பருப்பும்.

## மனித உடலில்.....

1- மனித நாக்கிலுள்ள சுவை அறியும் செல்களில் மொத்த எண்ணிக்கை 3.000
2- மனித மூளையில் எத்தனை கிராம் தாமிரம் உள்ளது - 6 கிராம்
3- மனித முகத்தில் எத்தனை எலும்புகள் உள்ளன - 14 எலும்புகள்
4- நுரையீரல் ஒரு நாளைக்கு எத்தனைமுறை சுவாசத்தை உள்ளெடுத்து வெளியே செலுத்தும் - 23.040 முறைகள்.
5- ஒரு மனித உடலிலுள்ள நரம்புகளின் மொத்த நீளம் - சுமார் 72 மீட்டராகும்.
6- நமது இரத்தம் ஒரு நாளில் எத்தனை கிலோமீட்டர் பயணம் செய்கிறது 30 கோடி கிலோ மீட்டர்.
7- ஒவ்வொரு சிறுநீரகமும் எத்தனை வடிகட்டிகளைக் (Filter)கொண்டுள்ளன -1 மில்லியன் வடிகட்டிகள்.

## உடற்பயிற்சியும் நன்மைகளும்..

- எடை குறைக்க உதவுகின்றது.
- நுரையீரல் திறனை அதிகரிக்கின்றது.
- இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.
- நாள்ப்பட்ட நோய்களை குறைக்கின்றது.
- மன நிலையை மேம்படுத்துகின்றது.
- புற்று நோய் வராமல்த் தடுக்கின்றது.
- வயதான காலத்தில் இயலாமையைத் தடுக்கின்றது.
- முதுமையைத் தாமதப்படுத்துகின்றது.
- சுருள் சிரை நாளங்களை மேம்படுத்துகின்றது.
- இரத்த அழுத்தத்தை குறைக்கின்றது.
- நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றது.
- பெண்களுக்குப் பக்கவாதம் ஏற்படும் ஆபத்தைக் குறைக்கின்றது.
- செரிமானத்தைத் துரிதப்படுத்துகின்றது.
- சர்க்கரை நோயின் ஆபத்தைக் குறைக்கின்றது.
- உடலின் பலத்தை பன்மடங்கு அதிகரிக்கின்றது.

## வெற்றியின் ரகசியம்.....

- புத்தகங்களைத் துணைகொள்.
- உடலுழைப்பை அதிகரி
- சமூகம் புறக்கணித்தவற்றை வைவிடு.
- குளிர் தண்ணீரில் குளி.
- கொஞ்சமாய்ச் சாப்பிடு.
- தியானம் கைக்கொள்.
- இரவு உறங்குமுன் நெடுந்தூரம் நட.
- உடுப்பில் வெள்ளை நிறத்தைப் பழக்கமாக்கு.
- உணவில் கீரை சேர்த்துக்கொள்.
- எப்படி வலித்தாலும் பொறுமையாகத் தாங்கிக்கொள்.
- ஆத்திரம் அகற்று.
- கேலிக்குப் புன்னகை தா.
- கோபத்துக்கு மௌனத்தைக் கொடு.
- நட்புக்கு நட்புச் செய்.
- வேலை சொல்லித் தருபவரிடம் பணிவாக இரு.
- அலட்சியப்படுத்தினால் விலகி நில்.
- அன்பு செலுத்தினால் நன்றி சொல்.
- இறுக்கமாக இருக்காதே இதமாகப் பேசு.

# யேர்மனியின் சுகாதாரக் குறிப்புகள் சில...



- ஜேர்மனியில் 8,7 மில்லியன் மக்கள் நீரிழிவு வகை 2 (Diabetes Typ 2) நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்கின்றனர்.

- நீரிழிவு வகை 1(Diabetes Typ 1) நோயாளிகளில் 26% மக்களும், நீரிழிவு வகை 2 நோயாளிகளில் 16% மக்களும் ரெட்டினோபதியை (Retinopathie) என்னும் கண்நோயால் பாதிக்கப்படுகின்றார்கள்.

- 2021ம் ஆண்டு 31% ஜேர்மனிய மக்கள் முதுகு வலி காரணமாக மருத்துவ சிகிச்சை பெற்றிருந்தார்கள். அதிக எடை கொண்டவர்களில் கிட்டத்தட்ட 36% மக்கள் அதே நோய்க்கான மருத்துவ சிகிச்சையை பெற்றுள்ளனர்.

- 69% ஜேர்மனியர்கள் பாரம்பரிய மருத்துவத்தில் (Schulmedizin) அதிக நம்பிக்கை வைத்துள்ளனர்.

- 44% ஜேர்மனியர்கள் இன்னும் 10 ஆண்டுகளில் கிட்டத்தட்ட அனைத்து மருத்துவ சிகிச்சைகளும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி செய்யப்படும் என்று நம்புகிறார்கள்.

- ஒரு வருடத்தில் 100 ஜேர்மனியர்களில் 27 நபர்கள் மனநலக்கோளாறுக்கு சிகிச்சை பெற்றுவருகின்றார்கள்.

- 27% ஜேர்மனியர்கள் இன்னும் சிறப்பான சுகாதார பராமரிப்புக்காக அதிக கட்டணம் செலுத்த தயாராக உள்ளனர். ஐரோப்பா முழுவதிலும், 42% மக்கள் இவ்வாறு செயல்ப்படுவார்கள்.

- ஜேர்மனியில் 12 000 ஆஸ்டியோபதிகள் (Osteopathie) தமது சேவையை செய்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- ஒரு வருடத்தில் 300 குழந்தைகளும் மற்றும் 55 வயதுக்கு குறைவானவர்களில் 30 000 பேர்களும் பக்கவாதத்தால் (Schlaganfall) பாதிக்கப்படுகின்றனர்.

- பெரும்பாலான மக்களுக்கு ஒரு நாளுக்கு 7,5 மணித்தியாலங்கள் தூ ங்கினால் மறுநாள் உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

- சராசரியாக மார்பக புற்றுநோயைக் கண்டறியும் போதுபெண்களுக்கு 64 வயது ஆகும்.

- ஜேர்மனியில் ஒவ்வொரு ஆண்டும் 270 000 பக்கவாத நோய் ஏற்படுகின்றன. இதில் 66 000 மீண்டும் வந்துள்ள பக்கவாதம் ஆகும்.

- ஒரு வருடத்தில் 63 000 நபர்கள் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு இறக்கின்றார்கள்.இதில் 36 000 பெண்கள் ஆகும்.இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் சராசரி வயது 75 ஆகும்.

- ஒரு மனித மூளைக்கு ஒரு நிமிடத்தில் 700ml இரத்தம் செல்கிறது. 8 முதல் 10 நிமிடங்கள் நரம்புகளுக்கு இரத்தம் செல்லும் அளவு குறைவாக இருந்தால் இறந்துவிடும் அபாயம் உண்டு.

மொழிமாற்றஉதவி :- **செல்வி சாமினா சிவதாசன் (எசன்)**

.................................................................................

## இதுதான் வாழ்க்கை!..



வாழ்க்கையைப் பற்றி நாம் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் நாம் மூன்று இடங்களுக்குச் செல்ல வேண்டும்.

**1- மருத்துவமனை:-** ஆரோக்கியத்தை விட மற்ற எதுவுமே பெரிதில்லை என்பதை மருத்துவமனை புரிய வைக்கும்.

**2- சிறைச்சாலை:-** சுதந்திரத்தை விட விலை மதிப்பானது வேறு எதுவும் இல்லை என்பதை சிறைச்சாலை புரிய வைக்கும்.

**3- சுடுகாடு (மயானம்):-** உயிரோடு வாழ்வதை விட பெரியது எதுவும் இல்லை என்பதை சுடுகாடு புரிய வைக்கும்.

# வானமும் பூமியும் இணைந்தால்....

- சிபோ சிவகுமாரன் -

வானமும் பூமியும் இணைந்தால் தான் மழை பொழியும் நாளும் இரவும் இணைந்தால் தான் காலச்சுழற்சி நிகழும். "ஒரு கை தட்டினால் ஒலி ஏற்படாது. இரு கைகள் இணைந்தால் தான் ஒலி எழும்." இதேபோல், வாழ்க்கையிலும், சமூகத்திலும் ஒருமித்த செயல் இருந்தால்தான் வெற்றி கிடைக்கும். எப்படி ஒரு வெற்றிகரமான ஆணின் பின்னணியில் ஒரு பெண் உள்ளாள் எனக் கூறுகிறோமோ, அதேபோல், ஒரு பெண் வெற்றிகரமாக முன்னேற, பின்னணியில் ஒரு புரிந்துணர்வான ஆணும் இருக்க வேண்டும். இது இயற்கையின் நியதி.

இயற்கையின் நியதி ஆணும் பெண்ணும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதைக் கூறினாலும், சமத்துவம் என்றால் ஒருவரின் உரிமை மற்றவரின் அனுமதியை பொறுத்ததில்லை. பெண்களால் தங்கள் உரிமையை தங்களது கல்வியாலும், தன்னம்பிக்கையாலும், போராட்டத்தாலும் சுயமாக நிலைநாட்ட முடியும். ஈரோடு வெங்கடப்பா இராமசாமி (பெரியார்) வலியுறுத்தியது, "பெண்களின் உரிமை, ஆண்களின் புரிதலோடு இணைந்தால் தான் சமூக வளர்ச்சி முழுமை பெறும்", என்று.
ஆனால் அவர் கூறவில்லை,

"ஆண்களின் உரிமை பெண்களின் புரிதலோடு இணைந்ததால் தான் சமூக வளர்ச்சி முழுமை பெறும்", என்று. பெண்கள் தங்களது உரிமைக்காக ஆண்களின் புரிதலை எதிர்பார்க்க வேண்டும் என்பது அபத்தமானது. சமத்துவம் என்பது அனைவருக்கும் சம உரிமை என்ற பொருளில் இருக்க வேண்டும், ஆணின் அனுமதி கிடைத்தால் மட்டும் அது நடைமுறையில் வரலாம் என்ற அடிப்படையில் இருக்கக் கூடாது. பாசிச சமூகம் உருவாக்கிய கட்டமைப்புகளின் பின்னணியில் நிற்கும் பெரியார் போன்ற ஆண்களால், அவர்கள் சூழலுக்கேற்ப சில ஆதரவுகளை வழங்கலாமே தவிர, ஒரு பெண்ணின் வாழ்க்கையை, அவளின் தேவைகளை புரிந்துகொள்ள முடியாது. - all these are beyond a man's direct experience.

பெரியார் சமத்துவம், சுயமரியாதை, கல்வி, பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் குரல் கொடுத்தார், என்கிறார்கள். ஆனால் பெண்கள் தங்கள் உரிமையை பெற ஆண்களின் புரிதல் அவசியம் என்கிற அவரது எண்ணம் விமர்சிக்கத்தக்கது. ஒரு பெண் தனது கல்வியை, வாழ்க்கையை, உரிமையை, சமூகத்தில் தன்னுடைய இடத்தை நிறுவ ஆணின் ஒத்துழைப்பு தேவை என்ற எண்ணமே பெண்களை மீண்டும் அடிமைபடுத்தும். இதுவே பல நூற்றாண்டுகளாக பெண்களை பின்தங்கச் செய்த எண்ணக்கோடாக இருந்து வந்துள்ளது,அதுவே ஆணாதிக்கத்தின் மற்றொரு வடிவமாக மாறிவிடும்.

பெரியார் வாழ்ந்த காலத்தில், உலகில் பல சமூகங்கள் பெண்களுக்கு கட்டுப்பாடுகளை விதித்து, அவர்களை குடும்பப் பாரபட்சத்தில் அடக்கியிருந்தன. ஆனால், இந்த நிலைமையை எதிர்த்த இந்தியாவிலேயே பல வீராங்கனைகள், தாங்களாகவே தங்கள் உரிமைக்காக போராடியதற்கான உதாரணங்கள் ஏராளம்:

- மூடல் முகத்தம்மாள் - சமத்துவத்தை வலியுறுத்தி பெண்களின் கல்விக்காக குரல் கொடுத்தார்.

- அமு. முத்துலட்சுமி ரெட்டி - நாட்டின் முதல் பெண் மருத்துவராக, பெண்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த அயராது உழைத்தார்.

- சாவித்ரிபாய் பூலே - இந்தியாவில் பெண்களின் கல்விக்காக போராடிய முதல் பெண் ஆசிரியர்

- ராணி லட்சுமிபாய் - ஆட்சி அதிகாரத்துக்காக போராடிய வீரப்பெண்

- அமெரிக்காவின் சூ.ஃப்ரஜெட் இயக்கம் (The Suffragette Movement) -

ஆண்களின் அனுமதியை எதிர்த்து, பெண்களே தங்கள் வாக்குரிமையை பெற்றுக்கொண்டனர் இவர்கள் ஒவ்வொருவரும், சமுதாயத்தின் கட்டுப்பாடுகளுக்குள் சிறைபட்டிருந்த பெண்களுக்கு ஓர் உந்துசக்தியாக விளங்கினர். ஆகவே, இன்று நாம் நினைவு கொள்ள வேண்டியது பெண் விடுதலை என்பது இருவராலும் வழங்கப்படும் பரிசு அல்ல,

அது ஒரு தனி நபரின் உரிமை. இன்று எம் சமூகத்தில் நாம் காணும் மாற்றங்களும் அவையே. இருப்பினும், இந்த 21 ஆவது நூற்றாண்டிலும் கூட ஒரு ஆணுக்கு கிடைக்கும் அங்கிகாரத்தில் பாதி கிடைப்பதற்கு நாங்கள் 'double' மடங்காக உழைக்க வேண்டி இருக்கு...

ஒருவர் பெண்களின் விடுதலையைப் பற்றி பேசும்போது, அவரின் தனிப்பட்ட வாழ்க்கை தான் முதலில் மதிப்பீடாக அமையும். பெரியார் பெண்களின் விடுதலையைப் பற்றி பேசியிருக்கலாம், ஆனால் அவர் சொன்னது போலவே நடந்தாரா?பெண்விடுதலையைப் பற்றிப் பேசிய பெரியாரின் சொந்த வாழ்க்கையை எடுத்துக் கொள்வோம்...

அங்கம்மாள், பெரியாரின் முதல் மனைவி, அவர் கூட பெண்களின் கல்விக்கும், சுயவிடுதலைக்காகவும் போராடியவர். ஏன் அவரை முன்னிலைப் படுத்தாமல், தன்னை மட்டும் ஒரு போராளியாக காட்டிக் கொண்டார் ஈவேரா?Ego? (நான் என்னும் அகங்காரம்)

பெரியார் தனது இரண்டாவது திருமணமாக 13 வயதான மணியம்மாளை மணந்தார். அவர் வளர்த்த குழந்தை அவள். ஒரு பெண் முழுமையாக வளரும்போது, தனிப்பட்ட முடிவுகளை எடுக்கலாம். ஆனால் 13 வயதில், அவள் ஏதும் அறியா ஓர் குழந்தை. இது ஒரு நியாயமான உறவாக இருந்ததா? இதை ஆணாதிக்க அமைப்பின் (Patriarchalism) தாக்கமாகவே நான் பார்க்கின்றேன்.

இவ்வளவு சர்சைக்குரியவருக்கு, எமது தாயகத்தில் சிலை அவசியமா? என்றோ, எங்கேயோ, யாருக்காகவோ வாழ்ந்து இறந்தவருக்காக நாம் சண்டை போடுவது ஆரோக்கியமானதா? புரியவில்லை....




( 27.10.1942 - 29.01.2025 )

## மாவை சேனாதிராசா முன்னாள் எம் பி காலமானார்.

64 ஆண்டுகள் அரசியலில், 7 ஆண்டுகள் எம் பி, 7 ஆண்டுகள் சிறைசென்றவர்.. மண் சஞ்சிகையின் 10வது ஆண்டுவிழாவில் (2000ம் ஆண்டு) மாவை கலந்துகொண்டு சிறப்பித்தவர்..

இலங்கை தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவரான மாவை சேனாதிராஜா யாழில் காலமானார். உடல் நலக்குறைவால் யாழ். போதனைா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் (29.01.2025) திங்கள் இரவு 10.00 மணிக்கு உயிரிழந்துள்ளார். அவருடைய வயது 82 ஆகும். (

**மண் சஞ்சிகை ஆசிரியரான என்னோடு..**

இலங்கையில் அப்போது நடைபெற்ற தேர்தல் கூட்டங்களில் இவரும் வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன் போன்றோரின் மேடைப் பேச்சுக்கேட்க பெருந்திரளான மக்கள் ஒன்றுகூடுவார்கள். ஆந்தக் காலத்தில் பல வருடங்கள் பல மேடைகளில் பல இடங்களில் இவரின் பேச்சைக் கேட்டிருக்கிறேன்.

1979ம் ஆண்டு முதன் முதலாக பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கலந்துரையாடும் வாய்ப்பு கிடைத்தது. பல அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இலங்கை அரசின் சார்பில் அரசியல் பயணமாக கியூபா நாட்டிற்குசென்றனர். அவ்வேளையில் எனது சகோதரர் வைரமுத்து நடராசா அவ்களும் அக்குழுவில் இடம்பெற்றிருந்தார். நான் எனது அண்ணனை வழியனுப்பப் போன சமயத்தில்தான் அவரோடு கதைத்துப் பேசும் வாய்ப்பு கிடைத்தது.

2010 இரண்டாவது சந்திப்பு மண் சஞ்சிகையின் 10வது ஆண்டுவிழா யேர்மனி-டியூஸ்பேர்க் நகரில் நடைபெற்றபோது இந்த விழாவை அறிந்து அவரது சகோதரன் மாவை தங்கராசா அவரை அழைத்துக்கொண்டு விழாவிற்கு வந்திருந்தனர். மண் சஞ்சிகையின் பத்தாவது ஆண்டுவிழாவில்





சிறப்புரையாற்றியதுடன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளையும் வழங்கினார். அன்றைய விழாவில் அவர் கௌரவிக்கப்பட்டுச் சிறப்புப் பெற்றார்.

2015 மூன்றாவது சந்திப்பு யேர்மனி-நொய்ஸ் நகரத்தில். அதாவது அவரது சகோதரன் மாவை தங்கராசா அவர்களின் இல்லத்தில் சில மணி நேரம் கதைத்துப் பேசி மகிழ்ந்த தருணங்கள்தான். இச்சந்திப்பில் என்னோடு யேர்மனி தமிழ்க் கல்விச் சேவையின் தலைவர் திரு பொ.சிறீஜீவகனும் கலந்துகொண்டார்.

மாவை சேனாதிராஜா என அழைக்கப்படும் சோமசுந்தரம் சேனாதிராஜா இலங்கைத் தமிழ் அரசியல்வாதியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார்.இவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஆவார். மாவை சேனாதிராஜாவின் இயற்பெயர் சோமசுந்தரம் சேனாதிராஜா. சொந்த ஊர் மாவிட்டபுரம் என்பதால் ஊரின் பெயருடன் மாவை சேனாதிராசா என அழைக்கப்பட்டார்.

யாழ். வீமன்காமம் பாடசாலையிலும், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும் கல்வி கற்ற பின்னர்,இலங்கைப் பல்கலைக்க்ழகத்தில் வெளிவாரி மாணவராக இணைந்தார். அரசியல் சூழ்நிலைகளால் கல்வியைத் தொடரமுடியவில்லை பின்பு சென்னையில் படித்து இளங்கலைப் பட்டம் பெற்றுக்கொண்டார்.

**அரசியல் பயணம்...**

சேனாதிராஜாவின் அரசியலை பொறுத்தமட்டில், இலங்கைத் தமிழ்த் தேசிய இயக்கத்தில் செயற்பட்டு 1961 சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தந்தை செல்வாவுடன் இணைந்து பங்குபற்றினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியில் 1962 இல் இணைந்தார். 1966 முதல் 1969 வரை ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தின் செயலாளராகப் பணியாற்றினார்.

மேலும், 1969 முதல் 1983 வரையான காலப்பகுதியில் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு எட்டு வெவ்வேறு சிறைச்சாலைகளில் மொத்தம் ஏழாண்டுகள் சிறையில் கழித்தார்.

இதனை தொடர்ந்து, 1972 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ்

இளைஞர் பேரவையின் செயலாளராக நியமிக்கப்பட்டார். சேனாதிராஜா 1989 நாடாளுமன்றத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எ ்.ப், டெலோ உள்ளிட்ட தரப்புடன் கூட்டணி சார்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டு 13ஆவதாக வந்து தோல்வியடைந்தார்.

1977ல் திருமணம் மூன்று பிள்ளைகள் (1பெண் 2ஆண்கள்))

பாராளுமன்ற உறுப்பினர் அமிர்தலிங்கம் 1989 ஜீலை 13 படுகொலை செய்யப்பட்டதை அடுத்து அவரின் இடத்திற்கு சேனாதிராஜா தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். 1994ல் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார்.

அதன் பின்னர், 1999 ஜீலை 29 இல் பாராளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து மீண்டும், தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் சென்றார்.

2000ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி (தவிகூ) வேட்பாளராக யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்று மீண்டும் நாடாளுமன்றம் சென்றார்.

2001 தேர்தலில் ததேகூ சார்பாக யாழ் மாவடத்தில் போட்டியிட்டு மீண்டும் நாடாளுமன்றம் சென்றார். 2004, 2010, 2015 தேர்தல்களில் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 2020 தேர்தலில் தோல்வியடைந்தார்.

2004 - 2014வரை தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளராகவும் 2014 தொடக்கம் கட்சியின் தலைவராகவும் செயற்பட்டார்.

செப்டம்பர் , 2014இல் சேனாதிராஜா இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

2024, பொதுத்தேர்தலின் பின்னர் கட்சியில் சிலருடைய கருத்து முரண்பாட்டால் தலைவர் பதவியில் இருந்து தான் விலகவுள்ளதாகவும் அறிவித்தார். 2024, அவருடைய தலைவர் பதவி சி வி கே சிவஞானத்திற்கு பதில் தலைவராக வழங்கப்பட்டது. எனினும் மாவை சேனாதிராஜாவுக்கு அரசியல் குழு தலைவர் பதவி வழங்கப்பட்டது.

**தேர்தல் வரலாறு..**

1989 நாடாளுமன்றத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்ட அவர், 2,820 வாக்குகளை பெற்றுக்கொண்டார்.எனினும் நாடாளுமன்ற ஆசனத்தை தக்கவைக்க போதுமானதாக காணப்படவில்லை.

2000 பொதுதேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்ட அவர், 10,965 வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

2001 பொதுதேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்ட அவர், 33,831 வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

2004 பொதுதேர்தலில் 38,783 வாக்குகளை பெற்று மீண்டும் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.


2010 பொதுதேர்தலில் 20,501 வாக்குகளை பெற்று மீண்டும் நாடாளுமன்றத்திற்குதெரிவு செய்யப்பட்டார்.

2015 பொதுதேர்தலில் 58,782 வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்திற்குதெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து 2020 பொதுதேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்ட அவர், 20,358 வாக்குகளை பெற்றிருந்த போதும் அவர் தெரிவு செய்யப்படவில்லை.

சுமார் 64 ஆண்டுகள் தனது அரசியல் பயணத்தில் எத்தனை துன்பங்கள் துயரங்களைச் சந்தித்திருப்பார். அகிம்சைப் போராட்டங்கள், ஆர்பாட்டங்கள், கண்டன ஊர்வலங்கள், உரிமைப் போராட்டங்கள் எனப் பல்வேறு போராட்டங்களை நடத்தியது அனைத்துமே தமிழ் மக்களின் விடிவிற்காகவே. தன்னை அர்ப்பணித்து தமிழர் விடிவிற்குப் பெரும் பங்காற்றி எல்லோரையும் விட்டுச் சென்றது தமிழினத்துக்குப் பேரிழப்பாகவே கருதுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவதுடன் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு ஆறுதலைத் தெரிவித்துக் கோள்கின்றோம்.

**- ஆசிரியர் -**



**( 19.03.1953 - 22.01.2025 )**

## எம் இதய அஞ்சலிகள்..

**அமரர் சபாஆனந்தர். பூபதிபாலா வடிவேற்கரன்** அவர்களின் உயிர் 22.01.2025 அன்று உடலைவிட்டு பிரிந்துவிட்டது. இவர் ஜெர்மனியில் பிராங்க்போர்ட் நகரத்தில் வாழ்ந்து கொண்டிருந்தவர்.

இவர் பிராங்போட் நகரத்தில் வாழும் காலத்தில் பல தமிழ் பணிகளையும் செய்து வந்திருக்கின்றார். நாட்டுப்பற்றாளர், தமிழ் பற்றாளர், எழுத்தாளர், கவிஞர், நடிகர் என பல பக்கங்களை தன்னகத்தை கொண்டவர் ஆவார்.

ஐரோப்பாவின் மூத்த தமிழ் சங்கமான பிராங்போட் தமிழ் சங்கத்தை உருவாக்கி வளர்த்தவர்களில் ஒருவராக இருந்ததுடன் " தமிழ் நாதம்" சஞ்சியை தொடர்ந்து வெளிவர முன்நின்று உழைத்தவர். இவரது இழப்பு எமக்கு பெரும் துயரத்தை தந்துள்ளது.

**பிறப்பு :-**

இவர் ஈழத்தில் இணுவிலில் தமிழ் பண்டிதர், அதிபர். திரு க. சபாஆனந்தர் அவர்களுக்கும் திருமதி அன்னம்மா சபாஆனந்தர் அவர்களுக்கும் மகனாக 19.03.1953 ஆம் ஆண்டு மூன்றாவது மகனாக பிறந்தார்.

**பிறப்பு :-**
இவர் ஈழத்தில் இணுவிலில் தமிழ் பண்டிதர், அதிபர். திரு க. சபாஆனந்தர் அவர்களுக்கும் திருமதி அன்னம்மா சபாஆனந்தர் அவர்களுக்கும் மகனாக 19.03.1953 ஆம் ஆண்டு மூன்றாவது மகனாக பிறந்தார்.
**கல்வி -**
நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி (1970 ) போன்ற பாடசாலைகளில் கல்வி கற்றவர்.
1972 இல் கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரியில் கற்ற காலத்தில் " நுட்பம் " சஞ்சிகையின் உதவி ஆசிரியராக விளங்கியவர்.
1979 யேர்மனிக்கு புலம்பெயர்ந்தார்.
**குடும்பம் :-**
திருமதி .சூரியகுமாரி அவர்களை திருமணம் செய்து காயத்திரியை மகளாக பெற்றெடுத்தனர்.
**நடிப்பு -**
மிஸ்டர் ரவிக்குமார் , சின்னப்பு வாத்தியார் திரைப்படங்களில் கதாநாயகனாகவும் சுதந்திர தாகம் திரைப்படத்தில் வில்லனாகவும் நடித்திருக்கின்றார்.
சிறுவர் நாடகங்கள் எழுதி நெறிப்படுத்தி மேடை ஏற்றிய பெருமையும் இவருக்கு உள்ளது. ஊமை என்ற குறும்படத்தின் இயக்குனராகவும் இவர் விளங்கிருக்கின்றார்.
**தாயக உதவிகள்:-**
2016 இல் இருந்து தாயகம் நோக்கிய உதவிக்கரம் நீட்டும் எண்ணத்துடன் Help for Life e. V என்ற அமைப்பை நிறுவி பல உதவிகளை செய்து வந்திருக்கின்றார்.
02.02 .2022 அன்று லண்டன் தமிழ் வானொலி, பாமுகத்தின் முற்றத்து மலர்கள் நிகழ்ச்சியில் இவரை விருந்தினராக அழைத்து நேர்காணல் செய்து வாழ்த்தி கௌரவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கும் எம் ஆறுதல்களைப் பகிர்ந்து நிற்கின்றோம். ஓம் சாந்தி....

**- சாந்தினி துரையரங்கன் -**

அமரர் அவர்கள் சுமார் 25 வருடங்களுக்கு மேல் என்னோடு தொடர்பில் இருந்து வந்தவர். பிராங்போட் தமிழ்ச்சங்கம், மற்றும் "தமிழ் நாதம்" சஞ்சிகையூடாகப் பல்வேறுபட்ட கலை, இலக்கிய, எழுத்துப் பணிகளை மேற்கொண்டார். ஐரோப்பிய இலக்கியச் சந்திப்புக்கள், இலக்கிய, அரசியல்க்கூட்டங்களில் சந்தித்து உரையாடி மகிழ்த சம்பவங்கள் ஏராளம்.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று நிறைந்தவர். மேலாக நல்லதொரு எழுத்தாளர். கடந்த பல வருடங்களாக தாயகத்தின் துயர்துடைப்பில் பல்வேறு சமூகப் பணிகளை மேற்கொண்டிருந்தார். இயல், இசை, நாடகம் என முத்தமிழில் அதிக ஈடுபாடுகொண்டிருந்ததுடன் விளையாட்டுத் துறையிலும் செயற்பட்டார். ஒட்டுமொத்தமாக அன்னாரின் இழப்பு தமிழ்ச் சமூகத்துக்குப் பேரிழப்பாகவே கருதலாம். ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!...

**- ஆசிரியர் -மண் சஞ்சிகை**

# கவி மீனா காலமானார்...



**பெயர் - கவி மீனா சிவலிங்கம்**
பிறப்பு - கொழும்பு , 01.09.1954
வாழ்ந்த இடம் - யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி
தந்தை, தாய் - நடராஜா, மனோன்மணி
கல்வி - ஆரம்பக்கல்வி -ஆனைப்பந்தி மெதடிஸ்
உயர்தரம் - யாழ் வேம்படி மகளீர் கல்லூரி
திருமணம் - 1977
பிள்ளைகள் - இரண்டு ஆண்பிள்ளைகள்.
தற்போதைய வாழ்விடம் - Hennef ,Germany
படைப்புகள் - கவிதை, சிறுகதை, கட்டுரை

உயர்தர கல்வியை கற்ற பின் வெளிவாரிபட்டப்படிப்பை தொடர்ந்தார். மேலும் தட்டச்சு,சுருக்கெழுத்து,ஆங்கிலம் போன்றவற்றையும் திறப்படக்கற்றார். ஆங்கில ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைந்து மன்னாரில் ஆசிரியர் வேலை வாய்ப்பு கிடைத்தும் குடும்ப சூழ்நிலையால் அதனை தவிர்த்துக்கொண்டார்.

1985ம் ஆண்டு யேர்மனிக்கு புலம்பெயர்ந்த பின் ஆரம்ப காலங்களில் நூல்கள் வாசித்தல், எழுதுதல் என்பவற்றில் ஆர்வத்தினால் வானொலிகள், சஞ்சிகைகளில் தன் படைப்புக்களை எழுதி வெளிப்படுத்தினார். ஐரோப்பாவில் இயங்கிய TBC வானொலி , லண்டன் தமிழ் வானொலி, ரி.ஆ.ரி வானொலி என தன் படைப்பாற்றலையும், நிகழ்ச்சிகளையும் செய்து வந்துள்ளார்.

லண்டன் தமிழ் வானொலியில் 15ஆண்டுகளாக இலக்கியநேரம் போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றிச் திறம்படச் செய்து வந்துள்ளார். இவரது பாடல்கள் திருமதி கலைவாணி ஏகானந்தராசா அவர்களால் இசையமைத்துப் பாடி இசைத்தட்டில் வெளியாகி வந்துள்ளமையும் குறிப்பிடதக்கதாகும். ராஜகருணா அவர்கள் வெளியிட்ட பிள்ளைத்தமிழ் இசைதட்டிலும் இவரது பாடலும் இசையமைத்து வெளிவந்துள்ளது.

மண், பூவரசு, தமிழ்நாதம் போன்ற பல சஞ்சிகைகளில் இவரது படைப்புகள் பல வெளிவந்துள்ளன. மண் சஞ்சிகையில் தொடர்ந்து 25 ஆண்டுகளுக்கு மேலாக எழுதி வந்திருக்கிறார்.

கடந்த ஒரு வருடகாலம் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த இவர் 10.02.2025 அன்று இறைவனடி எய்தினார் என்ற துயரச் செய்தி மண் சஞ்சிகையின் வாசகர்களையும் யோ்மனி மற்றும் ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர்களையும் கவலை கொள்ள வைத்துவிட்டது.

அமரர் கவி மீனா அவர்கள் ஒரு யதார்த்த எழுத்தாளராகவே கண்டுகொண்டுள்ளோம். சமகால இலக்கியங்களையும் சமூக துாரநோக்கையும் கருத்திற்கொண்டு பல் வேறு படைப்புகளைப் படைத்திருக்கின்றார்.மூடநம்பிக்கை, பெண்கள் உரிமை, சமூகச்சீர்கேடுகளை துல்லியமாக அடையாளம்கண்டு எழுதுவது அவரது சிறப்பான விடயமாகும்.

மண் சஞ்சிகையைப் பொறுத்தளவில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் பல்வேறு ஆக்கங்களை எழுதி வெள்ளி விழாக்கண்ட எழுத்தாளராவர். மண் சஞ்சிகையின் ஆண்டுவிழாப் போட்டிகளில் பல தடவைகள் பரிசுபெற்றுப் புகழ் சேர்த்தவர். கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகளில் பல தடவைகள் பங்குகொண்டிருக்கிறார். இவை மட்டுமல்ல தனது சொந்த முயற்சியாக 40 - 50 ”கவிமலர்” தயாரித்து இணைய வழியாக வெளியிட்டு இணையத்தள வாசிகளின் அறிவுப் பசியைத் தீர்த்தவர் என்ற பெருமைக்கும் உரியவர்.

இப்படியாக தமிழுக்கு அணி சேர்த்த எழுத்தாளரை இழந்தது தமிழுலகத்திற்குப் பேரிழப்பாகவே அமைந்துவிட்டது. அன்னாரின் மறைவால் கதிகலங்கி நிற்கும் அவரது துணைவர் பிள்ளைகளுக்கு எமது இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் தொழுதுகொள்கின்றோம்...

ஓம் சாந்தி.... **- ஆசிரியர் -**

---

## பெற்றோரைப் பாதுகாப்போம்!..





புலம் பெயர் நாடுகளில் உங்கள் பெற்றோர்களை பராமரிப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்கும் உங்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.. அதாவது உங்கள் பெற்றோர்களைப் பராமரிப்பதில் தமிழர்களால் பராமரிக்கப்படும் இல்லம் ஒன்று யோ்மனியில் இயங்கி வருகின்றது. தேவைப்படுவோர் இந்த இல்லத்தினருடன் தொடர்பு கொள்ளலாம். இந்த இல்லத்தின் செயற்பாடுகளை இந்த இணைய முகவரியில் பார்வையிடலாம்..

www.pflege-bergstrasse.de

Call No
06206937857

# மூத்த ஊடகவியலாளர் பாரதி மறைந்தார்...



**இராஜநாயகம் பாரதி (மூத்த ஊடகவியலாளர் )**
**பிறப்பு : 06-09-1962 - இறப்பு : 09-01-2025**

மூத்த தமிழ்ப் பத்திரிகையாளரும் “ஞாயிறு தினக்குரல்“ முன்னாள் ஆசிரியருமான பாரதி இராஜநாயகம் அவர்கள் 09.02.2025 காலமானார் அன்னாரின் மறைவு ஊடகத்துறைக்கு பேர் இழப்பாகும். அறிவுசார்ந்த மென்மையான ஒரு மனிதன் மறைவு தாங்க முடியாத துயரத்தை தருகின்றது. அவர் மனைவிக்கும், மகனுக்கும், உற்றார் உறவினர்கள் நண்பர்கள் யாவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும கொழும்பையும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் திரு இராஜநாயகம் பாரதி 09-02-2025 அன்று திருநெல்வேலியில் அவர் வாழ்ந்த இல்லத்தில் காலமானார் . அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல கணித ஆசிரியர் திரு சு .இராஜநாயகம் சிவயோகம் தம்பதிகளின் அன்பு மகனும் தேவகியின் அன்புக்கணவரும் பார்த்தீபனின் பாசமிகு தந்தையும் அமரர் பரதன் , சுரபி ஆகியோரின் அன்பு சகோதரனும் ப.விநோதினி, க.சிவராசா, சுகந்தி, கௌரி, காலஞ்சென்ற நளினி, பரன், பாமதி, சபேசன், பத்மநிதி, சுபேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார் .

பாரதி முதலிலும், அதன் பின்னரும் பணியாற்றிய யாழ். ஈழமுரசு மற்றும் முரசொலி ஆகியனவற்றின் பிரதம ஆசிரியராகவிருந்தவர். முரசொலி பத்திரிகை அலுவலகம் இந்தியப் படையினால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது. இந்தியப்படைகளின் விசாரணைகளையெல்லாம் சந்தித்த அனுபவம் மிக்கவர்தான் பாரதி. பின்னாளில் கொழும்புக்கு இடம்பெயர்ந்த அவர், வீரகேசரி பத்திரிகையில் துணை ஆசிரியராக இணைந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் நடந்த வாகன விபத்தொன்றில் தனது வலது கரத்தையும் முற்றாக இழந்து அவதியுற்றார். பின்னர் செயற்கையான கையைப் பொருத்திக்கொண்டு, தன்னம்பிக்கையுடன், ஒரு கரத்தினால், கணினியை இயக்கி செய்திகளையும், செய்திக் கட்டுரைகளையும் பதிவேற்றி வந்தார். அத்துடன் வெளியிலிருந்து கிடைக்கப்பெறும் ஆக்கங்களையும் செம்மைப்படுத்தினார்.

பாரதியும் கல்லூரிப் படிப்பினையடுத்து, தமது தந்தையாரைப் போன்று எழுத்தாளனாகவும் ஊடகவியலாளனாகவும் மாறினார். இவரது அண்ணன் பரதன், சிறந்த ஒளிப்படக்கலைஞர். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் செய்தி ஊடகப்பிரிவிலும், நிதர்சனம் தொலைக்காட்சியிலும் பணியாற்றியவர். சில வருடங்களுக்கு முன்னர் இங்கிலாந்து சென்று, அவரும் திடீரென மாரடைப்பு வந்து காலமானார்.

பாரதி , 1990 இற்குப்பின்னர் கொழும்பு வந்து வீரகேசரியில் முதலிலும் பின்னர் தினக்குரலிலும் பணியாற்றினார். அவ்வேளையில் தினக்குரலில் உதவி ஆசிரியராக பணியாற்றிய தேவகியை மணந்தார். இவர்களின் மகன் பார்த்தீபன் தற்போது கனடாவில். பாரதி, தினக்குரல் வாரப்பதிப்பின் ஆசிர-ியராக பொறுப்பேற்று நடாத்துகின்றார்.

பாரதி, பல புகலிட எழுத்தாளர்களின் படைப்புகளுக்கும் தொடர்ந்தும் தினக்குரலில் சிறந்த களம் வழங்கியவர். பாரதியின் திடீர் மறைவு அவர்களை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

சில வருடங்களுக்கு முன்னர் பாரதி கனடா தமிழர் தகவலின் விருதினை யும் பெற்றிருந்தார். ஜெனீவாவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தொடருக்காகவும் அங்கே சென்று, செய்திகளை உடனுக்குடன் அனுப்பிக்கொண்டிருந்தவர். தமிழ் ஊடகவியலாளர்களின் தேவைகைளுக்காகவும் உரிமைகளுக்காகவும் இயங்கி வந்திருக்கும் பாரதி , தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்திலும் முக்கிய பதவிகளை வகித்தவர்.சிங்கப்பூர், மலேசியா, தமிழ்நாடு எழுத்தாளர்களின் நேர்காணல்களுக்கும் இவர்தம் இலக்கிய பிரதிகளுக்கும் பாரதி, களம் கொடுத்து, ஊக்குவித்து வந்தவர். அதனால், பாரதியின் திடீர் மறைவு பேரிழப்பாகிவிட்டது.

பாரதி திடீரென சுகவீனமுறுவதற்கு முன்னர் பல மாதங்களாக தமிழக தொலைக்காட்சி காணொளிகளிலும் இலங்கை அரசியல் நிலவரம் பற்றிய செய்திகளை தொகுத்து வழங்கிக்கொண்டுதானிருந்தார்.. இறுதியாக வீரகே சரியின் வடபிராந்திய பதிப்பின் ஆசிரியராகப் பணிபுரிந்தவேளையிலேயே பாரதி , திடீரென சுகவீனமுற்று, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மறைந்துவிட்டார்.

பாரதி, யாழ் . ஈழநாடு , மாலைக்கதிர், தமிழர் பொருண்மியம், இதழ்களிலும் கிறீன் மீடியா ஊடக இல்லத்திலும் பணியாற்றியவர். தனது அர்ப்பணிப்புள்ள சேவையின் ஊடாக, சமூகத்தினை பேசவைத்தவர். சுமார் 28 ஆண்டுகாலம் ( 1997 - 2025 ) இலக்கிய மற்றும் ஊடகத்துறையில் சக பயணியாக உடன் வந்த பாசத்திற்குரிய சகோதரன் இராசநாயகன் பாரதிக்கு இதய அஞ்சலி. அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவருடை அன்பு மனைவி தேவகிக்கும் ஏக புதல்வன் செல்வன் பார்த்தீபனுக்கும் மற்றும் உலகம் வாழ் தமிழ் கலை, இலக்கிய ஊடகத்துறை நண்பர்களுக்கும் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!...





# கனடாவில் நடைபெற்ற தேர்தலில் இரு ஈழத்தமிழர்கள் அமோக வெற்றி...

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் இடம்பெற்ற தேர்தலில் ஈழத்தமிழர் இருவர் அமோக வெற்றியை பதிவு செய்துள்ளனர். ஒண்டாரியா மாகாண சபைத் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் டக் ∴போர்ட் தலைமையிலான புரோகிரஸிவ் கன்சர்வேடிவ் கட்சி வெற்றி மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ளது.

தேர்தல் முடிவுகளுக்கமைய புரோகிரஸிவ் கன்சர்வேடிவ் கட்சி 81 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது. என்.டி.பி. (NDP) 26 இடங்களைப் பெற்றுள்ளனர். இதன்மூலம் மீண்டும் எதிர்க்கட்சியாக செயற்படவுள்ளனர்.

**தேர்தல் வெற்றி :-**

லிபரல் கட்சி 14 இடங்களில் வெற்றி பெற்ற போதிலும், கட்சித் தலைவர் பானி க்ராம்பி (Bonnie Crombie) தனது தொகுதியில் தோல்வி அடைந்துள்ளார். இந்நிலையில் வெற்றிக்கூட்டத்தில் தனது ஆதரவாளர்களை சந்தித்த டக் ∴போர்டு, ஒன்டாரியோவை பாதுகாக்க ஒரு வலுவான, வரலாற்று சிறப்புமிக்க மூன்றாவது பெரும்பான்மை ஆட்சியை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

**மாகாண சபை:-** இதேவேளை இந்தத் தேர்தல் புரோகிரஸிவ் கன்சர்வேடிவ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட விஜய் தணிகாசலம், லோகன் கணபதி ஆகியோர் மீண்டும் மாகாண சபை உறுப்பினர்களாக தெரிவாகியுள்ளனர். இவர்கள் இருவரும் மூன்றாவது தடவையாகவும் மாகாண சபை உறுப்பினர்களாக தெரிவாகி உள்ளமை விசேட அம்சமாகும்.

**இருவர் பற்றி:--**

- லோகன் கணபதி தாயகத்திலேயே எனது நெருங்கிய நண்பர். ஒரே ஊரில் வசித்தோம். அவர் குடும்பத்தவர்களும் எனது குடும்பத்தவர்களும் நல்ல நட்போடு வாழ்ந்தோம்..
- விஜய் தணிகாசலம் இவரை 2019ல் நான் கனடா சென்றபோது அறிமுகமானார். அவரது கட்சியில் எனது உறவுக்காரன் ஒருவர் ஊடாக நான் அறிமுகமானேன்.

இருவரும் இள நட்சத்திரங்கள்தான். அரசியல் பொதுப் பணிகளில் மக்கள் மனதில் இடம் பிடித்தவர்கள். இருவரையும் வாழ்த்தி மகிழ்கின்றேன்..



## எதிர்பார்க்கப்படும் ஜேர்மனியின் புதிய கான்ஸ்சிலர் பிரெட்ரிக் மெர்ஸி
## ஜேர்மனி பாராளுமன்றத் தேர்தல் முடிவு - 2025

ஜேர்மனியில் புதிய கான்ஸ்சிலர் தெரிவு பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்யை பெறவில்லை. ஆதலால் மீண்டும் கூட்டாட்சிதான் பதவி ஏற்கவேண்டிய நிலை தோன்றியிருக்கின்றது. இனி எந்தக் கட்சி யார்?..யாருடன் சேர்ந்து ஆட்சி அமைப்பார்கள் என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

வெளிநாட்டவர்களுக்கு எதிரான வலதுசாரி தீவிரவாதக் கட்சி AfD சென்ற தேர்தலைவிட 10.4 வீத வாக்குகளை அதிகமாகப் பெற்றிருக்கின்றது. ஜேர்மனிய தேர்தல் வரலாற்றில் FDP கட்சியானது ஒரு இடத்தையும் கூட வெற்றி பெறாமல் வரலாற்றுத் தேர்தல் தோல்வியைப் பெற்றிருக்கின்றது.

2025-02-23ம் திகதி ஜேர்மனியின் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்தது. ஆட்சியிலிருந்த SPD கூட்டணி தோல்வி கண்டுள்ளது. ஜேர்மன் சேன்சலர் ஆவார் என எதிர்பார்க்கப்பட்ட அரசியல்வாதி பிரெட்ரிக் மெர்ஸி வெற்றிபெற்றுள்ளார்.

அத்துடன், புலம்பெயர்தல் எதிர்ப்பு வலதுசாரிக் கட்சியும் எதிர்பார்த்ததுபோலவே இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. ஜேர்மன் சேன்சலர் ஆவார் என எதிர்பார்க்கப்பட்ட பிரெட்ரிக் மெர்ஸின் CDU/ CSU கூட்டுக்கட்சி, 208 இருக்கைகளைப் பெற்றுள்ளது. அது 28.6 சதவிகித ஆதரவைப் பெற்றுள்ளது.

புலம்பெயர்தல் எதிர்ப்பு வலதுசாரிக் கட்சியான AfD 151 இருக்கைகளைப் பெற்றுள்ளது. அது 20.8சதவிகித ஆதரவைப் பெற்றுள்ளது. ஜேர்மன் சேன்ஸரான ஒலா∴ப் ஷோல்ஸின் SPD கட்சிக்கு 121 இருக்கைகள் கிடைத்துள்ளன. அக்கட்சி 16.4 சதவிகித ஆதரவைப் பெற்றுள்ளது.

ஆட்சியில் இடம்பெற்ற Greens கட்சிக்கு 85 இருக்கைகளும், The Left (Die Linke) கட்சிக்கு 64 இருக்கைகளும், BSW கட்சிக்கு 1 இருக்கையும் கிடைத்தன..
பிரெட்ரிக் மெர்ஸ் ஜேர்மனியின் அடுத்த சேன்ஸலராக பதவியேற்க இருக்கும் நிலையில், FDP கட்சி 5 சதவிகித வாக்குகளைக் கூட பெறாததால், அக்கட்சியின் தலைவரான Christian Lindner தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டார்.

## ஃப்ரெட்ரிக் மெர்ஸ் யார்? (வருங்கால கான்ஸ்சிலர்)

ஃப்ரெட்ரிக் மெர்ஸ் நவம்பர் 11, 1955-ஆம் ஆண்டு ஜேர்மனியின் பிரிலான் நகரில் பிறந்தார். சட்டவியல் குடும்ப பின்னணியுடன் law படித்த அவர், 1972-ஆம் ஆண்டில் CDU கட்சியில் இணைந்தார். அவர் 1994-இல் பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார் மற்றும் 2000-இல் CDU-வின் பாராளுமன்றத் தலைவராக ஆனார்.

ஆனால் 2002-இல் அந்த அந்தஸ்தை ஏஞ்சலா மெர்கெலிடம் இழந்தார். பின்னர் 2009-இல் அரசியலை விட்டு விலகி சட்டம் மற்றும் நிதித் துறையில் சாதனை படைத்தார். 2018-இல் மீண்டும் அரசியலுக்கு திரும்ப முயன்றார், ஆனால் வெற்றி பெறவில்லை. 2022-இல் CDU கட்சித் தலைவராக பதவியேற்றார். கடின குடியேற்றக் கொள்கை, மிகுந்த பொருளாதார வளர்ச்சி போன்ற கொள்கைகளை வலியுறுத்தும் மெர்ஸ், ஜேர்மனியின் புதிய அரசியலுக்கு வழிகாட்டவிருக்கிறார்.

## தேர்தல் முடிவுகள்..

பாராளுமன்ற உறப்புபினர்களின் தொகை - 630
புதிவான வாக்காளர் தொகை - 6.04.90.603
வாக்களித்தோர் - 4.96.42.087
வாக்களிப்பு வீதம் - 82.5

கட்சிகளின் நிலை

| கட்சி - | பெற்ற இடங்கள் - | வீதம் - | கூடுதல்-குறைதல் வீதம் |
|---|---|---|---|
| CDU+CSU | - 208 | - 28.5% | + 4.4% |
| A&D | - 152 | - 20.8% | + 10.4% |
| SPD | - 120 | - 16.4% | - 9.3% |
| Grüne | - 85 | - 11.6% | - 3.1% |
| Linke | - 64 | - 8.8% | + 3.9% |
| SSW | - 01 | - 4.9% | + 4.9% |

## தாயகச் செய்திகள் சில....

15.01.2025- 2016 - 2024வரை வடமாகாணத்தில் 78.375 வெடிபொருட்கள் அகற்றப்பட்டதாக கண்ணிவெடி அகற்றும் தொண்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

18.01.2025- கடந்த ஐந்து ஆண்டுகளில் வீதி விபத்துகளால் 12.140 பேர் பலி

21.01.2025- 2024ம் ஆண்டில் 20.53.465 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்திருப்பதாக சுற்றுலாத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

25.01.2025- இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் பெண்களின் அங்கத்துவம் 9.3 வீதமாக அதிகரித்திருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

27..01.2025- முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட மக்களில் 50 வீதத்தினருக்கு மின்னஞ்சல் பாவனை தெரியாது என ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

29.01.2025- சிறுவர் துஸ்பிரயோகம் குறித்து கடந்த ஆண்டில் 8.746 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன என அரசு அறிவித்துள்ளது.

31.01.2025- மதுபாவனையால் நாட்டில் நாள் ஒன்றிற்கு 40 - 50 பேர் இறப்பு வருடாந்தம் 15.000 - 20.000 இறக்கிறார்கள் என சுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர்.

02.02.2025- 2019 - 2024 காலப்பகுதியில் வீதி விபத்துகளால் நாட்டில் 12.182 பேர் பலி. 2025 தை மாதத்தில் 149 விபத்துகளில் 156 பேர் பலி.

04.02.2025- 77வது சுதந்திர தினத்தில் 6 பெண்கள் உட்பட 285 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

07.02.2025- 2015 - 2024 காலத்தில் 3.477 யானைகளும் 1.190 மனிதர்களும் இறந்திருப்பதாக வனவிலங்குத் திணைக்களம் அறிவித்தது.

10.02.2025- நாட்டில்நிலவிய பொருளாதார நெருக்கடியால் சுமார் 5.000 வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். 3.40.000 பேர் வேலை வாய்ப்புத் தேடியும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

15.02.2025- நாட்டில் வருடாந்தம் சிறுநீரக நோயினால் 10.000 பேர்வரை இறப்பு. தற்போது நாட்டில் 2 லட்சம் நோயாளர்கள் காணப்படுகிறார்கள்.

18.02.2025- தற்போது நாட்டில் 16 லட்சம் அங்கவீனர்கள் காணப்படுவதாகவும் இவர்களில் 9 லட்சம் பேர் கண் பார்வையற்றவர்களாவர்.

20.02.2025- இலங்கையில் தாய்-தந்தையரை இழந்த குழந்தைகளின் எண்ணிக்கை 28.000 பேர் என அமைச்சு அறிவித்தது.

22.02.2024- கடந்த வருடத்தில் 1.84.926 நாய்க்கடிச் சம்பவங்கள் நடைபெற்றது.

24.02.2025- ஆண்டுதோறும் 2000- 3000பேர் வாய்ப்புற்று நோயாளர்கள் அடையாளம். தினமும் 3 - 4 பேர் இறப்பு என சுகாதார அமைச்சு தெரிவிப்பு.

25.02.2025- மன்னார் மாவட்டத்தின் புதிய ஆயராக அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார்..

26.02.2025- காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் அமைப்பினரின் போராட்டம் 3.000 நாட்களையும் கடந்துள்ளது. தீர்வு கிடைக்கவில்லை.

27.02.2025- இலங்கைப் படைகளிலிருந்து 12.000 பேர் விலகி ஓடியுள்ளனர் என படைத்தரப்பினர் அறிவித்துள்ளனர்.

28.02.2025- 25.000 இலங்கையர்கள் தமது இறப்புக்குப்பின் தமது கண்களை தானம் செய்வதற்கு முறைப்படி பதிவு செய்துள்ளனர்.

## உலகச் செய்திகள் சில...

18.01.2025- நைஜீரியாவில் ஆயுதக் குழு ஒன்றினால் 40 விவசாயிகள் சுட்டுக் கொலை. இன்னோரு எண்ணெய் தாங்கி வெடி விபத்தில் 70 பேர் பலி.

20.01.2025- அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக மீண்டும் டொனால்ட் ட்ரம் பதவி ஏற்றார்.

22.01.2025- 2023 அக்டோபர் 7ம் திகதி ஆரம்பித்த இஸ்ரேல் காஸா போரால் 50.000 பலஸ்தீனர்கள் படுகொலை. 2 லட்சம்பேர் வரை காயம்.

25.01.2025 - 2040ம் ஆண்டளவில் உலகப் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 30 மில்லியன் பேராக உயரும். ஐ.நா.சுகாதார சேவை தெரிவிப்பு.

28.01.2025- ஆபிரிக்கா கொங்கோ நாட்டில் கலவரம் 700 பேர்வரை பலி

02.02.2025- உலகில் 5 - 17 வயது 153 மில்லியன்குழந்தைகள் தொழிலாளர்கள். 73 மில்லியன் பேர் அபாயகரமான தொழிலாளர்கள் என ஐ.நா.சபை தெரிவிப்பு.

05.02.2025- சுவீடனில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் 11 பேர் பலி.

08.02.2025- அமெரிக்காவில் தற்போது 78 லட்சம் சட்டவிரோத குடியேற்ற வாசிகள் காணப்படுகின்றனர். இதில் இந்தியர்கள் 8 லட்சம்பேர். படிப்படியாக அவர்களைத் திருப்பி அனுப்பும் வேலையை அரசு முன்னெடுத்துள்ளது.

10.02.2025- காற்று மாசுபடுவதால் வருடாந்தம் 7 மில்லின்பேர்வரை இறப்பு.

15.02.2025- 2024 - 2025 தை வரை பங்களாதேஷ் கலவரங்களில் 1.400 பேர் பலி.

## மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும் கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்று உதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1- திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலானி (பி.தி 10.04.2014)
குருபவராசா ரேணுஸ்றியா (பி.தி 03.08.2012)
றொனி டிலக்சனா (பி.தி 03.08.2014)

........................................................................................................................

2- திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- ஜெகஸ்ரீன் மதுசாளினி(பி.தி 02.04.2013)

........................................................................................................................

3- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுவோர்.. -திலக்சிகா கோடீஸ்வரன்(பி.தி 12.05.2008)
மதுஸா சுந்தரலிங்கம் (பி.தி 01.01.2008)

........................................................................................................................

4- திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம்- தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. -கதிர்விழி சகாயநாதன் (பி.தி 09.05.2008)

........................................................................................................................

5- திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
சிறீ அகிலாண்டேஸ்வரி ”அருளகம்” - வவுனியா
உதவி பெறுவோர்.. - இ. அபிராமி (பி.தி 14.11.2002)

........................................................................................................................

6- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)

........................................................................................................................

7- திரு Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)

........................................................................................................................

8- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 )

------------------------------------------------------------------------------------------------------------------------.

- பொறுப்பெடுத்தவர்கள் 8 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)

- உதவி பெறுவோர் 12 பிள்ளைகள் (தாயகம் - சிறீலங்கா)

------------------------------------------------------------------------------------------------------------------------

**மா ஜெயசீலன்.**

**வெவண்டன் தோட்டம்**

**இறம்பொடை 22-01-2025.**

மதிப்பிற்குரிய மண் சஞ்சிகை ஆசிரியர் அவர்களுக்கு,மண்சஞ்சிகை வாசகர்களின் நிதிஉதவியின் மூலம் தங்களால் எமக்கு வழங்கப்பட்ட ரூபா 50,000 பணத்தொகையைக் கொண்டுஇந்த ஆண்டின் தைப்பொங்கல் தமிழர்திருநாளை வெவண்டன் தோட்ட பொதுமக்கள் நாங்கள் இணைந்து வெகுவிமர்சையாக கொண்டாடினோம் என்பதை மகிழ்வோடுதெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களைப் போன்றோர்களின் சேவைமனப்பாங்கு இங்குள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு பெரும் மனநிறைவைக் கொடுத்தது என்பதை உளமாரத் தெரிவிப்பதில் நானும் கடமைப்பட்டுள்ளேன்.

எனவே தங்களைப்போன்ற கொடுக்கும் பெரிய மனதுடையவர்களின் உதவி களை இப்பகுதி தோட்டத்தொழிலாளர்கள் தொடர்ந்தும்பெரிதும் வேண்டிநிற்கின்றோம் என்பதனை பணிவோடு தெரிவித்துக்கொண்டு, இப்புத்தாண்டு தங்களுக்கு நோயற்ற வாழ்வையும், நிறைந்த செல்வத்தையும வழங்க வேண்டுமென்று இறைவனையும் வேண்டிக்கொண்டுவிடைபெறுகிறேன்..

. நன்றிகள்!.. ஐயா.....

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-01-2025 + 498-61

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
03. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
04. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
05. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen +100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு-
06- திரு பொ மகாலிங்கம் - Oberhausenen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
08- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
09- திரு ரகுப்பிரியன் ஏகானந்தராசா - Duisburg+ 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
10- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf+ 240-00
(ஆதரவற்றசிறார் ஒருவரின்வருடாந்த கல்விக்கானஅன்பளிப்பு)
11- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim+ 400-00
( நல்லாயன் சிறுவர் இல்லம் கல்வி மேம்பாட்டு உதவி) -------------
\+ 1.380-00 +1380-00
---------------
\+ 1.878-61

அன்பளிப்புகள்...
12- திரு கிறிஸ்ரி அமலதாஸ் London + 200-00
(மருமகளின் நினைவு உதவி)
13- திருமதி இந்திர மகாலிங்கம் Werne +100-00
(தந்தையாரின் நினைவு உதவி)
14- திரு காந்தரூபன் சிவலிங்கம் Mülheim +400-00 + 700-00
(தாய் மீனா நினைவு உதவி)

---------------
\+ 2.578-61

முற்பக்கப்படி + 2.578-61

**அனுப்பியது...**

ரூபா யூரோ

1) 20.01.2025
"ஒளிரும் இல்லம்"மல்லாவி-துணுக்காய் 58.564-28 - 200-00
(அமல் மருமகள் நினைவு - லண்டன்)
"ஒளிரும் இல்லம்"மல்லாவி-துணுக்காய்
04.02.2025 1.81.608-39 - 600-00
(பிங்கலை வருடாந்த கல்விக் கொடுப்பனவு
"ஒளிரும் இல்லம்"மல்லாவி-துணுக்காய்
26.02.2025 1.45.785-15 - 480-00
(சிவதர்சினி வருடாந்த கல்விக் கொடுப்பனவு

2) "சாந்தோம்" முதியோர்இல்லம்- மன்னார் 30.000-00 - 105-03
(04.02.2025இந்திராமகா தந்தைநினைவுநாள்-Werne)
( 28.2.2025மீனா சிவலி மகன் காந்தரூபன்) 58.787-57 -200-00

3) நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம்1.21.204-00 -400-00
(28.02.2025 மேரி + மங்கை கல்வி நிதி உதவி)

4) ஒளிரும் வாழ்வகம் - புதுக்குடியிருப்பு

(28.2.2025 மீனா-சிவலி மகன் காந்தரூபன்) 58.768-33 -200-00

5) இந்து அன்பகம் சிறுவர் காப்பகம் - வவுனியா
26.02.2024 -1.36.506-83 - 450-00
28.02.2025 - 80.164-87 - 270-00 2.16.671-70 -720-00

...............
- 2.905-03 - 2.905-03
------------------
- 326-42

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி

01.01.2025 - 31.01.2025 - 22-59
01.02.2025 - 28.02.2025 - 21-19............................................ - 43-78

-----------------------
28.02.2025 மீதி கையிருப்பு **மேலதிகச் செலவு** + 370-20
-----------------

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

T.P:- 0212060620 Farm No:-0213204790 Mobile:-0774868085
Fax:-0774868085 Viber:-0774868085

No:- MU/DS/TNK/RVSS/22/2015

திகதி-05/02/2025

திரு வை. சிவராஜா,
பிரதம ஆசிரியர்,
மண்கலை சஞ்சிகை,
யேர்மனி,

**அன்புடையீர்!**

**பாடசாலை மாணவர்களுக்கான கல்வி உதவி வழங்கியதற்கான நன்றிநவிலல்**

மேற்படி விடயம் தொடர்பாக 04.02.2025 அன்றைய தினம் எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட ரூபாய் (181.608. சதம்38) ஒரு லட்சத்து எண்பத்தோராயிரத்து அறுநூற்று எட்டு முப்பத்தொன்பது சதம் ரூபாய் அனுப்பியிருந்திருகள் பணம் கிடைத்ததை தெரியப்படுத்திக்கொள்கின்றோம்.

அத்தோடு மூன்று மாணவர்களுக்கான வருடாந்த கல்வி உதவியினை வழங்கிய யேர்மனி நாட்டைச்சேர்ந்த திருமதி பிங்கலை செந்திலன் அவர்களுக்கு எமது அமைப்பின் சார்பில் பேருவகை நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இவ் உதவியினை பெற்றுத்தந்த மண்கலை, கல்வி, இலக்கிய, சமூக சஞ்சிகை யேர்மனி தொண்டு நிறுவனத்தினருக்கும் எமது மனம் நெகிழ்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு:-
தங்களால் வழங்கப்பட்ட பணத்தினைப் பெற்றுக்கொண்டமைக்கான எமது அமைப்பின் 4019ம் இலக்க பணவரவுப் பற்றுச்சிட்டை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**"தங்களின் உதவிக்கும் ஆதரவிற்கும் என்றும் எமது நன்றிகள்"**

**இவ்வண்ணம்,**
சி.சிவரூபன்
**சி.சிவரூபன்.**
**தலைவர்,**
**ஒளிரும்வாழ்வு அமைப்பு.**
**துணுக்காய்.**

**"ஒளிமயமான வாழ்வு"**

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015 T.P:- 0212060620 Fax:-0774868085 FarmNo:-0213204790 Viber:-0774868085 Mobile:-0774868085

திகதி-16/01/2025

திரு. சிவராஜா
மண் கலை கலாச்சாரசேவைகள்
ஜேர்மனி

## நன்றி நவிலல்.

எங்களது கோரிக்கையை ஏற்று 2025ம் ஆண்டுக்கான பொங்கல் பானை வழங்குவதற்கு தாங்கள் உதவியமைக்கு எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.

பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு தங்கள் மூலம் உதவ முடிந்தமைக்கு எமது மன நிறைவையும் வாழ்த்துக்களையும் தங்களுக்கு சிரம் தாழ்த்தி தெரிவித்துக் கொள்கின்றோம்.

எம்முடன் இணைந்து பயணிக்கும் கருணையுள்ளம் கொண்ட தங்களுக்கு நாம் என்றும் நன்றி உடையவர்களாக இருப்போம்.

குறிப்பு:-

தங்களால் வழங்கப்பட்ட பணத்தினை பெற்றுக்கொண்டமைக்கான எமது அமைப்பின் 4001- இலக்க பணவரவு பற்றுச்சீட்டை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

சி.சிவரூபன்
.......................

தலைவர்,

சி.சிவரூபன்.

ஒளிரும்வாழ்வு அமைப்பு,

துணுக்காய்.

"ஒளிமயமான வாழ்வு"

www.olirumvaalvu.com olirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai

**Good Shepherd Child Development center,**
**Mullai Road, Mankulam,**
**Srilanka.**
E-mail – mankulamcdc@gmail.com
Tel. No. – 0212060077/+94 775924582

Date: 22.01.2025

அன்பின் மண் சஞ்சிகை உறுப்பினர்கள் அனைவருக்கும் புதிய வருடத்தின் நிறைந்த ஆசீர்களையும் வாழ்த்துக்களையும் கூறி நன்றி நிறை உள்ளத்துடன் வரைவது,

முதற்கண் தாமதமாக இக்கடிதங்களை அனுப்புவதற்காக மன்னிப்பு வேண்டுவதுடன் எமது பகுதிகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான காலநிலை மாற்றத்தினால் வெள்ளம் நோய்கள் காரணமாக கடிதங்களை உரிய நேரத்தில் அனுப்ப முடியாமல் போனது என்பதை தெரிவித்து கொள்கின்றோம்.

பெரும் உள்ளம் கொண்டவர்களாக சமூக நலன் கருதி கடல் கடந்து வாழ்ந்தாலும் பிறந்த மண்ணில் வாழும் உறவுகளுக்கு உதவிக்கரம் கொடுத்து உதவ வேண்டும் என்ற துடிப்புடன் தொடர்ச்சியான நிதி உதவி செய்து ஒத்துழைத்த என் அன்பு நெஞ்சங்களே! 2024ம் ஆண்டில் எம் நல்லாயன் இல்லத்திற்கு உதவிக்கரம் தந்து உறுதுணையாக நின்ற உங்கள் ஒவ்வொருவரையும் மடல் மூலம் சந்தித்து நன்றி கூறி பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த ஆண்டில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கி இல்லத்தின் செயற்பாடுகள் தடையின்றி நிறைவேற்ற மிக முக்கியமாக பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்க நிதிப்பலம் தந்த உங்களுக்கு எமது நன்றிகள். பலர் வாழ்வு வளம் பெற நிதி உதவி வழங்க நீங்கள் செய்யும் கடும் உழைப்பும் தியாகமும் சொல்லில் வடிக்க முடியாது என்பதை நாம் அறிவோம். உங்கள் மக்கள் சேவை மகத்தானது. இதனால் பல சிறார்கள் பாதுகாப்பாக கல்வியிலே கரை காண நீங்கள் ஊன்றுகோலாக இருந்துள்ளீர்கள்.

2024.12.16 திருமதி மேரி விஜயகுமார் மற்றும் திருமதி மங்கையற்கரசி சிவராசன் அவர்கள் மண்சஞ்சிகை அமைப்பினூடாக அனுப்பிவைத்த ரூபா 118888.25 சதம் (400 யூரோ) எமக்கும் கிடைத்தது. இந்நிதியை இவ்வருடம் சாதாரணதரப் பரீட்சை எழுதும் மாணவர்களின் மேலதிக வகுப்புகளுக்காக பயன்படுத்துகின்றோம். பாடசாலை விடுமுறை என்றபடியால் சிறுவர்களில் சிலர் வீடுகளுக்கு சென்றிருந்த படியால் O/L பரீட்சை எழுதும் மாணவர்களை பரீட்சைக்கு தயார் படுத்தினோம். இத்தொகைக்கான கணக்கறிக்கைகளை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம்.

உங்களின் நிதிப்பலம் ஒன்றுதான் எங்களது இல்லத்தின் சிறுர்களின் கல்விக்கு பங்காற்றுகின்றது. எனவே தொடர்ச்சியான நிதிப்பலத்தை தந்து ஒத்துழைக்கும் படி தாழ்மையாக கேட்டு நிற்கின்றோம். உங்களின் தாரான உள்ளத்தை இறைவன் நிறைவாக ஆசிர்வதித்திட தொடர்ந்து உங்களுக்காக மன்றாடுகின்றோம். உங்களின் உதவிக்கரத்தினால் பல சிறுவர்களின் வாழ்வு ஒளிமயமானதாக அமைய சமூக அக்கறை கொண்ட உங்கள் சேவை வளர்ச்சியடைய நீங்கள் எடுக்கும் முயற்சி வெற்றி அளிக்க இறைவன் உங்களுக்கு உடல் உள நலன் தந்து காத்திட வேண்டும் என்று ஆசித்து நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

இப்படிக்கு,
என்றும் உங்கள் அன்பு சேவையை மறவாத,
பிள்ளைகள் மற்றும் அருட்சகோதரிகள்.

# அமுதசுரபி

## இந்திராணி மேழிக்குமரன் அறக்கட்டளை நிதியம்

## INDRANI MEZHIKUMARAN TRUST FUND

**(AMUTHASURABI)**

57/59, 3ம் ஒழுங்கை, வெளிக்குளம், வவுனியா, இலங்கை.
57/59, 3rd LANE, VELIKULAM, VAVUNIYA, SRI LANKA.

பதிவு இல: VA/LA/T/RE.816 தொ.பே.இல: +94 77 4248267


**தலைவர்**
கலாபூஷணம், தமிழ்மணி, முனைவர்
கதிர்ப்பிள்ளை அருந்தவராஜா
(மேழிக்குமரன்)

**உப தலைவர்**
திரு.இராமசாமி இராஜேஸ்வரன்

**செயலாளர்**
திருமதி.சந்திரகுமாரி இராஜேஸ்வரன்

**உப செயலாளர்**
செல்வி. வனிதா சேனாதிராஜா

**பொருளாளர்**
திரு.ஆறுமுகம் அருளானந்தம்

**செயற்குழு உறுப்பினர்கள்**
திரு.இந்திரன் சஜீந்திரா
திருமதி.சுபாசினி ஜெயசங்கர்
திரு.நடராஜா மதிகரன்
திரு.அந்தோனி பிரான்சிஸ்
திருமதி.லோகேஸ்வரி விஜயகுமார்
திருமதி.பேரிகுணா ரூபன்

**ஆலோசகர்கள் :**
திரு.தம்பிராஜா சிவகுமாரன் (தமிழருவி)
திரு.நடராஜா பார்த்தீபன்
திரு.இராஜகோபால் தேசிகன்
திரு.கொன்ஸன்டைன் சகாயராசா (பாபு)
திரு.லோகநாதன் வாகீசன்


31-01-2025

மண் சஞ்சிகை

ஆசிரியர் வ.சிவராசா

ஊடாக

ஜேர்மனி

புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு

சர்வதேச நற்பணி ஒன்றியம்

மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்குவதற்கான உதவி தொடர்பாக...

அன்புடையீர்! வணக்கம்

அமுதசுரபி அறக்கட்டளையினராகிய நாங்கள் வவுனியாவில் உள்ள சிதம்பரநகர், சிதம்பரபுரம், மதுராநகர், கற்குளம் 1-2 ஆகிய ஐந்து கிராமங்களில் "எழுச்சியின் கரங்கள்" என்னும் பெண்கள் வட்டத்தினை உருவாக்கி கடந்த ஆறு வருடங்களாக செயலாற்றி வருகின்றோம்.

இக்கிராமங்களில் உள்ள மாணவர்களுக்கு வருடாவருடம் ஒரு வருடத்திற்கு தேவையான கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றோம். இவ்வருடமும் 265 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இம்மாணவர்கள் வ/நாகராஜா வித்தியாலயம், வ/கோமரசங்குளம் மகாவித்தியாலயம், வ/முருகனூர் சாரதா வித்தியாலயம், வ/கல்லாண்டகுளம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயில்கின்றனர்.

இதில் தாங்கள் மண்சஞ்சிகையூடாக அனுப்பிய 88598.25 ரூபாய்கள் கிடைக்கப் பெற்றோம். இப்பணம் 265 மாணவர்களின் கற்றல் உபகரணங்கள் வாங்கிய செலவில் சேர்க்கப்பட்டுள்ளது. தங்களது இவ்வுதவி எம் மாணவர்களுக்கு பேருதவியாகும். எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

க.அருந்தவராஜா

தலைவர்

அமுதசுரபி அறக்கட்டளை

"கரங்களைக் கொடுத்து தரங்களை உயர்த்துவோம்"

வங்கிக் கணக்கிலக்கம்: INDRANI MEZHIKUMARAN TRUST FUND
100880331104 தேசிய சேமிப்பு வங்கி (NSB - VAVUNIYA)

**”மண்”கல்வி,கலை,இலக்கிய,சமூக சஞ்சிகை-யேர்மனி**
( ஆரம்பம் - 1990 )
“ERDE” e.V. Stiftung &Tamilisches Magazin - Deutschland
“MANN” (Earth) Foundation & Tamil Magazine - Germany
AmWindhövel-18a, 47249-Duisburg
Tel 49 203 8073898 , 49 15254799233 Emai v.sivarajah @ arcor.de

---

## Mann (ERDE) Magazine 35 Jahr Jubiläum - 2025

## மண் சஞ்சிகையின் 35வது ஆண்டு நிறைவுவிழா – 2025

(1990 - 2025)

யேர்மனியில் வெளிவந்துகொண்டிருக்கும் „மண்“ கல்வி, கலை, இலக்கிய, சமூக சஞ்சிகையின் 35வது ஆண்டு நிறைவுவிழா டியூஸ்பேர்க் நகரில் சிறப்பாக நடைபெறவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

காலம்:- 05.04.2025 சனிக்கிழமை - பகல் 14-30 மணி

இடம்:- Clauberg Halle Kampstrass-23 47166-Duisburg-Hamborn

### நிகழ்வுகள்

- மழலைகள் நிகழ்வுகள் - இளையோர் நிகழ்வுகள்
- மாணவர் நிகழ்வுகள் - வயலின், வீணை நிகழ்வுகள்
- கிராமிய நடனங்கள் - பரதநாட்டியங்கள்
- ஆடல் பாடல் நிகழ்வுகள் - மேலத்தேச நடனங்கள்
- கவியரங்கம் - பட்டிமன்றம்
- சொற்பொழிவுகள் - சிறப்புரைகள்
- எழுத்தாளர்கள் கௌரவிப்பு - ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு
- கலைஞர்கள் கௌரவிப்பு - சமூகசெயற்பாட்டாளர்கள் கௌரவிப்பு
- மனிதநேயச் செயற்பாட்டாளர்கள் கௌரவிப்பு - இன்னும் பல நிகழ்வுகள்

மாணவமணிகளே!..வாசகர்களே!..எழுத்தாளர்களே!..கலைஞர்களே!..நண்பர்களே!.

நலன்விரும்பிகளே!..மனிதநேயச் செயற்பாட்டாளர்களே அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்....

பிரதம ஆசிரியர் – 15.01.2025

மண் கல்வி,கலை,இலக்கிய,சமூக சஞ்சிகை - யேர்மனி








மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதி உதவிகளால் மழைவெள்ள நிவாரண
உணவுப்பொதிகள் வழங்கல் புதுக்குடியிருப்பு - 13.12.2024




மண் சஞ்சிகையின் வாசகர்களின் நிதி உதவிகளால் தைப்பொங்கல்
உணவுப்பொதிகள் வழங்கல் மட்டக்களப்பு - 14.01.2025

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

**MANN**
**Germany / Ausgabe 230**




**அனைவருக்கும் மண் சஞ்சிகையினரின் இனிதான சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துகள்**

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |